Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20 ரூபா 13/50

மே. 13-19, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 407

## மீண்டும் தலைதூக்கும் பேரினவாதம்

## மாவனெல்லையில் வெறியாட்டம்!



# முரசம்

## சட்டம் செய்த தவறு

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

பேரினவாதப் பேயின்
மற்றொரு வெறியாட்டம்
மாவனெல்லை நகரில் கடந்த வாரம்
அரங்கேறியது.

முஸ்லிம்களுக்குச் சொந்தமான
வியாபாரஸ்தலம் ஒன்றுக்குள்
புகுந்த பெரும்பான்மையினத்தைச்
சேர்ந்த இருவர்
கப்பம் கேட்டுக் கிடைக்காததால்
ஏற்பட்ட தகராறே
மாவனெல்லையில் மூண்ட
கலவரத்தின் ஆரம்பம்
எனக் கூறப்படுகின்றது.

அந்தப் பெரும்பான்மை இனக்
'கொள்ளை'யர்கள் இருவரும்
பிரதேசத்தில் அதிகாரம் மிக்க
அரசியல்வாதி ஒருவரின்
கையாட்கள் என்பது மற்றொரு செய்தி.

இந்தக் கலவரத்தில் முஸ்லிம்களுக்கு
உயிரிழப்பும் பெருவாரியான
பொருட் சேதமும் ஏற்பட்டுள்ளது.

இனங்களுக்கிடையிலான ஒற்றுமை
ஐக்கியம், சமாதானம், சகவாழ்வு
என்றெல்லாம் முன்னெப்போதும்
இல்லாத அளவுக்கு விழிப்புணர்வும்
விவாதங்களும் நடைபெறும் இன்றைய
கால கட்டத்தில் இத்தகையதொரு
சம்பவம் இடம் பெற்றிருப்பது
வேதனைக்குரியது மட்டுமன்றி
விசனத்துக்குரியதும்கூட!

ஒரு கறுப்பு ஜூலையின்
தாக்கத்திலிருந்து இந்த தேசம்
இன்னமும் மீளவில்லை.

இந்நிலையில் இனங்களுக்
கிடையிலான ஒற்றுமையும்
புரிந்துணர்வும் வளர்க்கப்படவேண்டும்
என்ற கருத்து வலுப்பெற்று வரும்
நேரத்தில் பேரினவாதம்
அதன் அக்கினிக் கரங்களை
சிறுபான்மை இன மக்கள்மீது
மீண்டுமொரு முறை நீட்டியுள்ளது.

இதற்கொத்த சம்பவம் ஒன்று
கடந்த வாரத்தில் யாழ்ப்பாணத்திலும்
இடம் பெற்றுள்ளது.
யாழ் நகரில் வசிக்கும் முஸ்லிம்கள்
சிலர் தாக்கப்பட்டுள்ளனர்.
தமது சொந்த இடங்களை விட்டு
வெளியேறி ஒரு தசாப்தத்தின் பின்னர்
அங்கு சென்ற
யாழ். முஸ்லிம்கள் தாக்கப்பட்டது
கவலை தருகிறது.

இத்தகைய சம்பவங்கள்
முளையிலேயே கிள்ளியெறியப்பட்டு
சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்
படாதவிடத்து அபாயகரமான
நிலைமை தோன்றும் என்பதில்
சந்தேகமில்லை.

மூவின மக்களும்
சம அந்தஸ்துடன்
ஒற்றுமையாக வாழ வேண்டும்
என்று அரசாங்கம்
ஒவ்வொரு நாளும் சொல்லி வருகிறது!

ஆனால் பேரினவாதிகளின்
செயற்பாடு தலைகீழாகவே
இருக்கிறது.

அண்மைக்காலங்களாக
வடக்கு, கிழக்குக்கு
வெளியிலும் சிறுபான்மை
சமூகத்தினர் மீதான வன்முறைகள்
அதிகரித்து வருவதை அவதானிக்க
முடிகிறது.

இதற்கு பிரதான காரணம்
'நாம் தண்டிக்கப்பட மாட்டோம்'
என்ற வறட்டு தைரியம்தான்!
ஏனெனில் எந்தக் குற்றத்தை
எவருக்கு எதிராக மேற்
கொண்டாலும் தண்டனையில்
இருந்து ஏதோ ஒரு வழியில்
தப்பித்து விடலாம் என்ற கருத்து
இன்று பலரிடம்
வேரூன்றியுள்ளது.

இந்த நிலமை மாற்றியமைக்கப்படா
விட்டால்
இன்னும் பல 'மாவனெல்லைக்
கலவரங்கள்' தோன்றலாம்!
கடைசியில்
எல்லை மீறிய பேரினவாதம்
இன்னொரு கட்டுக்கடங்காத கறுப்பு
ஜூலையைக்கூட அரங்கேற்ற
இடமுண்டு.

ஆதலால் இந்த சம்பவத்தின்
பின்னணியில் இருப்பவர்கள்
எத்தனை பெரிய ஜாம்பவானின்
செல்லப் பிள்ளைகளாக
இருந்தாலும் சரி
சட்டம் அதன் பணியை
சரிவர செய்தேயாக வேண்டும்.

ஏற்கனவே சட்டம் விட்ட
தவறின் எதிரொலி இது.
இன்னமும் அதே தவறு
நிகழுமென்றால்
விளைவு இதைவிட
மோசமாக இருக்கும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# ஆன்மீகம்

## பாவ புண்ணியங்கள்

நாம் செய்த, செய்கின்ற வினைகளுக்கு ஏற்ப பலனை அனுபவிக்கின்றோம். அப்போது "அது என் தலை விதி"யெனச் சொல்லப்படுகிறது. விதி இறைவன் விதித்தது அல்ல, நமக்கு நாம் செய்துகொண்டதின் பலன். 'கந்தன் என்று சொன்னால் வந்தவினை போகும்' எப்படி? பஞ்சமா பாதகங்க ளைச் செய்துவிட்டு 'கடவுளே' என்றால் கடவுள் வரமாட்டார். வந்தவழியைப் பார்த்து வருகின்ற வழியைக் கடவுள் காட்டுவார்.

நாலுபேர் மதிக்க பக்திமான்; பணக்காரன் என மதிக்கப்படுபவன் மனதில் நேர்மை, நீதி, இரக்கமின்றி பொய், களவு வஞ்சக எண்ணங்களோடு தன் பணத்தைப் பெருக்கி, புகழுக்கும், பெருமைக்குமாக வாழ்வானாயின் அவன் மனதில் நிம்மதியிராது.

நடைபாதையில் கண்ணாடித்துண்டை வீசுகிறோம். திரும்பி வரும்போது நமதுகாலில் குத்தும். குளியலறையில் எச்சிலையும் சளியையும் உமிழ்கிறோம்; நின்ற இடத்தில் வாழைப்பழத்தோலை வீசுகிறோம். அதுவே நமது காலை வழுக்கிவிடுகிறது. இவை நாம் செய்த வினையா? இறைவன் விதித்த விதியா?

ஊரார் பழிக்கு வாழ்ந்த ஏழையொருவன் கடவுளுக்குப் பயந்து உண்மை, நேர்மையோடு வாழ்ந்து உயர்ந்ததுமுண்டு. பக்தி செய்பவர்கள் பாவம் செய்யாவிடின் கடவுள் அருள் உண்டு. அல்லாதோர் தம் பாவத்துக்கு பலன் அநுபவித்தேயாக வேண்டும்.

ஆகவே நாம் பாவம்செய்யாது புண்ணியங்களைச் செய்துகொண்டு இறைவனைப் பக்திசெய்து உய்தியடைவோமாக!

செல்வி.பா.வேலுப்பிள்ளை-வெள்ளவத்தை.



## வாலிபமும் வயோதிபமும் அவனருளே!

* அவன் எத்தகையவனென்றால், உங்களை (ஆரம்பத்தில்) மண்ணிலிருந்து படைத்தான்; பின்னர், இந்திரியத்துளியிலிருந்தும், பின்னர், இரத்தக் கட்டியிலிருந்தும், (உருவாக்கி) பின்னர் உங்களைக் குழந்தையாக வெளியாக்குகிறான்; பின்னர் (படிப்படியாக) நீங்கள் உங்கள் வாலிபத்தை அடைவதற்காகவும், பின்னர் நீங்கள் முதியோராவதற்காகவும், (உங்களைப் படைத்தான். இதற்கு) முன்னரே மரணிப்பவரும் உங்களில் இருக்கிறார்கள்; இன்னும், குறிப்பிடப்பட்ட தவணையை நீங்கள் அடைவதற்காகவும், (இதிலிருந்து அவனின் சக்தியை) நீங்கள் விளங்கிக் கொள்வதற்காகவும் (இவ்வாறு செய்தான்) (40:67)

* எவரை நாம் (வயோதிகராக்கி) வயதை நீட்டி விடுகிறோமோ அவரை, படைப்பில் (வாலிபத்திற்குப் பிறகு முதுமையையும், பலத்திற்குப் பிறகு பலவீனத்தையும் கொடுத்து), தலைகீழாக மாற்றி விடுகின்றோம். (இதனை) அவர்கள் அறிந்து கொள்ள மாட்டார்களா?

(அல்குர்-ஆன் 36:68)

ஏ.எச்.ஏ.ஹூஸைன்-ஏறாவூர்.

## தேவனுக்கு பிரியமில்லாத செயலை விலக்க வேண்டும்!

"யோனாவை எடுத்து சமுத்திரத்திலே போட்டுவிட்டார்கள்; சமுத்திரம் தன் மும்முரத்தை விட்டு அமர்ந்தது."

யோனாவைப்போல நமது வாழ்விலுள்ள, தேவசமுகத்தை விட்டு விலகக் கூடிய செயல்களை விலக்க வேண்டும். ஆதி மனிதன் கீழ்ப்படியாதபடியினால் தேவ சமூகத்தை விட்டு துரத்தப்பட்டான். பாவமானது நம்மை தேவ சமூகத்திலிருந்து பிரித்து விடுகிறது. அநேகருடைய வாழ்க்கையில் பாரம்பரிய காரியங்கள் தவறான நம்பிக்கைகள் தேவனுடைய பிரசன்னத்தை இழக்க வைக்கிறது. இந்த உலகத்தில் வாழ்ந்தாலும் பிரித்தெடுக்கப் பட்ட அனுபவத்தில் வாழ வேண்டும்.

இன்றைக்கு அநேகருடைய வாழ்க்கையில் தேவ வார்த்தையைக் காட்டிலும், வேத ஒழுங்கைக் காட்டிலும் தங்கள் செயல்கள்மீது நம்பிக்கையுடையவர்களாயிருக்கிறார்கள். இது தவறான காரியம். இவ்விதமான காரியங்களை விட்டு விலகி தேவன் விரும்புகிறதைச் செய்து கொந்தளிப்பு நீங்கிய நல்வாழ்வைப் பெறுவோமாக.

தி.தேவபாலன்-மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.407



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 19.05.2001

கவிதைப் போட்டி இல.407
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### பரிசுக்குரிய கவிதை

## கவிதைப் போட்டி இல.404

### முள்வேலி

கள்ளிருக்கும் மலராய் நாம்
களித்திருந்த வாழ்வெல்லாம்
முள்ளிருக்கும் புதராய் இன்று
உருமாறிப் போனதம்மா
கல்லிருக்கும் சுமையாகக்
கனக்கிறதே இதயம் ஐயோ!
முள்ளோடு முள்ளாய்
இருக்குமெமக்கு
எதற்கிந்த முள்வேலி..?

கே.தங்கராஜா -சீனக்குடா.

### தமிழரின் கொடுமை நிலை.

அடிப்படைத் தேவைகளோடு
உறவுகளையும் இழந்து நிற்கும்
சிறுமியே!
முள்வேலி தாண்டாதே!
அங்கும் பாவிகள் உளர்,
உன்னையும் பாலியல்
உறவுக்கு ஈடுபடுத்தி
உயிரைப் போக்க.

கவிதா சாந்தலிங்கம்-ஏறாவூர்-05.

### முள்வேலி

யுத்தப் பிரகடனத்தால்
முள்வேலிகள் தகர்க்கப்படலாம்
மோகமுள் தைத்து விடும்
மூடிக் கொள் இளமேனியை

திருமதி.சுவேந்திரா மகேந்திரன்-மட்டக்களப்பு.

### எல்லை

அன்று இராமனின் அன்பு எல்லை
இன்று இராவணனின் அடிமை எல்லை
என்று இவ் வெல்லை நீங்கும்...?
அக்காலமும் இனி வருமோ?

பா.விஜிதபாரதி-வெள்ளவத்தை.

### வேலியே பயிரை...

வேலிக்குப் பின் நிற்கும் இளந்தளிரே
வேலியே பயிரை மேயும் காலமிது;
வீட்டுக்குள் விரைந்து போ..
வெளியே தலை காட்டாதே!

சீ.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

### கவலை

வாங்கி வந்த மலர்
அது வாடுகின்ற போது..
சூழ்ந்து வந்த தென்றல் நாற்று
அதில் தூசி வந்த போது..
இன்பம் தந்த நாடு
அது இரண்டுபட்ட போது,
அறிவு தந்த பெரியார்
அவர் மறைந்து போகும் போது...

ஜி.சே.மௌசர்-பாலமுனை-05.

### சூழ் (பரிதாப) நிலை

பசுவின் பால் வற்றும் முன்
கன்றை அகற்றியது சூழ்நிலை
புலியின் வேலிக்குள் கன்று
பரிதாப நிலையில், இன்று

ஏ.ஆர்.எம்.ஹரீஸ்-ரத்தோட்டை.

### கலங்காதே

நாளென்றால்
இருளும் ஒளியும்
வாழ்வென்றால்
துக்கமும் சுகமும்-ஆதலால்
கலங்காதே கண்ணே,
மனதில் உறுதி
வேண்டும் பெண்ணே!

அ.யாழினி-மட்டக்களப்பு.

### மிச்சம்

கண்ணில் தெரிவதோ
அச்சம்;
அது ஒன்றே வாழ்வில்
மிச்சம்!

மெ.மரியதாஸ்-பண்டாரவளை.

### வேலி

பெண்களுக்கென்றே
பிரம்மனால் படைக்கப்பட்ட
பாரிய, கூரிய ஆயுதம்!

செ.தினேஸ்குமார்-கொழும்பு.

### யுத்தக் கொடுமை

உறவை இழந்து,
உடமை இழந்து,
உடை இழந்து,
வாழ்க்கையின் சோக
அத்தியாயங்களை
எண்ணிக் கொண்டு,
எங்கே பார்க்கிறது இந்த
பிஞ்சுள்ளம்-ஓ!
சமாதானத்தைத் தானோ?


மு.அருந்தவகுமார்-பெரிய போரதீவு.

### உனக்கும் எனக்கும்

நீ
பார்க்கும் பார்வையில்
சோகம் உனக்கு;
நான் பார்க்கும்
பார்வையில் அனுதாபம்
எனக்கு!

எஸ்.நித்தியா-துள்ளுகுடியிருப்பு.

## எஸ்.டி.எஸ். கண்ட பாரதி



மகாகவி சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றி நான் பல நூல்களையும் இந்திய சஞ்சிகைகளில் பிரசுரமான கட்டுரைகளையும் படித்திருக்கிறேன். ஆனால் எமது நாட்டவரான எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் 'சிந்தாமணியில்' ஏறத்தாழ 20 வருடங்களுக்கு முன்னர் எழுதிய தொடர்போல் எதுவும் இத்தனை சிறப்பாக அமைந்திருக்கவில்லை.

தமிழ் நாட்டு எழுத்தாளர்களே எடுத்துக்காட்டாத எத்தனையோ சிறப்புக் கருத்துக்களை எஸ்.டி.எஸ். அவர்கள் தமது கட்டுரையில் எடுத்துக் கூறியிருக்கிறார்.

சிந்தாமணியில் இத் தொடர் பிரசுரமானபோது எனது மாணவப் பருவத்தில் தொடர்ந்து படித்தேன். பக்கங்களையும் ஒன்று விடாமல் சேர்த்து வைத்தேன். ஆனால் எப்படியோ அவை காணாமற்போய் விட்டன.

இன்று முரசு வாயிலாக திரு.இரா.பத்மநாதன் இத் தொடரினைத் தருவது எம்போன்றவருக்குப் பெரும் பயனாகவிருக்கிறது. இத் தொடரினை எஸ்.டி.எஸ். அவர்களே நூலுருவில் தந்திருக்கலாம்; ஆனால் ஏனோ அவர் அதனைச் செய்யத் தவறிவிட்டார்.

முரசில் தொடரும் கட்டுரையையாவது எவராவது நூலுருவில் தருவார்களானால் தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் பயனடையும்.

எஸ்.டி.எஸ்.கண்ட பாரதியைத் தரும் முரசுக்கு எமது நன்றி.

பண்டிதர் கா.இராசேந்திரன், காரைதீவு.

# வாசக[ர்] சாலை

### அனைத்தும் சுவை

பாசத்துக்குரிய முரசே நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சுவையாக இந்தன. பூமி மீண்டும் பூத்தது போன்ற ஓர் ஆறுதல்.

400வது முரசில் 'நில் கவனி முன்னேறு' உரையாடல் 'ஸ்போர்ட்ஸ்', 'சிந்தியா பதில்கள்', 'சினிமா' மற்றும் அனைத்தும் சூப்பர்.

முரசே நீ எத்தனையோ சிரமத்துக்கு மத்தியிலும் எங்கள் பிரதேசத்துக்கு வருகிறாய். எமது பல கோடி முத்தான நன்றிகள்! நீ மேலும் மேலும் வளர வேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்.

கு.குட்டி, மன்னார்.

தித்திக்கும் தேன்மொழியில், திகட்டாத செய்திகளை, பகட்டான படங்களுடன் தாங்கி, வாரமொரு முறை வலம் வரும் அன்பு முரசே..! நீ சுமந்து வரும் அத்தனையும் எத்தனை முறை படித்தாலும் திகட்டுவதில்லை. இதுதான் முரசின் தனி வழியோ...?

ஏ.எல்.எம்.நிசாத், காத்தான்குடி-06.

### வாரம் ஒரு முறை...

முரசு சுமந்துவரும் அத்தனை அம்சங்களும் முத்தாகத்தான் ஜொலிக்கிறது. அந்த வகையில் முரசு இதழ் 402ல் சுமந்து வந்த அத்தனை அம்சங்களும் அருமையாகத்தான் இருந்தன.

அதில் 'யுத்தம் தந்த பிட்ஷா பாத்திரம் பட்ஜெட்' தலைப்பிலான நரனின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', சமாதானத்தின் முக்கியத்துவத்தை இடித்துரைத்த 'முல்லைத் தாக்குதல்' தலைப்பிலான 'அலசுவது இராஜதந்திரி' போன்றவைகள் சுவைபட இருந்தன.

குத்தியன் எழுதும் 'பார்த்தேன் எழுதுகிறேன்', சுவாமிநாதனின் 'வாரம் ஒரு வார்த்தை', சிறுகதைகள் போன்றவை அபாரம். அத்தோடு...

பல உண்மைத் தொடர்களைத் தந்து எம் உள்ளங்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்க வைத்த இனிய முரசில்..

உலகை உலுக்கிய சர்வாதிகாரி 'அடோல்ஃப் ஹிட்ல'ரின் உண்மைத் தொடரைத் தந்து எம்மை பூரிப்படையவைத்து விட்டாய். என்றும் உன் தரமான சேவைக்கு உனது நீண்ட நாள் வாசகனின் வாழ்த்துக்கள் பற்பல.

புதியகாத்தான்குடி- முஸம்மில், 'குவைத்'.

என் முத்தான முரசே!

நீ சுமந்து வரும் 'பாப்பாமுரசு', 'சிறுகதை' எங்கள் பாடசாலை ஒப்படைகளுக்கு தேவைப்படுகிறது. மேலும் நீ நல்ல நல்ல அறிவுக்கதைகளை சுமந்து வருவாயாக. உனக்கு எனது நன்றிகள்...

க.இ.திவாகரன், வவுனியா.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்-
உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266

# மே மாத முடிவிற்குள் முதற் கட்டப் பேச்சுக்கள்!

## பாதை திறப்பும் தடைநீக்கமும்-இருதரப்பு நிபந்தனைகள்

இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான முதல் சுற்றுப் பேச்சுக்கள் இம் மாத நடுப்பகுதியில் அல்லது மாத இறுதியில் ஆரம்பமாகலாமெனத் தகவலறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றது.

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கான ஏற்பாடுகளைக் கையாண்டு வரும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கடந்த வாரம் லண்டன் மாநகரில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தைச் சந்தித்து உரையாடி இருந்தார். இதற்கு முன்னர் அவர் இலங்கை வந்திருந்த போது, அரச தரப்பினரின் நிலைப்பாட்டையும் சொல்ஹெய்ம் அறிந்து கொண்டார்.

அண்மையில் இலங்கை அரச படைகள் மேற்கொண்ட 'அக்கினிச் சுவாலை' இராணுவ நடவடிக்கை படைத் தரப்பினருக்கு பாரிய அளவிலான சேதங்களை ஏற்படுத்தி விட்டுள்ளது. இதனால் மேற்கொண்டு இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள இராணுவம் தயாராக இல்லை என்று தெளிவாகத் தெரிகிறது.

இந்தப் பாரிய இழப்புக் குறித்து கொழும்பில் உயர்மட்ட இராணுவ விசாரணைகளை நடத்துவதற்கு இராணுவ மேலிடம் உத்தரவிட்டுள்ளதாக அறியப்படுகிறது. இந் நிலையில், விசாரணை முடிவுகள் தெரியாத நிலையில் மீளவும் ஒரு இராணுவ நகர்வை முன்னெடுக்க முடியாத நிலைக்கு இராணுவம் உள்ளாகியிருக்கிறது.

இதே சமயம் தமிழீழ விடுதலைப் புலிகள், அவர்களது ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிக்காமல் விலக்கிக் கொண்டுள்ளமையினால் இவ் வேளையில் அவர்கள் கடுந்தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொள்ளலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அரச தரப்பு யுத்த நிறுத்தத்தையோ அல்லது தற்காலிக மோதல் தவிர்ப்பையோ மேற்கொள்ளுவதை வெளிப்படையாக தெரிவிக்காதபோதிலும், தமது தரப்பில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க வெசாக் தினச் செய்தியில், யுத்தத்தை தவிர்த்து அரசியல் பேச்சுக்களில் ஈடுபடுவது குறித்து தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமைதிக்கான பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படுவதற்கு முன்னர் அரச தரப்பினரும், விடுதலைப் புலிகளும் தலா ஒவ்வொரு நிபந்தனையை சொல்ஹெய்மிடம் வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கான ஏ 9 வினியோகப்பாதை திறந்து யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்களையும் மருந்து வகைகளையும் கொண்டு செல்வதற்கு விடுதலைப் புலிகள் வழிவிட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிபந்தனையாகும்.

விடுதலைப் புலிகள், வன்னிக்கும் வட பகுதிக்குமான பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவை உடனடியாக முற்றாக நீக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கோருகின்றனர்.

இவ்விரு நிபந்தனைகளுக்குமிடையில் இருதரப்பினரும் ஓரளவு விட்டுக் கொடுக்கும் நிலை உருவாகியிருப்பதாகவும் கூறப்படுகிறது. எனவே முதற் கட்டப் பேச்சு வார்த்தைகள் மிக விரைவில் தொடங்குவதற்கான திகதி அறிவிக்கப்படலாம்.

## மாவனெல்லை சம்பவத்தையடுத்து
## நாட்டின் பல பகுதிகளில் ஆங்காங்கே வன்முறைகள்

மாவனெல்லையில் கடந்த வாரம் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களை அடுத்து நாட்டின் பலபகுதிகளிலும் அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன.

மூதூர் நகரில் உள்ள 8 கடைகள் இனந்தெரியாதோரினால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11.30 மணியளவில் நகரில் உள்ள சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சொந்தமான கடைகளே இவ்வாறு தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தையடுத்து மூதூரில் பதற்றம் நிலவியது. வெளியிடங்களுக்கான போக்குவரத்துகள் இரத்துச் செய்யப்பட்டதுடன் திங்கட்கிழமை நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. திருகோணமலையில் இருந்து மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

புத்தளம் நகரில் வாகனம் ஒன்றுக்கு தீவைக்கப்பட்டு அதில் இருந்த முஸ்லிம்கள் இருவர் தாக்கப்பட்டுள்ளனர்.

குருநாகலை நகரில் கடையொன்றுக்குள் புகுந்த சிலர் அங்கிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரை வெட்டிக் காயப்படுத்தியிருக்கிறார்கள்.

இதற்கிடையில் வெள்ளிக்கிழமையின் பின்னர் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகள் வழமைக்கு மாறான பதற்றத்துடனும் சோபையிழந்தும் காணப்படுகின்றன.

சாய்ந்தமருது, ஏறாவூர் பகுதிகளில் நடத்தப்பட்ட ஹர்த்தாலின் போது படையினரையும், பொலிஸாரையும் ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபட்ட சிலர் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை நாட்டில் தற்போது தோன்றியுள்ள நிலமையை தமக்கு சாதகமாக பயன்படுத்த சில தீய சக்திகள் திட்டமிட்டு வருவதால் பொறுமை கடைபிடிக்குமாறும் உணர்ச்சிகளுக்கு கட்டுப்படாமல் நிதானமாக நடந்துகொள்ளுமாறும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பேச்சுவார்த்தை சட்டவிரோதமாகலாம்!

இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக அரசுக்கும் தமிழீழவிடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று ஏதாவது ஒரு வகையில் ஒருமைப் பாடு காணப்பட்டால் அதனைத் தொடர்ந்து அரசியல் யாப்பில் மாற்றம் செய்யப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

இந்நிலையில் இத்தகையதொரு பேச்சுவார்த்தை சட்டரீதியான ஒன்றல்ல என்றுசட்டப் பிரச்சனையைப் பூதாகரமாக்கி கிளப்பிவிடுவதற்கு சில சக்திகள் அந்தரங்கமாகத் திட்டமிட்டு வருவதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இன்றுள்ள நிலையில் இலங்கையில் சட்டப்படி தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பு. அத்தகைய தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்புடன் தடையை விதித்த அரசாங்கம் பேச்சுவார்த்தையிலீடுபடுவதும், ஒப்பந்தம் செய்வதும் சட்டப்படி குற்றமாகும்.

இன்றுள்ள நிலையில் 'விடுதலைப்புலிகளுடன் தொடர்பு வைத்துள்ளவர்கள்' என்று நூற்றுக்கணக்கான நபர்கள் குற்றஞ் சாட்டப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்தும் வருகின்றனர்.

இவ்வாறிருக்கையில் அரசாங்கத்தைச் சேர்ந்த எந்தப் பிரதி நிதியும் விடுதலைப் புலி உறுப்பினர்களுடன் எவ்வாறு பேச முடியும்? அவ்வாறு பேசுவது சட்டப்படி குற்றமாகும், என்று சட்ட நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

## களுவன்கேணியில் புதிதாக படைமுகாம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவன்கேணியில் புதிதாக படைமுகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கு அருகே முகாம் அமைத்து நிலைகொண்டிருக்கும் அதேவேளை இந்த புதிய படைமுகாம் அமைக்கப்பட்டுள்ளது.

கிழக்குமாகாணத்திற்கும் வடபகுதிக்குமான கடல் வழித் தொடர்பை புலிகள் களுவன்கேணிக் கடற் பகுதிக்கூடாகவே மேற்கொள்கின்றனர் என்றும் இதன் மூலமே கிழக்கு மாகாணத்துக்கான ஆயுதப் பரிமாற்றத்தைப் புலிகள் மேற்கொள்கின்றனர் என்றும் படையினர் கருதி வந்தனர்.

இந்திய அமைதிகாக்கும் படையினரும் களுவன்கேணிச் சந்தியில் பாரிய இராணுவ முகாமொன்றை அமைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை

மட்டக்களப்பு நகருக்குள் புலிகள் இயக்க கொலையாளிகள் ஊடுருவி இருப்பதாகவும் இவர்கள் இராணுவ தொடரணிகள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினரால் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மட்டக்களப்பில் உள்ள படைமுகாம்கள் மற்றும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் அதிகமாக நடமாடும் இடங்களில் உட்புகுந்து தாக்குதல் நடத்தக்கூடிய பயிற்றப்பட்ட கரும்புலிகள் மட்டக்களப்பு நகருக்குள் வந்திருப்பதாக நீண்ட நாட்களாகவே படைத் தரப்பு கூறி வருகின்றது. இதனைக்காரணம் காட்டி நகரின் சில இடங்களில் அண்மைக்காலமாக பாதுகாப்பு கெடுபிடிகளும் அதிகரித்துள்ளன.

## இனிமேல் சட்ட விரோதமில்லை

சட்ட விரோதக் கட்டடம் எனக்கூறி கடந்த மாதம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் உடைக்கப்பட்ட கொழும்பு புஞ்சி பொரளைசந்தியில் இருந்த பௌத்த வழிபாட்டுத்தலம் மீண்டும் நிர்மாணிக்கப்பட்டு வெசாக் போயா தினத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த பௌத்த வழிபாட்டுத் தலத்தை மையமாக வைத்து பல சட்டவிரோத செயல்கள் நடைபெறுவதாக இதனை உடைத்த போது அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்தார்.

ஆனால் மகாசங்கத்தினரின் கடும் வற்புறுத்தலினால் அந்த இடத்தில் அதே வணக்கத்தலத்தை மீண்டும் நிர்மாணித்துத் தர பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக உறுதியளித்திருந்தார்.

அதனடிப்படையில் மிகக் குறுகிய காலத்துக்குள் இந்த வழிபாட்டுத்தலம் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு அமைச்சர் மங்கள சமரவீரவின் கைகளினாலேயே வெசாக் தினத்தன்று திறந்து வைக்கப்பட்டது.

## மக்கள் வங்கியின் குறைகேள் சேவை

ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 15ம் திகதி செவ்வாய்க்கிழமை குறைகேள் நடமாடும் சேவை ஒன்று புங்குடுதீவில் நடைபெறவுள்ளது.

இந்த சேவையின் போது பிரதேச மக்களுக்குத்தேவையான வங்கிக் கடன் குறித்த ஆலோசனைகள், மற்றும் சுய தொழில் கடன் திட்டங்கள் தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்படவுள்ளன.

## படையினர் விலகுவர்

வவுனியா குடியிருப்பு விநாயகர் கோயிலுக்கு அருகில் அமைந்திருக்கும் கலாசார மண்டபத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த 5 வருடகாலமாக படையினர் இங்கு நிலை கொண்டுள்ளதால் இந்த கலாசார மண்டபத்தை பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலை காணப்பட்டு வந்தது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையுடன் இது குறித்து கலந்துரையாடியதையடுத்து கலாசார மண்டபத்தில் இருந்து படையினரை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மண்டபம் வடகிழக்கு தமிழ் விவகார அமைச்சின் இந்து கலாசார பிரிவின் கீழ் கொண்டுவரப்படவுள்ளது.

## வீதி விபத்தில் பலி

உதயன் பத்திரிகையின் முகாமையாளராக கடமையாற்றிய கனகையா நந்தகுமார் (வயது 56) இராணுவ வாகனத்தில் மோதுண்டு உயிரிழந்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பலாலி வீதி, நாவலர் வீதிச் சந்தியில் தனது மோட்டார் சைக்கிளில் சென்ற இவர் மீது வேகமாக வந்த இராணுவத்தினரின் வாகனம் மோதியதில் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

இதேபோன்று கடந்த 4ம் திகதி கடற்படையினரின் தண்ணீர் பவுசருடன் மோதுண்ட பெஞ்சமின் சகாயராசா (வயது 35) என்ற குடும்பஸ்தர் பலியானார்.

யாழப்பாணத்தில் அண்மைக்காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்துவருகின்றன.

## 'அக்கினிச்சுவாலையை' எதிர்த்துப் போராடியவர்களுக்கு
## பிரபாகரன் விருது வழங்கி கௌரவிப்பு

யாழ்.குடாநாட்டின் தென்மராட்சிப் பகுதியில் படையினர் ஆரம்பித்த 'அக்கினிச் சுவாலை' இராணுவ நடவடிக்கையின் போது படைத்தரப்புக்கு பாரிய சேதங்களை ஏற்படுத்தி கடும் எதிர்ப்பைக் காட்டிய விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு அந்த இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விருது வழங்கி கௌரவித்துள்ளார்.

கடந்த ஞாயிறன்று மாலை வன்னியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முறியடிப்புச் சமரை வழிநடத்திய பலருக்கு பதவி உயர்வுகளும் கௌரவ விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.

சோதியா படையணியை வழிநடத்திய லெப்.கேணல் துர்கா, கேணல் தரத்திற்கும் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவை வழிநடத்திய மேஜர் கோபித், லெப்.கேணல் தரத்திற்கும் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரபாகரன், "எமது மண்ணைக் கைப்பற்ற முயன்ற இராணுவத்தை எதிர்த்துப் போராடி அவர்களுக்கு பெருஞ்சேதமேற்படுத்திய போராளிகளின் வீரம் போற்றத்தக்கது. தோல்வியால் துவண்டு போயிருக்கும் இராணுவம் தமது நடவடிக்கைகளை மீண்டும் மீண்டும் பெரும் எடுப்புடன் முன்னெடுப்பார்கள். எனவே நாம் விழிப்புடன் இருந்து அவற்றை முறியடிக்க வேண்டும். எமது மண்ணையும் மக்களையும் பாதுகாத்து தேசவிடுதலை என்ற எம்முடைய இலட்சியத்தை உறுதி தளராது முன்னெடுப்போம்" என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியின்போது, அனைத்து படையணிகளையும் சேர்ந்த தளபதிகள், போராளிகள், வினியோகப் பிரிவு, மருத்துவப்பிரிவு மற்றும் வாகனப் பிரிவு என்பவற்றில் சிறப்பாக செயற்பட்டோர் எல்லைப் படையினரை சிறப்பாக வழிநடத்திய போராளிகளுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

'அக்கினிச்சுவாலை' நடவடிக்கையின் முறியடிப்புச் செயற்பாட்டினை ஒருங்கிணைத்த புலிகளின் தளபதி தீபனும் இந்த நிகழ்வில் உரையாற்றினார்.

## ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணத்தில் அமுல்செய்யப்படும் இரவு நேர ஊரடங்குச்சட்டம் ஒரு மணி நேரத்தினால் தளர்த்தப்பட்டுள்ளது.

முன்னதாக இரவு 8 மணி தொடக்கம் அதிகாலை 5 மணிவரை அமுலில் இருக்கும் ஊரடங்குச்சட்டம் இனிமேல் இரவு 9 மணி முதல் அதிகாலை 5 மணிவரையில் அமுல் செய்யப்படும்.

இதேவேளை குடாநாட்டில் மக்கள் செறிந்து வாழும் அரியாலைப்பகுதியில் இருந்து படை முகாம்களை அகற்றுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் திருப்திகரமான பதில் அளிக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

இந்தப் பகுதியில் உள்ள இராணுவ முகாம்களை வேறு இடங்களுக்கு மாற்றி விட்டு அப்பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு மேலும் பல வசதிகளை செய்து கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## அக்கரைப்பற்று மக்களுக்கு
## அதிரடிப்படையினர் உத்தரவு

அக்கரைப்பற்று பகுதி பொதுமக்களுக்கு அங்குள்ள விசேட அதிரடிப்படையினர் பல அறிவித்தல்களை ஒலிபெருக்கி மூலம் விடுத்து வருகின்றனர்.

சமீப சில நாட்களாக அக்கரைப்பற்றுப் பகுதியில் புலிகளின் செயற்பாடுகள் அதிகரித்திருப்பதாலேயே பொதுமக்களுக்கான இத்தகைய அறிவிப்புகளைச் செய்ய வேண்டியிருப்பதாகப் படையினர் தெரிவித்துள்ளனர்.

மாட்டு வண்டில்கள், உழவு இயந்திரப் பெட்டிகள் வைத்திருப்போர் அவற்றை விசேட அதிரடிப்படை முகாமிலுள்ள சுற்று வட்டாரத்திலேயே நிறுத்தி வைக்க வேண்டும்; தேவையான போது படையினரின் அனுமதியுடன் அவற்றை எடுத்துச் செல்லலாம்.

இரவு 7 மணிக்கும் காலை 5.30 மணிக்குமிடையில் எவரும் வீதிகளில் நடமாடமுடியாது. அறிமுகமில்லாதவர்கள் எவரும் நடமாடினால் அது பற்றி அதிரடிப்படையினருக்கு அறிவிக்க வேண்டும் என்று மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பகுதிகளிலிருந்து உழவு இயந்திரங்களையும், மாட்டு வண்டில்களையும் எடுத்துச் சென்று தமது தேவைக்கு பயன்படுத்துகின்றார்கள். காட்டுப்பகுதியிலுள்ள தமது முகாம்களுக்கு உணவுப்பொருட்களை ஏற்றிச் செல்கிறார்கள் என்பதாலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது எனவும் அதிரடிப்படையினர் கூறியுள்ளனர்.

சமீப சில நாட்களுக்கு முன்னர் அக்கரைப்பற்றில் ஒரு தமிழ்க் கிராம சேவகரின் உழவு இயந்திரமும், முஸ்லிம்களின் இரண்டு உழவு இயந்திரங்களும், ஒரு வேனும் புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டன.

இந்தச் சம்பவத்திற்கு முன்னர் புலிகளுக்குப் பொருட்களை ஏற்றிச் சென்ற இரண்டு உழவு இயந்திரங்களைப் படையினர் கைப்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கனடாவில் ஈழத்தமிழர்களிடம்
## ஏராளமான போலி நோட்டுக்கள்

கனடாவில் இலங்கைத் தமிழர்கள் செறிந்து வாழும் டொரன்டோவை அண்மித்த வெலசிலி பார்லிமென்ட் பகுதியில் போலி நாணயங்களின் புழக்கம் அதிகரித்திருப்பதாக அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். 20, 50, 100 டொலர் போலி நோட்டுக்கள் ஈழத்தமிழர்கள் மத்தியில் பரவலாக புழங்குவதாகவும் பல வர்த்தகர்கள் இவர்களால் ஏமாற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்ப்பெண்களே அதிக அளவில் போலி நாணயங்களை மாற்றும் வேலையில் ஈடுபடுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். போலி நாணயங்களை வைத்திருப்போர் தொடர்பாக தகவல் கிடைப்பின் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு டொரன்டோ மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

## மனோதத்துவ வைத்தியம்

**GENARAL PSYCHO THERAPHY**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் மே 20 முதல் 25 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் மே 25 - 27 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டிT.P.074-474156

**கல்முனையில் ஜூன் 02, 03 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் மே 12, 13 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019

DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.



## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாப்பின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், மகளின் திக்குவாய் குணமாகியது**

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்.**

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், 39 வயதில் அதிசயத் திருமணம்**

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி**

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்தால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டேம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி**

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்த என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது**

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி**

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்**

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், ஜாதகத்தில் கூறியது பலிதம்**

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்**

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், அதிசய அக்னி குண்டல பூஜை**

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா."

**கொழும்பு அன்பரின் மடல், அச்சொட்டான கைரேகை பலன்**

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி**

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நல முடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 342463
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.


# விளம்பரப் பகுதி

## 4வது பிறந்த நாள் வாழ்த்து



**செல்வப் புதல்வி கர்ஜனா**

**30.04.2001**

மட்டக்களப்பு கோட்டைக் கல்லாற்றைச் சேர்ந்த குருபரன்-பிரமலதா தம்பதியினரின் செல்வப் பதல்வி **கர்ஜனா** தனது 4 காவது பிறந்த தினத்தை 30-04-2001 அன்று தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார்.

இவரை வாழ்த்துபவர்கள்: அச்சா அப்பா, அச்சா அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமா நிலோஜன், சித்திமார், சித்தப்பாமார், மாமிமார், மாமாமார், றியாத்தில் வசிக்கும் நண்பர்கள் மற்றும் உற்றார் உறவினர்கள்.

தகவல்: அப்பா சவுதி.


## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD,NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349






எக்ஸ் ஒயில் கிடைக்காத பகுதிகளுக்கு விற்பனையாளர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்.

**SINGHA HOLDINGS (PVT) LTD.**

14, Ground Floor, Welikada Plaza, Rajagiriya, Sri Lanka.
Tel: 888214, Fax: 874621, 682984 E-Mail: MAXX@dynaweb.lk


## ஆபரணத் தொழிலாளர்களின் அவல நிலை

## அரசு கவனத்தில் எடுக்குமா?

கடந்த 21 வருடங்களாக ஆட்சி செய்த கட்சிகளின் ஆட்சியாளரால், கொண்டுவரப்பட்ட சகல வரவு செலவுத் திட்டங்களிலும் முற்றாகவும் முழுமையாகவும் புறக்கணிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஆபரணத்தொழிலாளர்களாவர். நீண்டகாலமாக ஆபரணத்தொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ள மிக மோசமான பிரச்சனைகளைத் தொட்டுப்பார்க்கக் கூட அரசு நினைத்துப் பார்க்கவில்லை.

ஆபரணத் தொழில் ஆடம்பரத் தொழிலா? இல்லை இல்லவே இல்லை. அது ஒரு அருங்கலை அழகுக்கலை, தெய்வீகக் கலை, அரும் நோய்களை அகற்றும் அக்குயுபஞ்சர்க்கலை., பொதுமக்களை பெறுமதிமிக்கவர்களாக்கி வைத்திருக் கும் சேமிப்பு வங்கி, வரலாற்றுத் தடயம்.

நாட்டின் சனத்தொகையில் மிக மிக சிறுபான்மையான ஆபரணத் தொழிலாளர்கள் நாட்டின் கலை. கலாசார விழுமியங்களுக்கு அளப்பரிய சேவையாற்றியவர்கள். அவர்கள் மூதாதையர்கள் இந்த நாட்டின் பௌத்த. இந்து கலாசார வளர்ச்சிக்கும் கலைக்கோயில்கள் உருவாகவும் வகை செய்த பரம்பரையினர் இன்று இந்த நாட்டுக்கு அன்னிய செலவாணியை உல்லாசப் பிரயாணிகள் மூலம் அள்ளித்தரும் அருங்கலை களைப் படைத்தளித்தவர்களின் வாரிசுகள்.

அந்நியர் ஆட்சியில் இவர்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டிருந்தார்கள். சுதந்திரம் அடைந்ததும் அன்றைய ஆட்சியாளர்களான ஐ.தே. கட்சி-கலாநிதி மலலசேகரா வைத் தலைவராகக் கொண்டு ஒரு விசாரணை சபையை நிறுவி விசாரணை செய்து ஆபரணத் தொழிலாளர்களின் துயர்போக்க மத்திய வங்கி மூலம் தங்கத்தை இறக்குமதி செய்து மானிய அடிப்படையில் கோட்டா முறையில் தொழிலாளர்களுக்கு வழங்கி தொழில் பாதுகாப்பும் அளித்தார்கள். இந்தத் நடைமுறை 1981ம் ஆண்டு வரை இருந்தது. நாட்டின் தற்போதைய யுத்தநிலையையும் பாதுகாப்பையும் காட்டி தங்கவினியோகத்தை தற்காலிகமாக நிறுத்தினர். இந்தத் தடை உள்நாட்டில் அன்றாடம் வேலை செய்து பிழைக்கும் அப்பாவி பொற்றொழிலாளர்களுக்கு செய்யப்பட்ட மிகப்பெரிய பாரிய அநீதியாகும். அதே நேரத்தில் ஏற்றுமதிக்காக ஆபரணம் செய்யும் முதலாளிகளுக்கு இறக்குமதி விலைக்கு தங்கத்தை வங்கி மூலம் அரசு வழங்கி வருகின்றது. இது எந்த வகையில் நியாயமாகும்?

இன்று அரசு இத்தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க பணத்திற்குக் கஷ்டப்படவேண்டிய அவசியமில்லை. அரசுக்கு இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் மூலம் ஏற்றுமதி ஆபரணத்தொழில் மூலமும் அன்னிய செலவாணியாக ரூபா 600 கோடி வருடாவருடம் வருகிறது. அதுமட்டுமல்ல, உல்லாசப் பயணத் துறையாலும் கணிசமான பகுதி வருமானம் கிடைக்கிறது. இந்த இரண்டு துறைகள் மூலம் கிடைக்கும் பணத்தில் பத்திலொருபகுதியை ஒதுக்கீடு செய்து இம்மக்களுக்குத் தேவையான மூலப்பொருளை இறக்குமதி செய்து மானிய அடிப்படையில் வழங்கினாலும் அரசுக்கு நட்டமில்லை.

அது அவர்கள் மூலம் அவர்களின் மூதாதையர் மூலமும் இந்த நாட்டுக்குக் கிடைக்கும் நிலையான வருமானத்தில் சிறுதுளியாகும். இன்று தொழிலில்லை. வருவாயில்லை. வாழமுடியவில்லை. எனக் கஷ்டப்படும் ஆபரணத்தொழிலாளிகளை நிம்மதியாக வாழவும் விடுகிறார்கள் இல்லை. அடிக்கடி கைது செய்வதும் துன்புறுத்துவதும். பின்னர் நீதி மன்றத்தில் குற்றமற்றவர்கள் என விடுதலை செய்வதும் வாடிக்கையாக உள்ளது.

இதுவரை நடந்து முடிந்த நீதிமன்ற விசாரணையின் தீர்ப்புகளின் படி எந்த ஆபரணத் தொழிலாளர்களாவது சட்டப்படி குற்றம் இழைத்தவர்களாகக்காணப்படவில்லை. அப்படி இருந்தும் நாளும் பொழுதும் அப்பாவித் தொழிலாளர்கள் அனாவசியமாக கைது செய்யப்பட்டு சித்திரைவதைக்குள்ளாக்கப்படுவது மனித உரிமை மீறல்களின் உச்சக்கட்டமேயாகும்.

எனவே துன்பத்திற்கு மேல் துன்பத்தையும் துயரத்தையும் மீளமுடியாத கஷ்டங்களையும் தொடர்கதையாக அனுபவித்துக்கொண்டிருக்கும். ஆபரணத் தொழிலாளர்களின் அவலம் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழிலிழந்தவர்களுக்கு வழங்க வேண்டிய நிவாரண உதவிகளை அரசு ஆபரணத்தொழிலாளர்களுக்கும் வழங்க முன்வர வேண்டும். சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் இதை உறுதி செய்திருக்கிறது. எனவே அரசு உடனடியாக ஒரு விசாரணை சபையை ஏற்பாடு செய்து அழிந்து போகும் நிலையிலுள்ள அருங்கலையான ஆபரணக்கலையையும் ஆபரணத்தொழிலாளர்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகிறேன்.

**பூ.ம.செல்லத்துரை ஜே.பீ.**
**தலைவர்,**
**இலங்கைப் பொற்தொழிலாளர் சமாசம்.**




**கலை அலங்கார வகுப்புக்கள்**

- சிகை அலங்காரம்
- அழகுக்கலை
- மணப்பெண் அலங்காரம்
- 4 மாத கற்கைநெறி

வகுப்புக்கள் வார, வார இறுதி நாட்களிலும் நடைபெறும்.

**ஆரம்பம்: 25.05.2001**

சான்றிதழ்கள் வழங்கப்படும்

**FASNAZ BEAUTY SALON**

142, டபிள்யூ ஏ.சில்வா மாவத்தை, கொழும்பு-06. தொலைபேசி: 589457



## அற்புத சித்தர் மாந்திரீகம்

உங்கள் பிரச்சனை எதுவானாலும் அதில் உடன் வெற்றிகாண மட்டக்களப்பு-மலையாள-சோதிட மாந்திரீகச் சித்தர். பேராசிரியர்-கலாநிதி. "சக்திசரவணா" வுடன் தொடர்பு கொள்ளுங்கள். காதல் விவகாரம், குடும்பப் பிணக்கு, தொழில் விருத்தி, திருமணத் தடங்கல், பிரயாணத்தடை, சத்துரு ஜெயம் முதலான சகல விடயங்களிலும் நிச்சயம் வெற்றி பெறலாம். ஏழு தலைமுறை பாரம்பரியமும், 30 வருட சுய அனுபவ ஆற்றலும் கொண்ட "சக்தி சரவணா"வினால் நினைத்த காரியம், ஜாதகபலன், சோதிட அருள்வாக்கு, எண்சோதிடம் முதலான பிற சோதிட சேவைகளும் பெறலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கு விசேட துரிதசேவை மேற்கொள்ளப்படுகிறது. தபால் மூலம் தொடர்பு கொள்ளும் உள்ளூர் அன்பர்கள் 20 ரூபா முத்திரையுடன் தொடர்பு கொண்டு பதில் பெறலாம். இரகசியங்கள் அந்தரங்கமாகப் பேணப்படும். காலதாமதம்-பணவிரயம் இன்றி உடன் பரிபூரண வெற்றி பெற தொடர்பு கொள்ளுங்கள். நேரில் சந்திக்க- காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை.

தொடர்பு

(வியாழன் விடுமுறை)

HON.PROF.DR.SHAKTHY SARAVANA;
NO. 82, MANIKKAVASAKAR STREET,
TRINCOMALEE, SRI LANKA.
TP: 026 20347

வெளிநாட்டினர் தொடர்பு கொள்ள
T.P. 009426 20347



## தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL SERVICES

**சர்வதேச சமூக தெய்வீக சேவை**
**NTSF-CHARITY REG. NO.HA04BT219**

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ஃபக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்
"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"



## மலிவு விற்பனை

Hi FOODS R.N.K. Products

**RNK மாக்கற்றிங்**

(சுப்பர் மார்க்கட்)

**STAUFACHERSTRASSE 141, 8004 Zürich.**

ஸ்தாபனத்தில் மீன், மரக்கறி, மளிகைப் பொருட்கள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை மலிவு விலைகளில் கிடைக்கும்

TEL: 01-240 16 86
078 666 5277.
Fax: 01-322 2755

சில உதாரணங்கள் மீன் 1Kg 6/90 CHF மரக்கறி 1Kg 3/90 CHF

RNK மாக்கற்றிங் திறந்திருக்கும் நேரங்கள்: திங்கள்-வெள்ளி காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை

சனி காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை



**WWW.tamilhotmail.com-Free E-mail**

எக்ஸ்ரேரிப்போர்ட்

# மீண்டும் தலைதூக்கும் பேரினவாதம் மாவனெல்லையில் வெறியாட்டம்!

இரவு ஒன்பது மணிக்கு இன்னும் சில நிமிடங்கள் மாத்திரமே இருந்தன. மிகுந்த பரபரப்புடன் நெஷனல் பேக் ஹவுஸுக்குள் நுழைந்த இரண்டு பேர் முதலாளியிடம் மிரட்டும் தொனியில் 100ரூபா கேட்டார்கள். தண்டப்பணம் தரமுடியாதென்று அமைதியாக மறுத்துச் சொன்னார் கடை முதலாளி. அதன் பின்னர் 20 ரூபா நோட்டொன்றை கொடுத்து சிகரெட் வாங்கிய அந்த இருவரும் மீதிப்பணத்தை வாங்கும் பொழுது மோசமான தூஷண வார்த்தைகளை வாய் நிறைய உச்சரித்துவிட்டு சென்றனர்.

கடைக்கு வந்த இருவரும் காடையர்கள். வெறுமனே சாதாரண காடையர்கள் அல்ல. கேகாலை பிரதேசத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் 'முக்கிய புள்ளி' ஒருவரின் மடியில் வைத்து தாலாட்டப்படும் மோசமான காடையர்கள். அதனால் முதலாளி சற்று குழம்பிப்போயிருந்தார்.

அது ஏப்ரல் 30 ஆம் திகதி இரவு, உதயமாகப்போகும் மறுநாள் தமது வாழ்வில் மிகவும் பயங்கரமான அனுபவங்களை கொண்டு வரப்போகும் ஒரு தினம் என்பதை அறியாமல் மாவனெல்லை நகரம் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது.

அரை மணி நேரம் கடந்திருக்கும்; அந்தக் காடையர்கள் மீண்டும் நெஷனல் பேக் ஹவுஸுக்குள் வந்தார்கள். இப்போது அவர்கள் வெறுங்கையுடனன்றி கூரிய ஆயுதங்களுடன் நின்றிருந்தார்கள். கடையிலிருந்தவர்களுடன் வாக்குவாதப்பட்டனர். கடைசியில் அது அடிதடி சண்டையாக உருமாறியது. அதில் கடை முதலாளிக்கு 'செம அடி' நடுவில் நின்றிருந்த முதலாளியின் தம்பிக்கும் அடி விழுந்தது. உதை வாங்கிக் கொண்டே காடையர்களுக்கு எதிராக கூக்குரலிட்டார் தம்பி. அதனால் காடையர்களின் கோபம் மேலும் அதிகரித்தது. அவரை அடித்து இழுத்துக்கொண்டு போய் வீதியோரத்தில் உள்ள மின்சாரக் கம்பத்தில் கட்டினார்கள். கட்டுண்டு கிடந்தவரின் முகத்தை பிளேட்டால் வெட்டினார்கள்.

"முடியுமென்றால் எவனாவது வந்து அவிழ்த்து விடுங்கடா பார்க்கலாம்!" என்று முழு மாவனெல்லை நகரத்துக்கும் திறந்த சவா லொன்றை காடையர்கள் விடுத்தனர்.

கடந்த 2ம் திகதி மாவனெல்லை நகரம் ஒரு யுத்த களமாக மாறியதற்கு முதலில் வழிசெய்தது இந்த சம்பவம்தான்.

அவர்கள் இருவரும் தாக்கப்பட்டது தொடர்பாக மாவனெல்லைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. ஆனால் ஆளும் கட்சி அரசியல்வாதியின் செல்லப் பிள்ளைகள் என்பதால் காடையர்களை கைது செய்யும் துணிவு பொலிஸாருக்கு இருக்கவில்லை அல்லது அவர்கள் அதற்கு மனது வைக்கவில்லை.

நகர மக்களின் கோபம் உச்சத்துக்குப் போனது. எல்லோருமாக சேர்ந்து பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தார்கள். காடையர் கூட்டத்தை கைது செய்யுமாறு வலியுறுத்தினார்கள். கண்ணீர்ப் புகை வீசி ஆர்ப்பாட்டம் செய்த முஸ்லிம்களை பொலிஸார் கலைத்தனர். பதற்றத்துடன் பொழுது விடிந்தது.

மறுநாள் அதிகாலையிலேயே நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொண்ட காடையர் கூட்டம் நகருக்குள் புகுந்தது. நகரின் மத்தியில் உள்ள 3 மாடிக்கட்டடம் ஒன்றுக்கு குண்டு வீசி காடையர்களினால் யுத்தம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சில மணி நேரத்தில் மாவனெல்லை நகரம் சின்னாபின்னமாக்கப்பட்டது.



சம்பவத்தில் இரண்டு முஸ்லிம்கள் உயிரிழந்ததுடன் பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பலர் காயமடைந்து இன்னமும் ஆபத்தான நிலையில் மருத்துவமனைகளில் உள்ளனர். 'சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க' பொலிஸார் சுட்டதில் ஹிங்கியுல கிராமவாசி ஒருவர் உயிரிழந்தார். இவர் மாவனெல்லை நகருக்கு 'லைட்பில்' செலுத்த வந்த ஒரு குடும்பஸ்தர்.

நூற்றுக்கும் மேற்பட்ட கடைகளும் தொழிற்சாலைகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் அரைவாசி முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. பள்ளிவாசல்கள் இடிக்கப்பட்டு புனித குர்ஆனும் எரிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தின் பின்னணியில் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் மஹீபால ஹேரத் இருக்கிறார் என்று அப்பகுதி மக்கள் நேரடியாக குற்றஞ்சாட்டுவதாக சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

முஸ்லிம்களின் கைகளில் இருக்கும் மாவனெல்லை நகரின் வியாபார ஆதிக்கத்தை சிங்களப் பேரினவாதிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்காகவே இந்த அழிவுப் படலம் தூண்டிவிடப்பட்டிருக்கிறது என்பதே பாதிக்கப்பட்டமக்களின் அபிப்பிராயமாக உள்ளது.

தமக்கும் மாவனெல்லை சம்பவத்துக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அன்றைய தினம் தான் மாலைதீவில் இருந்ததாகவும் அமைச்சர் மஹீபால ஹேரத் கூறியிருக்கிறார்.

இந்த அழிப்பு நடவடிக்கை யில் பொலிஸாரின் செயற் பாடுதான் மிகவும் அருவருக் கத்தக்க விதத்தில் அமைந்துள்ளது. சட்டத்தை அமுல் செய்யும் ஒரு பொறுப்பு வாய்ந்த நிறுவனம் நெருக்கடியான நிலமை ஒன்றின்போது எதை செய்யக் கூடாதோ அதையேதான் அன்றைய தினம் மாவனெல்லைப் பொலிஸார் செய்துள்ளனர்.

அத்தனையும் நடந்து முடியும் வரை அநாயாசமாக கைகட்டி நின்று இரசித்திருக்கிறார்கள் பொலிஸ் அதிகாரிகள்.

மாவனெல்லைப் பிரதேசத்தை ஆட்டிப் படைக்கும் ஆளும்தரப்பு அரசியல்வாதி பொலிஸிலும், ஏனைய அரசாங்க காரியாலயங்களிலும் தனக்கு வேண்டியவர்களை ஆரம்பத்திலேயே நியமித்துக் கொண்டார். அதன் பின்னர் ஒவ்வொரு தேர்தல் தொகுதியில் இருந்தும் வடிகட்டித் தேர்ந்தெடுத்த காடையர் கூட்டம் ஒன்றை பாலூட்டி வளர்த்து ஆளாக்கினார். இந்த காடையர்கள் தமது 'தலைவருக்காக' உயிரையும் கொடுக்கத் துணிந்தவர்கள். இவர்களைக் கொண்டே இந்த அனர்த்தம் அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

பொலிஸில் இருந்தவர்கள் குறிப்பிட்ட அரசியல் வாதியின் அடிமை சேவகர்கள் இவர்கள் தமது பகுதியில் என்னதான் நடந்தாலும் 'பெரியவரின்' டெலி்.போன் கோல் வரும் வரை இடத்தை விட்டு அசைய மாட்டார்கள். அன்றும் நடந்தது அதுதான். அரசாங்க உயர்மட்டத்தில் இருந்து நிலமையை கட்டுப்படுத்தும் படி 'பெடன் ஒடர்' வரும்வரை காடையர்களின் கைவரிசையை பொலிஸார் இரசித்திருக்கிறார்கள். பின்னர் தமது வீரத்தைக் காட்டுவதற்காக அப்பாவி முஸ்லிம் குடும்பஸ்தரை சுட்டிருக்கிறார்கள்.

இந்த சம்பவம் முஸ்லிம் மக்களின் வர்த்தகம், அவர்களது இருப்பு தொடர்பாக பலத்த ஐயங்களை தோற்றுவித்துள்ளது. மாவனெல்லையைப் போன்று நாட்டின் வேறு பல பகுதிகளிலும் முஸ்லிம்கள் வியாபார ஆதிக்கம் செலுத்தும் நகரங்கள் இயங்குகின்றன. இனிமேல் அவற்றிலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறமாட்டது என்று உறுதிபடக்கூறமுடியாது.

மாவனெல்லை அனர்த்தத்தில் சுமார் 30 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப் பட்டிருக்கிறது.

இதில் பெரும்பாலும் நகரை அண்மித்து வாழ்ந்த மக்களே மோசமான பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளனர். சிலர் தமது வாழ்நாள் முழுவதும் உழைத்து சேமித்ததை ஒரு நிமிடத்தில் இழந்து தவிக்கிறார்கள். இன்னும் பலரின் ஜீவனோபாயம் முற்றிலுமாக

## சத்தியன்

தங்கியிருந்த சிறிய வியாபாரஸ்தலங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் அந்த மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. பல நூற்றுக்கணக்கானவர்கள் வேலையிழந்த நிலையில் உள்ளார்கள். நகரில் இயங்கி வந்த பல தொழிற்சாலைகளில் ஏராளமான சிங்கள இளைஞர், யுவதிகளும் பணிபுரிந்துள்ளனர். இப்பொழுது அவர்களுக்கும் தமது வேலையை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமது வாழ்வியல் அத்திவாரம் சிதைக்கப்பட்ட நிலையில் இன்று மாவனெல்லை மக்கள் இருக்கிறனர். இத்தகையதொரு நிலமை ஏற்பட அவர்கள் செய்த குற்றம் என்ன?

இலங்கையர்கள் என்ற வகையில் அவர்களும் அரசாங்க பாதுகாப்பை தானே நாடி நின்றனர். அப்படியாயின் அவர்களது பிரதேசத்து பொலிஸாருக்கு அந்தக்கடமை உண்டு என்பதில் கேள்விக்கே இடமில்லை. ஆனால் பொலிஸார் என்ன செய்திருக்கிறார்கள்? நாளை வேறொரு இடத்தில் இதேபோன்றதொரு நிலமை தோன்றினாலும் பொலிஸாரின் நடவடிக்கை இப்படித்தான் இருக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

முஸ்லிம்களை அழிக்க வேண்டும் என்றும் ஏனைய சிறுபான்மை இனங்களை அடியோடு அழிக்க வேண்டும் என்றும் கங்கணம் கட்டிக் கொண்டு அலையும் பேரினவாதிகளுக்கு இந்த சம்பவம் பெரும் உற்சாகத்தை அளித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதனால் வேறுபல இடங்களிலும் இதே பாணியில் தமது கைவரியைக்காட்ட இதனை ஒரு முன்னுதாரணமாக கொள்ள மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

சிஹல உறுமய, வீரவிதான போன்ற அமைப்புக்கள் சிறுபான்மை மக்களுக்கு எதிரான வன்முறைகளை தூண்டிவிட பெரும் பிரயத்தனம் மேற்கொண்டு வருவதாக கூறப்படுகின்ற போதிலும், தென்னிலங்கையில் அண்மைக்காலமாக முஸ்லிம்களுக்கும் ஏனைய சிறுபான்மை சமூகத்தினருக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்களின் பின்னால் இந்த இனவாதக் கட்சிகளை விடவும் மிதவாதிகள் எனக் கூறிக் கொள்ளும் அதிகார தரப்பு அரசியல்வாதிகளோ அல்லது அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள பொலிஸாரோதான் பின்னணியில் நின்றார்கள் என்ற குற்றச்சாட்டு எழுவதை அவதானிக்க முடியும்.

மாவனெல்லை சம்பவத்தில் அங்குள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் நடவடிக்கை குறித்து மக்கள் பெரிதும் விரக்தியுற்றுள்ளனர். இந்த அதிகாரி இதற்கு முன்னர் கண்டி மாவட்டத்தில் உள்ள வேறொரு முஸ்லிம் பகுதிக்கு பொறுப்பாக இருந்த போது அங்கும் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இன வன்முறைகள் துளிர்விட்டு பின்னர் அடக்கப்பட்டமை ஞாபகமிருக்கும். அந்த ஊரில் இந்த பொலிஸ் அதிகாரி செய்த பொறுப்பற்ற காரியங்களுக்காக அவருக்கு கிடைத்த தண்டனை, அந்த ஊரை விடவும் வசதியான மாவனெல்லை நகருக்கு இடமாற்றப்பட்டது தான்!

இத்தகைய அதிகாரிகளை அரசாங்கம் மெத்தை மேல் வைத்துத் தாலாட்டும் போது அவர்கள் எப்படி தமது அடாவடித்தனங்களை கைவிடப் போகிறார்கள்? ■

# 'பொறுத்துக்கொள்ள முடியாத' கல்வீச்சும் மாவனெல்லையில் நடந்த 'சின்ன' சம்பவமும்

## எம்.பி.எம். பர்ஸான்

மாவனெல்லை நகரில் கடந்த வாரம் இடம்பெற்ற சம்பவம் இந்த நாட்டு முஸ்லிம் சமூகத்தவரை பல வழிகளிலும் சிந்திக்க வைத்திருக்கிறது.

எந்த விதமான அச்சமும் இல்லாமல் 'பாதுகாவலர்களின்' கண் முன்னாலேயே நகரம் தீக்கிரையாக்கப்பட்டதுடன், கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. காடையர்கள் கொள்ளையடித்த தொலைக்காட்சிப் பெட்டிகளை தூக்கி தோளில் வைத்துக் கொண்டு பிரதான வீதியால் நடந்து போகும் கண்கொள்ளாக் காட்சியை எமது நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் பொலிஸார் கைகட்டி நின்று ரசித்திருக்கிறார்கள்.

எல்லாம் நடந்து முடிந்த பின்னர் அரசாங்கம் அறிக்கை வெளியிட்டது.

மாவனெல்லையில் இனக்கலவரம் ஒன்றை தூண்டிவிட தீய சக்திகள் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டுவிட்டதாக அந்த அறிக்கையில் பெருமையுடன் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அந்த 'தீய சக்திகள்' எவை என்பதை தெரிந்து கொண்டதாலோ என்னமோ நாட்டின் ஏனைய பகுதிகளிலும் முஸ்லிம்கள் மத்தியில் ஒருவகையான கொந்தளிப்பு ஏற்பட்டது.

அந்த உளக்கொந்தளிப்பு வெள்ளிக்கிழமை ஜும்மாதொழுகையோடு உணர்ச்சி வடிவம் பெற்றது. கொழும்பில் சில இடங்களில் வன்முறைகள் வெடித்தன. மருதானையில் தொழுகை முடிந்து வந்த சிலர் பொலிஸாருக்கு கல்லெறிந்தார்கள்.

ஏதோ முஸ்லிம்கள் கொழும்பு நகரையே தீக்கிரையாக்க முட்படுகிறார்கள் என்பதுபோல் காட்ட, அவசியமே இல்லாத நேரத்தில் அரசாங்கம் மேல்மாகாண சபைக்குள் ஊரடங்கு சட்டத்தை அமுல் செய்தது. இது குறித்து கொழும்பு பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ஜெராட் இக்னேசியஸ் "தேவையில்லாத ஊரடங்குச் சட்டம்" என்று பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்திருந்தார். அன்று மாலை கொழும்பு நகர் பட்டபாடு...!

மாவனெல்லையில் பொலிஸ் ஊரடங்கு அமுலில் இருந்த போதுதான் அத்தனை அடாவடித்தனங்களும் நடத்தி முடிக்கப்பட்டன. ஆனால் கொழும்பில் பொலிஸாருக்குக் கல்லெறிந்தவுடன் 'இத்தகைய செயல்களை பொறுத்துக் கொள்ளப்போவதில்லை' என்று அரசாங்கம் அறிவித்தது.

மாவனெல்லையில் நடந்த அனர்த்தத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி முக்கியஸ்த்தர் ஒருவர் தொடர்பு பட்டிருப்பதாக அனேகமான பத்திரிகைகள் சுட்டிக்காட்டியிருந்தன. என்றாலும் அதுகுறித்து ஒரு வார்த்தைகூட கூறாத அரசாங்க தகவல் திணைக்கள செய்திக்குறிப்பு, இனரீதியிலான வதந்திகளை பரப்புபவர்களுக்கு அவசர கால சட்டத்தின் கீழ் என்ன தண்டனை வழங்க முடியும் என்பதை மட்டும் மக்களுக்கு ஞாபகமூட்டியது. அதன்படி இனக்கலவரங்கள் தொடர்பாக வாய் திறப்பது 20 வருடம் சிறைவைக்கக்கூடிய குற்றம்.

ஆனால் காடையர்களுக்கு இனவெறியை ஊட்டி நகரங்களை தீ வைப்பது...? (அது பற்றி யாரும் கேள்வி கேட்கக்கூடாது அது "தீய சக்திகளின்" வேலை)

மாவனெல்லை நகரம் எரிக்கப்பட்டு அப்பாவிக் குடும்பஸ்தர் கொல்லப்பட்டு பலர் காயமடைந்ததை விடவும் சில முஸ்லிம் பிரதிநிதிகள் ரொம்பவும் கவலைப்பட்டது மருதானையிலும் மாளிகாவத்தையிலும் பஸ்சுக்கு கல்லெறிந்தது தொடர்பாகத்தான்.

கொழும்பில் நடந்த அசம்பாவிதங்களை அமைச்சர் அலவி மௌலான கடுமையாக கண்டித்திருந்தார். அவர் அரசாங்கத்துக்கு நன்றியுடையவராக இருப்பதில் தப்பில்லை. ஆனால் மாவனெல்லையில் நடந்த அத்தனை பெரிய சம்பவத்துக்கு உருப்படியாக ஒரு கண்டனம் கூடத் தெரிவிக்காமல் வெறுமனே பொலிஸாரை மட்டும் திட்டித் தீர்ப்பது எய்தவனிருக்க அம்பை நொய்த கதையாக இல்லையா...?

எல்லாம் முடிந்த பின்னர் சனிக்கிழமை இரவு ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

அதில் முட்டங்காலுக்கும், மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுவது போல எங்கோ நடக்கும் ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கும் மாவனெல்லையில் நடந்த அனர்த்தங்களுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

மாவனெல்லையில் நடந்தது ஒரு சின்ன சம்பவம் என்றும் அரசாங்கத்தின் கெட்டித்தனமான 'உடனடி நடவடிக்கையினால்' பெரும் இனக்கலவரம் தவிர்க்கப்பட்டதாகவும் ஜனாதிபதி நாட்டு மக்கள் எல்லோருக்கும் சொல்லி வைத்தார்.

வசதியான நேரத்தில் பிரயோகிப்பதற்கென்று சில வார்த்தைகளை கைவசம் வைத்திருக்கிறார்கள். போரின் போது படையினர் தமது பாரிய முகாம் ஒன்றை இழந்தால் கூட "தந்திரோ பாயமாக பின்வாங்கினோம்" என்பார்களே அதுபோல தென்னிலங்கையில் ஏதேனும் நடக்கக்கூடாதது நடந்து விட்டால் அதன் பலியை 'தீய சக்தி என்றொரு கற்பனா பாத்திரத்தின் மேல் போட்டுவிடுவதுதான் அரசாங்கத்தின் வாடிக்கை.

அரசாங்கத்தின் கருத்துப்படி மாவனெல்லையில் நடந்த "சின்ன சம்பவத்துக்கும்" இந்த தீய சக்திதான் காரணம்.

இம்முறை ஐ.தே.க.வை குற்றம் சாட்டும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட மறைமுக பிரசாரங்கள் பெரிதாக எடுபடவில்லை. அத்தோடு இது சிஹல உறுமய போன்ற இனவாத கட்சிகள் தூண்டிவிட்ட இன ஒழிப்பு நடவடிக்கை என்பதையும் மக்கள் நம்புவதாக இல்லை. எல்லாம் "அவன்" செயல் என்பது அனேகமாக எல்லோருக்கும் தெரியும்.

இந்த நாட்டு முஸ்லிம் மக்களின் தலைமைத்துவ வெற்றிடத்தை தெளிவாக உணர்த்திய ஒரு நிகழ்வாகவும் இது அமைந்துள்ளது.

உண்மையாகவே முஸ்லிம்களுக்காக யார் குரல் கொடுக்கப் போகிறார்கள் என்ற கேள்வி இன்று பல தரப்புகளில் இருந்து எழுப்பப்படுகின்றது.

அமைச்சர் அலவி, பௌஸி உட்பட பலரும் மாவனெல்லைக்கு சென்று பாதிக்கப்பட்ட மக்களை நேரில் பார்வையிட்டுள்ளார்கள். இது ஒரு வகையில் ஆறுதல் தரும் விடயமாக இருந்த போதும் இதை வைத்து திருப்தி பட்டுக்கொள்ள முடியாது.

சம்பவம் நடந்த தினத்துக்கு மறுநாள் காலையிலேயே அமைச்சர் பேரியல் அஷ்ரப் லண்டன் சென்றுவிட்டார். இது வரவேற்கத்தக்க விடயமல்ல. அதிலும் இவரது சொந்த ஊர் கம்பளை. மாவனெல்லை கம்பளைக்கு மிக அருகில் உள்ள ஊர். எவ்வாறிருந்தாலும் அவரது லண்டன் விஜயம் மாவனெல்லை மக்களின் அன்றைய நெருக்கடியை விடவும் முக்கியமானதாக இருந்திருக்க வேண்டும்!?

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் நிலை நாட்டப்படும் விடயத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸினதும் அமைச்சர் ரவூப் ஹகீமினதும் பங்கு மிகப்பெரியதாக இருக்கப் போகிறது.

இந்த சம்பவம் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் சில உறுதியான கோரிக்கைகளை அரசாங்கத்திடம் முன் வைத்திருப்பதாகவும் அவை நிறைவேற்றப்படாவிடின் அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக்கொள்ளப் போவதாகவும் பத்திரிகைகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன என்பது குறித்து பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது.

மக்களின் கவனம் விலகும் வரை சூடாக அறிக்கை விட்டுக் கொண்டிருந்து பின்னர் 'நைசாக' மறந்துவிடும் தமது வழமையான கைங்கரியத்தை இது விடயத்திலும் முஸ்லிம் காங்கிரஸ் செய்து விடக்கூடாது என்பதையே முஸ்லிம்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஏனெனில், ஏற்கனவே அமைச்சர் அஷ்ரபின் ஹெலி. விபத்துக்கு சுயாதீன விசாரணை, 3 ஆணைக்குழுக்களை அமைக்க 100 நாள் காலக்கெடு, போன்ற சில விடயங்களுக்காகவும் இது மாதிரியான அச்சுறுத்தல்கள் முஸ்லிம் காங்கிரஸினால் அரசுக்கு விடுக்கப்பட்டது. பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக மறக்கப்பட்டது.

அந்த "மறதிக்கு" ஈடாக பிரதியமைச்சர் பதிவியொன்றோ அல்லது வேறெதுவுமோ கிடைப்பதுண்டு. இம்முறையும் அதுபோன்று ஆகிவிடக்கூடாது. ஏனென்றால் இது வெறுமனே மாவனெல்லை மக்களின் தனிப்பட்ட தகராறு அல்ல; இந்த நாட்டு முஸ்லிம்களின் இருப்புக்கு பேரினவாதம் விடுத்துள்ள மற்றொரு எச்சரிக்கை வேட்டு. இதற்கு முஸ்லிம்களின் தலைமைகள் சரியான முறையில் நடவடிக்கை எடுக்கத் தவறினால் பிற்காலத்தில் இதைவிட மோசமான விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரலாம்.

அதே நேரம் நாட்டில் பெரும்பான்மை சமூகங்களோடு பரந்துபட்டு வாழும் முஸ்லிம்களின் நிலை குறித்தும் கவனத்தில் எடுக்கப்படுவது மிகவும் அவசியமானது.

உணர்ச்சிக் கொந்தளிப்பில் யாருக்காவது கல்லெறிவதால் மட்டும் எமது பிரச்சனைகளை தீர்த்துவிடமுடியாது. கடந்த வெள்ளிக்கிழமை தலைநகரின் சில பகுதிகளில் சிலர் நடந்து கொண்ட விதம் பாராட்டத்தக்கதல்ல. வீதியில் போகும் பொது மக்களுக்கும் அரசாங்க பஸ்களுக்கும் கல்லெறிந்தார்கள். அதனால் ஏது லாபம்? அதைவிட சீ.ரி.பி.பஸ்ஸில் கல்லடித்து உடைக்க என்ன இருக்கிறது! ▫



# தமிழகத்தில் மீண்டும் அம்மா ஆட்சியா?

மே 10 ஆம் நாள் தமிழகத்தில் வாக்குப்பதிவு நடைபெற்றுவிட்டது. எண்ணிக்கை 13ம் திகதி தொடங்கியிருக்கிறது. அனைத்து வாக்குச் சாவடிகளிலும் மின்னணு இயந்திரங்கள் பயன்படுத்தப்படவிருப்பதால் முடிவுகள் அன்றே வெளியாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் அன்று வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை எனத்தோன்றுகின்றது. இன்றைய சூழ்நிலையைப் பார்த்தால், ஜெயலலிதா தலைமையிலான அணி அதிக இடங்களில் வெற்றி பெறும் என்பதே இன்றைய கணிப்பு.

கடந்த ஒரு மாதத்தில் நான்கைந்து கருத்துக் கணிப்புக்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. ஒன்றிலாவது தி.மு.க அணிக்கு வெற்றி வாய்ப்பு என்று கூறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னுஞ் சொல்லப் போனால் அ.இ.அ.தி.மு.க அணிக்கு மிகப் பெரும் வெற்றி காத்திருக்கின்றது என்பதே பொதுவான ஆரூடம். கடைசியாக வெளிவந்த 'இந்தியா டுடே' நடத்திய கணிப்பு மட்டும்தான் முடிவுகள் இழுபறியாக இருக்கும் எனக்கூறுகிறது. ஆனால் அதன்படிகூட அ.இ.அ.தி.மு.க தான் முதல் நிலையில் இருக்கிறது.

பதினைந்து நாட்களில் ஏறத்தாழ 3,000 கிலோமீட்டர் தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் செய்து, மக்களிடம் பேசிப் பார்த்த பிறகு, எனக்குத் தோன்றுவதெல்லாம் ஜெயலலிதா முன்னிலையில் இருக்கிறார் என்பதுதான். அவர் கட்சிக்கோ அல்லது அவரது அணிக்கோ அறுதிப் பெரும்பான்மையான இடங்கள், 118 தொகுதிகள், கிடைக்காமல்கூட போகலாம். ஆனால் அ.இ.அ.தி.மு.க.வே தனிப்பெரும் கட்சியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. மக்களது மனநிலையினை துல்லியமாக எடைபோடுவது தனிப்பட்ட நிருபர்களுக்கு சற்று கடினமான செயல்தான்.

எந்தப்பகுதியில் எந்தெந்தத் தரப்பினரிடம் கருத்துக் கேட்டால் ஓரளவு முடிவுகளை சரியாகக் கணிக்கமுடியும் என்பதையெல்லாம் ஆய்ந்து, அதற்கேற்ப செயல்படுவது விஞ்ஞானபூர்வமாக நடத்தப்படும் கருத்துக்கணிப்புக்கள்தான். (அவற்றின் முடிவுகளிலேயே முரண்பாடுகள் இருக்கின்றன என்பது வேறு விஷயம்.)

அதே நேரம் தனிப்பட்ட நிருபர்களின் மதிப்பீடுகளிலும் சில பொதுவான அம்சங்கள் வெளிப்படத்தான் செய்கின்றன. உதாரணமாக எனது சுற்றுப்பயணத்தின் போது "தி.மு.க.வின் சின்னமான உதய சூரியனுக்கு வாக்களிக்கப்போகிறேன்" என்று கூறியவர்களின் எண்ணிக்கை மிகவும் சொற்பமே. மாறாக "இரட்டை இலைக்கே எங்கள் வாக்கு" என்று உரத்துக் கூவியவர்களே அதிகம்.

ஒருக்கால் அ.இ.அ.தி.மு.க ஆதரவாளர்களைத்தான் அதிகம் நிருபர் எதிர்கொண்டிருக்கக்கூடும். ஆனாலும் கூட மக்களில் பலர் அ.இ.அ.தி.மு.க.விற்கு வாக்களிக்கத் தயாராகவிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

குறிப்பாகத் தென்மாவட்டங்களில் ஜெயலலிதாவிற்கு ஆதரவான சூழ்நிலையே இருக்கிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் தென்மாவட்டங்களில்தான் அ.இ.அ.தி.மு.க அணி அமோக வெற்றி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அதிக எண்ணிக்கையில் வாழும் தேவரின மக்களிடையே அக்கட்சிக்கு நல்ல செல்வாக்கு. நாடார்களின் ஆதரவினை கணிசமான அளவில் பெற்றிருக்கும் தமிழ் மாநில காங்கிரஸ் அ.இ.அ.தி.மு.க கூட்டணியில், அதே நேரம் தென்பகுதியில் குறிப்பிடத் தகுந்த அளவு ஆதரவு பெற்ற வை.கோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் தனித்துப் போட்டியிடுகிறது.

அது தி.மு.க.விற்கு ஆதரவான வாக்குக்களை பல தொகுதிகளில் பிரிக்கக் கூடும். தி.மு.கவிற்கு சாதகமான அம்சங்களும் இல்லாமலில்லை. தாழ்த்தப்பட்ட இரு சமூகத்து மக்களின் வாக்குக்கள் அந்த அணிக்கே கிடைக்கும், காரணம் புதிய தமிழகமும், விடுதலைச் சிறுத்தைகள் இயக்கமும் அந்த அணியில் இடம் பெற்றிருப்பதால்.

தவிரவும் தமிழ் மாநில காங்கிரஸ் மற்றும் காங்கிரஸ் கட்சிகளுக்கு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி பகுதிகளில் மிகக்குறைவான இடங்களையே ஜெயலலிதா விட்டுக் கொடுத்திருப்பதால், அங்கெல்லாம் சற்றே வலிமையுடன் இருக்கும் இரு காங்கிரஸ் கட்சிகளின் தொண்டர்களிடையே கடும் அதிருப்தி; சில இடங்களில் அதிருப்தியாளர்கள் களத்திலேயே இறங்கி விட்டார்கள்.

வடமேற்கு, மற்றும் மேற்கு மாவட்டங்களிலும் அ.இ.அ.தி.மு.க.வே முன்னணியில் இருக்கிறது. ஆனால் வட மாவட்டங்களில்தான் மாநிலத்தின் எதிர்காலம் முடிவு செய்யப்படக்கூடும். எழுபதிற்கும் மேற்பட்ட தொகுதிகள் இம்மாவட்டங்களில் இருக்கின்றன. பொதுவாகவே தி.மு.க.வின் கோட்டையாக இப்பகுதி விளங்கியிருக்கிறது.

முதன் முதலில் தி.மு.க தேர்தல்களில் பங்கெடுத்தது 1957ல்தான். அன்றிலிருந்து இன்றுவரை மிக மோசமான தோல்விகளை தி.மு.க சந்தித்தபோதுகூட வடமாவட்டங்களில் அதிக வெற்றிகளைப் பெற்றிருக்கிறது.

எனவேதான் கருணாநிதிக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் வளர்ச்சி பிடிக்கவேயில்லை அதை எப்படியாவது ஒடுக்கிவிடவே அவர் முனைந்தார். தி.மு.க தோல்வியுறக்கூடும் என்று பரவலாகப்பேசப்பட்ட 1991 ஆம் ஆண்டு தேர்தல்களில்கூட பா.ம.க.வை தன் அணிக்கு இழுத்துக் கொள்ள கருணாநிதி தயாராக இல்லை.

இரண்டாண்டுகளுக்கு முன்பு வேறு வழியில்லாமல் பா.ம.க.வுடன் கூட்டணி வைத்துக்கொள்ள அவர் சம்மதித்தார். ஆனால் தேர்தல்கள் முடிந்து சில மாதங்கள் கழித்து வாழப்பாடி ராமமூர்த்தியை வைத்து, டாக்டர் ராமதாசிற்கு தலைவலி கொடுத்தார். அவரை கண்டிக்க மறுத்தார். ராமதாசின் சிபாரிசுகளை வேண்டுமென்றே அலட்சியப்படுத்தினார். பாண்டிச்சேரியில் எங்களது ஆட்சிவரவேண்டும் என்று ராமதாசின் கோரிக்கையினை நிராகரித்தார். எந்த ஒரு கட்டத்திலும் ராமதாசை சமாதானப்படுத்த கலைஞர் முன்வரவில்லை என்பதையும் இங்கே நோக்கலாம்.

"நான் அணி மாறினாலும் மாறி விடுவேன்" என்று தொடர்ந்து மறைமுகமாக இராமதாஸ் பயமுறுத்தியும், கருணாநிதி அதைக் கண்டுகொள்ளவில்லையென்றால், பா.ம.க தேசிய ஜனநாயகக் கூட்டணியை விட்டு வெளியேறட்டும் என்று அவர் நினைத்தார் என்றுதானே பொருள். அதாவது தனது கட்சி, தனது அணி தோல்வியுற்றாலும் சரி, பா.ம.க வளர்ச்சிக்கு மறந்தும் தான் உதவிடக்கூடாது என்று அவர் கருதினார் என்பது தெளிவாகிறது. எப்படியோ வட பகுதியில் தனக்கிருக்கும் செல்வாக்கினை காப்பாற்றிக் கொள்வதில் தி.மு.க தொடர்ந்து கவனமாயிருந்திருக்கிறது.

வடமாவட்டங்களில் கலைஞர், ஜெயலலிதா, ராமதாஸ் என எல்லோருக்கும் நல்ல கூட்டம் கூடினாலும், ஜெயலலிதா விற்கே முதல் இடம் என்பதை மறுக்கவியலாது. தலித் மக்களின் ஆதரவைப் பெற்றுள்ள விடுதலைச் சிறுத்தைகள் தி.மு.க அணியில் இருப்பது அதற்கு வலுவூட்டுகிறது என்றாலும், கடந்த இரண்டு தேர்தல்களில் வெளியான உண்மையென்னவென்றால், தலித்துக்கள் அரசியல் அதிகாரம் பெற போராடும் போது, மற்ற உயர், இடைநிலை சாதியினரெல்லாம் எதிரணியில் திரள்கிறார்கள்.

சாதி ரீதியாக வன்னியர்களை அணி திரட்டுவதில் குறிப்பிடத்தகுந்த அளவு வெற்றி கண்டுள்ள பா.ம.க., எந்த அளவு தி.மு.க வாக்குகளைப் பிரிக்கும் என்பதைப் பொறுத்தே வடமாவட்டங்களில் முடிவு அமையும்.

ராமதாசின் சந்தர்ப்பவாத அரசியல், தனது மகனுக்கும், மற்ற உறவினர்களுக்கும் கொடுத்து வரும் முக்கியத்துவம், பொதுவான அவரது வளப்பமான வாழ்நிலை, இவையெல்லாம் இன்னமும் பின் தங்கிய வகுப்பினராக வாடும் இதர வன்னியர்களிடையில் கசப்புணர்வைத் தோற்றுவித்திருக்கிறது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் எந்த அளவு இந்த கசப்புணர்வு என்பதுதான் கேள்வி.

பாண்டிச்சேரியில் பா.ம.க தலைமையிலான ஆட்சி அமைக்கவேண்டும் என்ற ராமதாசின் கனவு ஏறத்தாழ நொறுங்கி விட்டது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. கூட்டணி வைத்துக்கொள்ள அதனையே முதல் நிபந்தனையாக வைத்தார். ஜெயலலிதா அதற்கு ஒத்துக்கொண்டவுடன் ஆனந்தக் கூத்தாடினார். காங்கிரசோடு சமரசம் இல்லையென்றார். அந்த சிறிய பிரதேசத்தில் தெருவுக்குத் தெரு கூட்டங்கள் நடத்தினார். தான் வெற்றிபெற்று விட்டோம் என்ற இறுமாப்பில் மூத்த தலைவர்களுக்கு டிக்கெட் கொடுக்க மறுத்தார்.

இப்போது நிலையென்ன? கட்சி பிளவு பட்டது. பாண்டிச்சேரியில் இன்னமும் வலிமையான நிலையில் உள்ள காங்கிரசுடன் கூட்டு இல்லையென்றானவுடன் தொண்டர்களே உற்சாகமிழந்தனர். அ.இ.அ.தி.மு.க விற்கோ அங்கே அவ்வளவாக செல்வாக்கொன்றும் கிடையாது.

முதலில் ஆட்சி அமைக்கும் உரிமை தரப்படாததால், காங்கிரஸ் அ.இ.அ.தி.மு.க-பா.ம.கவுடன் கூட்டணிக்கு வர மறுத்தவுடன், வழக்கம்போல் தடாலடியாக ஜெயலலிதா தனது கட்சி 20 தொகுதிகளில் போட்டியிடும் என்று அறிவித்தார்.

ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட பத்து தொகுதிகளுடன் திருப்திப் பட்டுக்கொள்ள வேண்டிய நிலை பா.ம.கவிற்கு. சட்டமன்றத்தில் 30 இடங்கள்தான்.

இவ்வாறு பல்வேறு வழிகளில் ஏமாற்றமடைந்த, அவமானப்படுத்தப்பட்ட பாதிக்கப்பட்ட பாட்டாளி மக்கள் கட்சி, இரண்டு, மூன்று தொகுதிகளில்கூட வெற்றி பெறுவது கடினம் என்று கூறப்படுகிறது.

தி.மு.க தலைமையில் ஓர் அணி, காங்கிரஸ் தலைமையில் மற்றொன்று, பிறகு அ.இ.அ.தி.மு.க-பா.ம.க என்று மூன்று அணிகள் களத்தில். யாருக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது. தொங்கு சட்டமன்றமே பாண்டிச்சேரியில் அமையும் என்பது பொதுவான கணிப்பு. தமிழ் நாட்டுத் தேர்தல்களுக்கு வேறொரு பரிமாணமும் இருக்கிறது. அது மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கைகளின் தாக்கம்.

விவசாய விளைபொருட்களின் விலை கடும் வீழ்ச்சியடைந்திருக்கின்றன. கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களின் தயாரிப்புக்களை வாங்குவோரில்லாமல், அல்லது விற்பனை செய்ய சரியான வழி தெரியாமல், தாங்கொணா வறுமையில் வாடுகிறார்கள். தாராளமயமாக்கலுக்குப்பிறகு சுதேசித் தொழிலே நசித்துப் போய் பல்வேறு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன, ஆட்குறைப்பு, லே ஆ்ப் என பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் நடுத்தெருவில், தமிழ்நாட்டின் மிகப்பெரிய தொழில் நகரமான கோவை மக்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள்.

பிரசித்திபெற்ற சேலம் உருக்காலை தனியாருக்கு விற்கப்படவிருக்கிறது. அதிலேயே பணிபுரிவோர், அதைச் சார்ந்த பல்வேறு துறைகளில் ஈடுபட்டிருப்போர் என ஆயிரக்கணக்கில் தொழில் முனைவோரும், தொழிலாளர்களும் தங்கள் எதிர்காலம் என்னவாகுமோ என்ற அச்சத்தில் இருக்கிறார்கள். இவ்வாறு பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தி.மு.க.விற்கு வாக்களிக்க முன்வருவார்களா என்ன?

புதிய பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்துவதில் மத்தியில் பாரதீய ஜனதா அரசும், குறிப்பாக தொழிற்துறை அமைச்சர் முரசொலிமாறனும்தான் முனைப்பாக இருக்கிறார்கள். எனவே தி.மு.க-பா.ஜ.க அணி தண்டிக்கப்படவேண்டும் என்று வாக்காளர்கள் நினைப்பது நியாயம்தானே?

இவையெல்லாவற்றையும் தாண்டி கடந்த ஐந்தாண்டு கால கருணாநிதி ஆட்சி பல்வேறு நலத்திட்டப் பணிகளை நிறைவேற்றியிருக்கிறது. அத்துமீறல்கள் கட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தன. பெரிய அளவில் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் இல்லை. யார்தான் லஞ்சம் வாங்கவில்லை என்று பொதுவாக மக்கள் கேட்டாலும், ஜெயலலிதா ஆட்சியின் உச்சகட்ட திருவிளையாடல்களை எவரும் மறந்து விடவில்லை. அ.இ.அ.தி.மு.க விற்கே தங்கள் வோட்டு என்று சொல்வோர் கூட "கருணாநிதிதான் ஜெயலலிதாவை விட நல்ல முதல்வர், நிர்வாக இயந்திரத்தை சீராக இயக்கியிருக்கிறார், ஜெயலலிதாவிற்கு விதிக்கப்பட்ட தண்டனைகள் பழிவாங்கும் நடவடிக்கை என்று கூறமுடியாது," என்றெல்லாம் கருத்து தெரிவித்திருக்கின்றனர்.

பின் ஏன் அ.இ.அ.தி.மு.கவிற்கு வாக்களிக்க வேண்டும்? பணப்புழக்கமில்லை. ஜெயலலிதா ஆட்சியில் ஊழல் தாண்டவமாடினாலும், நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்கும் பொசிந்து வந்ததே, நாமும் பயன் பெற்றோமே, அதெல்லாம் கலைஞர் ஆட்சியில் நின்றுவிட்டதே என்று ஏக்கம் ஒரு சிலருக்கு.

சற்றுசிக்கலான தேர்தல்தான் இது. பெரிய அளவில் அனுதாப அலையோ, எதிர்ப்பு அலையோ இல்லாததொரு சூழல். தனிப்பட்ட வேட்பாளர்கள் பற்றி மதிப்பீடு, சாதி உணர்வு, அந்தந்தத் தொகுதியில் நிலவும் பிரத்தியேக பொருளாதாரப் பிரச்சனைகள், இப்படிப் பல்வேறு அம்சங்களைப் பொறுத்தே முடிவுகள் அமையும்.

---

# ஐ.தே.கவின் அரசாங்க கவிழ்ப்பு "கொடுக்கல் வாங்கல்"

**~சத்தியன்~**


கடந்த சில வாரங்களாக ஐக்கிய தேசிய கட்சிக்குள் வீசிய புயல் ஓய்ந்து விட்டதாக வெளியில் தென்பட்டாலும் அது முற்றிலுமாக முடிவுபெறவில்லை என்பதை அந்தக் கட்சிக்குள் இருக்கும் முக்கியஸ்தர்கள் சிலருடன் கதைக்கும் போது அறியக் கிடைக்கிறது.

இவ்வாறான உட்கட்சி பூசல்கள் எதிரணிக்குள் ஏற்படும்போது அது குறித்து மிகவும் ஆர்வம் காட்டுவதும் மகிழ்ச்சி கொள்வதும் அரச தரப்புதான். தமது 17 வருட ஆட்சிக் காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் குழப்பங்கள் தோன்றிய போதெல்லாம் இந்த சந்தோஷத்தை ஐ.தே.க. தாராளமாக அனுபவித்தது.

தொடர்ச்சியான தேர்தல் தோல்விகளை சந்தித்து நீண்ட காலம் எதிர்கட்சி ஆசனத்தில் இருக்க நேரிடும் போது தலைமைத்துவத்துக்கு எதிராக இவ்வாறான அதிருப்திகள் சகஜமானவை.

சுதந்திரக் கட்சியைப் பொறுத்த வரையில் இதுவொரு பிரச்சனையல்ல. ஏனெனில் அந்தக் கட்சியில் பண்டாரநாயக்கா குடும்பத்தவர் அல்லாத ஒருவர் தலைவராக வர முடியாது என்று எழுதாத சட்டம் அமுலில் இருக்கிறது. 'பண்டாரநாயகர்களே' விரும்பிக் கொடுத்தாலும்கூட அந்தக் கட்சிக்கு தலைமை தாங்க வேறெவரும் முன்வரப்போவதில்லை. ஆனால் ஐ.தே.க.வின் நிலைமை வேறு. இதில் இப்போது இருப்பவர் சுதந்திரத்துக்குப் பின்னர் உருவான 8 ஆவது தலைவர். இவர்களுள் 5 பேர் முற்றிலும் மாறுபட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

இம்முறை வரவு செலவுத் திட்ட விவாதம் மீதான வாக்கெடுப்பின்போது பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை தோற்கடிக்க ஐ.தே.க. உறுப்பினர்கள் மேற்கொண்ட முயற்சிக்கு ரணில் விக்கிரம



சிங்க போதிய ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்கவில்லை என்பதே கட்சிக்குள் தலைமைத்துவத்துக்கான எதிரான 'புரட்சிக்கு' பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது.

இது விடயம் தொடர்பில் தற்போது சுவையான பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தைத் தோற்கடிக்கும் முயற்சிக்கு சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவை ஐ.தே.க. திரட்டியது.இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐ.தே.க.வுடன் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கப் போவதாக ஒரு கதை அரசியல் வட்டாரங்களில் வலம்வந்தது.

இ.தொ.க. தலைமையகமான சௌமிய பவான் அரசாங்க வங்கியொன்றுக்கு ஈடு வைக்கப்பட்டுள்ளதாகவும் அதனை மீட்டெடுக்க 9 கோடி ரூபா அவசியம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. வரவு செலவுத் திட்டத்தில் இ.தொ.கா., அரசாங்கத்தை எதிர்த்து வாக்களித்தால் ஐ.தே.க. 9 கோடி ரூபாவை அந்தக் கட்சிக்கு வழங்கும் என்று ஓர் உடன்பாடு.

இந்த நாட்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளர்களுக்கு 400 ரூபா சம்பள அதிகரிப்பு கோரி ஹட்டனில் சத்தியாக்கிரகம் நடத்தி வந்தது ஞாபகமிருக்கும். இந்தக் கொடுக்கல் வாங்கல் சரிப்பட்டு வருமென்றால் 400 ரூபா பிரச்சனையை முன்னிறுத்தி இ.தொ.கா. அரசாங்கத்தை எதிர்த்து வாக்களிக்கும் என்பதுதான் திட்டம்.

இந்தச் செயற்திட்டத்தை அமுல்படுத்த சில ஐ.தே.க எம்.பிக்கள் மும்முரமாக ஓடித்திரிந்தார்கள். தமக்கு சாதகமான சில வர்த்தகர்கள் மூலமாக பணமும் திரட்டப்பட்டது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க இதில் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. எல்லாவற்றையும் ஒரு மூலையில் வைத்துவிட்டு அவர் நோர்வே நாட்டிக்குப் பறந்து விட்டார்.

இதனால்தான் காமினி அத்துக்கோரள, வீ.ஜே.மு.லொகுபண்டார, கரு ஜயசூரிய உள்ளிட்ட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ரணிலை அகற்றிவிட்டு அரசாங்கத்தை கவிழ்க்கும் திட்டத்துக்கு வேறொருவரைத் தலைவராக்க வேண்டும் எனக்கூறி 'புரட்சி' செய்தனர்.

அதாவது அரசாங்கத்தைக் கவிழ்க்க உதவவில்லை என்பதற்காக ரணிலை கவிழ்க்கத் திட்டமிட்டார்கள். எப்படியோ இந்தத் திட்டம் பலிக்காமல் போய்விட்டது. இதனை ஊதிப்பெரிது படுத்த அரசாங்கம் பெரும் முயற்சி எடுத்தது. ஆனால் அது நினைத்த அளவு சாத்தியப்படவில்லை.

எவ்வாறிருந்தாலும் ஐ.தே.க.வுக்குள் தற்போது தற்காலிக அமைதி நிலவுகிறது. இப்போது நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றின் மூலம் அரசைக் கவிழ்க்கும் முயற்சி தீவிரமாக்கப்பட்டிருக்கிறது. தான் அரசாங்கத்துக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பதாகக் காண்பிக்க வேண்டிய கட்டாயத்தில் ரணில் இருக்கிறார்.

அடுத்த மாதமளவில் பாராளுமன்றில் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வர ஐ.தே.க. திட்டமிட்டு வருகின்றது. இதற்கு முஸ்லிம் காங்கிரசினதும் இ.தொ.கா.வினதும் ஆதரவு நாடப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த இரண்டு கட்சிகளினதும் முக்கியஸ்தர்கள் அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புகளை வகிக்கின்றனர். ஐ.தே.க.வுக்கு ஆதரவளிக்கப் போய் மீண்டும் ஒரு ஸ்திரமற்ற நிலைக்குள் விழ இவர்கள் விரும்பப் போவதில்லை. ஆனால் உண்மையாகவே அரசாங்கத்தை வீழ்த்தும் முயற்சி எனத் தென்பட்டால் இந்தச் சிறுபான்மைக் கட்சிகள் இரண்டினதும் ஆதரவு ஐ.தே.க.வுக்கு கிடைக்க வாய்ப்புண்டு.

அத்துடன் பாராளுமன்ற எண்ணிக்கை விளையாட்டுக்களில் ஜே.வி.பி.யின் 10 ஆசனங்களும் புறக்கணிக்க முடியாதவை. ஜே.வி.பி. அரசாங்கத்துக்கு எதிராக என்னதான் தொண்டை கிழிய கத்தினாலும் ஐ.தே.க ஆட்சியமைக்கும் ஒரு நிலைக்கு உதவுவார்களா என்பது நிச்சயமில்லை.

## அலசுவது - இராஜதந்திரி

# 'ஒப்பரேஷன் பாலைவனச்சூறாவளி'யின் தளபதியைச் சந்தித்த கதிர்காமர்!

இலங்கையில் இதுவரை ஏராளமான இராணுவ நடவடிக்கைகள் பல்வேறு பெயர்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1987ம் ஆண்டு இலங்கை இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக நடத்திய முதலாவது இராணுவ நடவடிக்கையின் பெயர் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்பதாகும். வடமராட்சிப் பகுதியிலேயே இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் இதனை வடமராட்சி ஒப்பரேஷன் எனவும் அழைத்தனர்.

எனவே 1987ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட வடமராட்சி இராணுவ நடவடிக்கை முதல் இறுதியாக கடந்தவாரங்களில் தென்மராட்சியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேஷன் 'அக்னிச்சுவாலை' வரை பல்வேறு பெயர்களிலும் வடக்கு-கிழக்கில் நிறையவே இராணுவ நடவடிக்கைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளும் பூநகரியில் 'தவளைப்பாய்ச்சல்' என்ற பெயரிலும், 'ஓயாத அலைகள்' என்ற பெயரில் முல்லைத்தீவு கிளிநொச்சி, ஆனையிறவு ஆகிய பகுதிகளிலும் தமது தரப்பு தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளும், அரச படையினரும் பரஸ்பரம் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளில் ஆட்சேதங்களும், ஆயுத தளபாடங்களின் இழப்புக்கள் என்ற ரீதியில் பெருமளவு பண விரயமுமே கடந்த பத்தாண்டு காலத்துக்கும் மேலாக ஏற்பட்டு வருகின்றதே தவிர, இராணுவ ரீதியாக எதையும் இருதரப்புமே ஆக்கபூர்வமாகச் சாதிக்க முடியாதாவையாக இருந்து வருகின்றன.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை கடந்தவாரம் அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டனில் சந்தித்த அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜெனரல் கொலின் பவல் கூட இராணுவ நடவடிக்கை மூலம் இலங்கை இனப் பிரச்சனைக்குத் தீர்வைக் காண முடியாதென்பதைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

வடக்கே ஆயுதப் படையினர் மேற்கொண்ட ஒப்பரேஷன் 'அக்னிச் சுவாலை' இராணுவ நடவடிக்கையையடுத்தே திரு.லக்ஷ்மன் கதிர்காமர் வாஷிங்டன் பயணமாகியிருந்தார். ஆயினும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சு இப்பயணம் ஒருமாதத்துக்கு முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவித்திருந்தது.

சர்வதேச அரசியல் நிலபரங்களைப் பொறுத்தவரை அமெரிக்க இராஜாங்க அமைச்சர் பதவி செல்வாக்குமிக்கதாகவே விளங்குகின்றது. அமெரிக்காவின் வெளிவிவகார மற்றும் சர்வதேச பிணக்குகள் சம்பந்தப்பட்ட இராஜதந்திர நடவடிக்கைகளை இராஜாங்க அமைச்சே கையாளுகின்றது.

தற்போது இப்பதவியை வகித்துவருகின்ற ஜெனரல் கொலின் பவல் பல்வேறு விதத்திலும் முக்கியத்துவம் மிக்கவராகவே இருக்கின்றார்.

அமெரிக்காவில் கறுப்பினத்தவர்கள்மீது பாரபட்சம் காட்டப்படுவது இன்றுங்கூட இருந்து வருகின்றது.

இருப்பினும் அமெரிக்க அரசாங்கத்தில் மிகவும் செல்வாக்குமிக்க பதவியாகவிருக்கும் இராஜாங்க அமைச்சர் பதவியை வகிக்கும் முதலாவது கறுப்பினத்தவர் என்ற பெருமையை ஜெனரல் கொலின் பவல் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வில்லியம் புஷ்ஷின் தந்தையாரும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியுமான ஜோர்ஜ் புஷ்ஷின் ஆட்சிக் காலத்தில் அமெரிக்க ஆயுதப் படைகளின் பிரதம தளபதி என்ற மிகப் பொறுப்பு வாய்ந்த பதவியையும் ஜெனரல் கொலின் பவல் வகித்திருந்தார்.

1991ம் ஆண்டு குவைத் நாட்டினுள் ஈராக் ஆக்கிரமிப்பை நடத்தியிருந்தது. அப்போது ஜோர்ஜ் புஷ் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்தார்.

குவைத்தை ஆக்கிரமித்த ஈராக்கியப்படைகளை விரட்டியடிக்க அமெரிக்கா பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கையொன்றை மேற்கொண்டிருந்தது.

இந்த இராணுவ நடவடிக்கையில்



ஜெனரல் கொலின் பவல்

அமெரிக்கா மட்டுமல்ல. அதனோடு பிரிட்டன், ஜெர்மன், பிரான்ஸ், கனடா உட்பட மேற்கத்தேய நாடுகள் பலவும் ஒன்று சேர்ந்து ஈராக்கியப் படைகளை குவைத்திலிருந்து வெளியேறச் செய்யும் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டன.

'ஒப்பரேஷன் பாலைவனச் சூறாவளி' **(Operation Desert Storm)** என்ற பெயரிலேயே அந்த இராணுவ நடவடிக்கை அமெரிக்காவினாலும் அதன் நேச நாட்டுப் படைகளினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் நேச நாட்டுப்படைகள் யுத்தமொன்றுக்காக ஒன்று சேர்ந்து கொண்டமை 'ஒப்பரேஷன் பாலைவனச் சுறாவளி' இராணுவ நடவடிக்கைக்காகவே என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பெரும் இராணுவ நடவடிக்கையைத் திட்டமிட்டதோடல்லாமல், அதனை வழிநடத்துவதில் ஜெனரல் கொலின் பவல் முக்கிய பங்கேற்றிருந்தார்.

இதன் காரணமாக அமெரிக்காவில் ஜெனரல் கொலின் பவல் மிகவும் பிரபலமடைந்திருந்தார். கடந்த ஆண்டில் நிகழ்ந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின்போது அமெரிக்க உப ஜனாதிபதிப் பதவிக்கும் ஜெனரல் கொலின் பவலை நிறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டது.

இருப்பினும் மிகவும் பொறுப்புமிக்கதும், இராஜதந்திர மற்றும் சர்வதேச இராணுவ நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கையாள வேண்டியதுமான இராஜாங்க அமைச்சர் பதவிக்கு ஜெனரல் பவலே பொருத்தமானவராகக் கருதப்பட்டார். இதனால் அவருக்கு அப்பதவி வழங்கப்பட்டிருந்தது.

இலங்கையின் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த வாரம் மே 4ந் திகதியன்று வாஷிங்டனில் ஜெனரல் கொலின் பவலைச் சந்தித்திருந்தார்.

உள்நாட்டுச் சர்ச்சைக் குள்ளாகியுள்ள ஒரு நாட்டின் வெளியுறவு அமைச்சர் என்ற ரீதியில் திரு.கதிர்காமர், இராஜாங்க அமைச்சர் ஜெனரல் பவலைச் சந்தித்து, இலங்கையின் தற்போதைய நிலபரம் தொடர்பாக விளக்கமளித்திருந்தார்.

திரு. கதிர்காமரது விளக்கத்தைச் செவிமடுத்த ஜெனரல் கொலின் பவல் பதிலளிக்கையில், இலங்கையின் இனப்பிரச்சனைக்கு இராணுவ ரீதியிலான அணுகுமுறை ஒரு தீர்வாக அமைய முடியாதென்பதை எடுத்துக் கூறியிருந்தார்.

அத்துடன் இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசியல் பேச்சுவார்த்தைகளை நடத்தி பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முன்வரவேண்டுமென ஜெனரல் பவல் குறிப்பிட்டிருந்தார்.

ஜெனரல் பவல் அமெரிக்க அரசாங்கத்தில் ஒரு பொறுப்புமிக்க பதவியை வகிக்கின்றபோதிலும், அவரது பின்னணி பெருமளவு இராணுவ ரீதியிலான அனுபவங்களைக் கொண்டதாகவே இருக்கின்றது.

அமெரிக்க இராணுவத்தின் பிரதம தளபதியாக இருந்தவர் என்ற வகையில் ஜெனரல் பவல் சர்வதேச ரீதியான இராணுவ விடயங்கள் பலவற்றையும் நன்கறிந்து வைத்திருப்பார் என்றே எதிர்பார்க்க முடியும்.

ஜெனரல் பவலைச் சந்தித்த வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு சட்டத்துறை, மற்றும் அரசியல் ரீதியான பின்னணிகள் மட்டுமே இருக்கின்றன.

ஆனால் ஜெனரல் கொலின் பவல் உலகின் முக்கிய வல்லரசான அமெரிக்காவின் இராணுவ ரீதியான பின்னணியைக் கொண்ட ஓர் இராஜாங்க அமைச்சராகவே இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில்கூட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்த அமைப்புக்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இருப்பினும் அமெரிக்கா தமிழீழ விடுதலை புலிகள் அமைப்புமீது இராணுவ நடவடிக்கைகள் தொடரப்படவேண்டும், அல்லது அந்த அமைப்போடு அரசியல் பேச்சுக்களை நடத்தக்கூடாது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலமே இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காண முடியுமென்பதையே அமெரிக்க அரசாங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளதை ஜெனரல் கொலின் பவல் குறிப்பிட்டவை மூலமாகத் தெரியவருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளையும் இலங்கை அரசாங்கத்தையும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டுமென்பதை மட்டும் ஜெனரல் கொலின் பவல் வலியுறுத்திக் கூறவில்லை.

நோர்வே இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக மேற்கொண்டுவரும் சமரச முயற்சிகளுக்கு அமெரிக்கா பூரண ஆதரவளிக்குமெனவும் ஜெனரல் பவல் திரு.கதிர்காமரிடம் கூறியிருந்தார்.

திரு.லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த வாரம் மே மாதம் 4ந்திகதி வெள்ளிக்கிழமையன்று ஜெனரல் கொலின் பவலைச் சந்தித்திருந்தார்.

இச்சந்திப்பின் முன்பதாக மற்றுமொரு முக்கிய சந்திப்பும் வாஷிங்டனில் இடம் பெற்றிருந்தது. கடந்தவாரம் மே 2ந் திகதி புதன் கிழமையன்று இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்சர் ஸிமொன் பெரஸும் ஜெனரல் கொலின் பவலை இஸ்ரேலிய, பாலஸ்தீன நெருக்கடி தொடர்பாகச் சந்தித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நோர்வேயின் மத்தியஸ்த்த முயற்சி காரணமாகவே நீண்டகாலமாகப் பிரச்சினைக்குள்ளாகியிருந்த இஸ்ரேலிய, பாலஸ்தீனப் சர்ச்சை ஒரு தீர்வைக்காணும் கட்டத்தை எட்டியிருந்தது.

ஆனால் நோர்வேயின் மத்தியஸ்தத்தோடு இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்துக்குமிடையே ஏற்பட்டிருந்த சமாதானம்கூட முறிவடைந்து போயுள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தொடர்ச்சியாக இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டு வருவதுடன் இருதரப்பிலும் நூற்றுக் கணக்கானவர்கள் கடந்த ஏழுமாதகாலத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

எனவே நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான இஸ்ரேலிய, பாலஸ்தீனத் தகராறு தீர்வொன்றைக் கண்டிருந்த போதிலும், மீளவும் இவ்விரு சாராரும் மோதலில் மூர்க்கமாகவே குதித்துள்ளனர்.

பாலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்குமிடையிலான தற்போதைய மோதல்கள் குறித்து அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவலுக்கு இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸிமொன் பெரஸ் விளக்கமளித்த இரு நாட்களின்பின்னர், இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஜெனரல் பவலைச் சந்தித்திருந்தார்.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண வேண்டுமென்றே சர்வதேச ரீதியாக எப்போதுமே வலியுறுத்திக் கூறப்பட்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது தரப்பின் ஒரு தலைப்பட்டசமான யுத்த நிறுத்தத்தை கடந்த ஏப்ரல் மாதம் 24ந் திகதி வாபஸ் பெற்றுக் கொண்டதையடுத்து படையினர்மீது நடத்திய தாக்குதல், புலிகள் தரப்பின் இராணுவ ரீதியான உறுதிப்பாட்டையே எடுத்துக் காட்டியிருந்தது.

புலிகளது ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டதையடுத்து 'அக்னிச் சுவாலை' என்ற பெயரில் ஆயுதப் படையினரே தாக்குதலை ஆரம்பித்தனர்.

ஆனால் அவர்கள் முற்றிலும் எதிர்பாராத விதத்திலேயே புலிகள் தரப்பிலிருந்து பலமான பதிலடி கிடைத்துள்ளது.

இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிடுகையில் புலிகள் நடத்திய பதிலடித் தாக்குதலில் படைத்தரப்பு திணறிப் போயிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

'அக்னிச் சுவாலை'ப் படையெடுப்பின்மீது நடத்தப்பட்ட தாக்குதல் காரணமாக படைத்தரப்புக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களை ஈடுசெய்து, மீளவும் இராணுவத்தை ஒரு யுத்தத் தயார் நிலையில் வைத்திருப்பதென்பது மிகச் சிரமமான காரியமாக இருக்குமென்றே தெரிவிக்கப்பட்டுள்ளது.


புதிய ரக ஆயுதங்கள் பலவற்றை வாங்கிக் குவித்துள்ள போதிலும், புலிகளது இராணுவ ரீதியான உறுதிப்பாட்டின் முன்பாக படைத்தரப்பு செய்வதறியாத நிலைக்கே உள்ளாகியிருக்கின்றது.

'ஒப்பரேஷன் அக்னிச்சுவாலை' ஆட்டங்கண்ட நிலையில், அரசியல் பேச்சுவார்த்தைகளின் அவசியம் குறித்து சர்வதேச அரங்கிலிருந்து மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தல் அமெரிக்க வல்லரசின் இராஜாங்க அமைச்சர் ஜெனரல் கொலின் பவலிடமிருந்தே வந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டுமென்ற ஜெனரல் கொலின் பவலின் அறிவுரைக்குச் செவிமடுப்பதைத்தவிர வேறெதனையும் செய்ய முடியாதென்பதையே இலங்கையின் அரச தரப்பு உணர வேண்டியதாகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



***என்ன பிழை நடந்தாலும்*** அதுக்கு எதிர்க்கட்சிதான் காரணமெண்டு சாதிக்கிறதுதான் இப்ப ஆளும் கட்சியின்ர அரசியல் நாகரீகமா மாறிப்போச்சு. மழை பெய்யாட்டாலும், அதுக்கு ஐ.தே.க. தான் காரணமெண்டுற தாரக மந்திரத்த இப்ப மாவனெல்லக் கலவரத்திலயும் உச்சரிக்கத் தொடங்கிட்டினம். ஐக்கிய தேசியக் கட்சிதான் மாவனெல்லக் கலவரத்தத் தூண்டிவிட்டதெண்ட கணக்கா இப்ப கணக்கடிக்கினம். தங்கட அரசாங்கத்தில, தங்கட சட்டங்களுக்குக் கீழ, தங்கட பொலிஸ் பாதுகாப்பு நிலவுற இடத்தில, தங்கட அமைச்சரிண்ட ஏரியாவில நடந்த ஒரு கலவரத்தை இப்படித் தட்டிக்கழிக்கிறத விட்டிட்டு, போதுமான அவகாசமிருந்தும், நடக்கிற விஷயங்கள நல்லாத் தெரிஞ்சுகொண்டும் ஏன் தங்கட பொலிஸ் உடனடி நடவடிக்கையில இறங்கி கலவரத்தத் தடுக்கேல்லயெண்டதுக்கு உருப்படியான பதிலச் சொல்லட்டும். ஒப்பினா நடந்ததை ஒழிச்சு மறைச்சுப் புண்ணியமில்ல, உண்மையள ஒப்புக்கொண்டு பரிகாரம் தேட வழிபாத்தால் நல்லது.

***ஆயுத ஊழல் பற்றி*** விசாரிக்கப் போறதா திரும்பவும் ஒரு கதை வெளிவந்திருக்குது. ஆயுதம் வாங்க வெளிக்கிட்ட காலந் தொடக்கம் ஆயுத ஊழலும் மூக்கிருக்கும் வரைக்கும் சளியிருக்குமெண்ட கணக்காத் தொடர்ந்துகொண்டே இருக்குது. போன தடவையும் இப்பிடித்தான், இராணுவத்துக்கெண்டு வாங்கின விமானங்களில ஊழலெண்ட கதை வெளிவந்திருந்தது. அதை விசாரிச்சு முடிவு காணமுந்தி விமானங்கள் எல்லாம் ஒவ்வொண்டா விழுந்து நொருங்கியும் போச்சுது. கடைசியில அமைச்சர் அஷ்ரப்பிண்ட உயிருக்கும் உலைவைக்கிற நிலைக்கு உந்த ஊழல் விவகாரம் வினையா மாறிபோய் முடிஞ்சுது. இப்ப ஆயுத ஊழலெண்டினம். ஒருவேள பிறவழத்தால சுடுற ஆயுதங்கள வாங்கிக் குவிச்சுத்தான் உந்த அக்கினிச் சுவாலை ஆப்பரேஷனில பின்வாங்க நேர்ந்திதோ வெண்டு ஒரு சந்தேகம் கண்டியளோ. எது எப்பிடியிருந்தாலும் அடிபட்டுப்போனது பொதுமக்களிண்ட வரிப்பணமெல்லோ!

***இரகசியப் போர் நிறுத்தமொண்டுக்கு*** ஆயத்தம் நடக்கிறதாக் கதை அடிபடுது. போர் நிறுத்தம் நல்லதுதான். அதில ஏன் இரகசியம் எண்டதுதான் தெரியேல்ல. இரகசியமாப் போர்நிறுத்தம் செய்தால் தங்கட தரப்பில தப்பேதும் நடந்தாலும் தப்பிக்க வாய்ப்பிருக்குமெண்டோ தெரியேல்ல. இப்ப துப்பாக்கிகளெல்லாம் தானே சுடுகுது கண்டியளோ. அதுக்கத்தான் 'தானியங்கித் துப்பாக்கி' எண்டு பேர்போல. இதால இன்னும் எத்தினபேர் தானாச் சாகப் போகினமெண்டுதான் பயமாக் கிடக்குது.

***இசை நடனக்கல்லூரிக்கு*** பல்கலைக்கழக அந்தஸ்து வாங்கிக் கொடுத்ததெண்டறது ஒரு நல்ல காரியம். அதில ஏன் புகைச்சல் கிழம்பியிருக்குதெண்டுதான் தெரியேல்ல. அமைச்சர் டக்ளஸுக்கு அந்தப் பெயர் போறது கிழக்கின் ஆளும் கட்சிப் பிரதியமைச்சருக்குப் பொறுக்கேலுதில்லை. இந்து கலாசார திணைக்களத்துக்குக் கீழ இருந்த இசை நடனக் கல்லூரி பற்றின விஷயங்கள் அதிகார பூர்வமா அந்த அமைச்சுக்குத்தான் வருமெண்ட கொமன்ஸ்ஸென்சைக்கூட ஏற்றுக்கொள்ள விடாமல் புகையுது பொறாமைத் தீ. அமைச்சரை வாழ்த்தி ஒரு விளம்பரம் வர, அப்பிடி விளம்பரம் குடுக்கயில்லையெண்டு மற்றொரு விளம்பரம் போடுவிக்கிறதும், தன்னாலதான் உந்தப் பல்கலைக்கழக அந்தஸ்து கிடைச்சதா வாழ்த்துச் செய்தி போடச்சொல்லி அரசாங்க அதிபரை தங்கட அரசியல் மிரட்டலுக்கு அடிபணிய வைக்கிறதுமா போட்டிக்கு நடக்குது புகழ்வேட்டை. என்னயிருந்தாலும், ஆளும் கட்சியில இருக்கிறவையள் தங்களப் பேரரசர்களாகவும் கூட்டுக் கட்சிகளைச் சிற்றரசர்களாகவும் நடத்த நினைக்கிற மனோபாவம் நல்லதில்லைப்பாருங்கோ! கணேசா! நீதான் எங்கட ஆக்களுக்குப் புத்தியக் குடுக்கவேணும்!

***ஒசியில கிளைம்*** பண்ணுறதுக்கு எங்கட ஊதுகுழல்கள் ஒறிஜினல் கில்லாடிகள் பாருங்கோ. நீங்களே ஒருக்கா மனசார நெனச்சுப்பாருங்கோ, யாருக்கும் தெரியாமல் ஜனாதிபதி பேசப்போறா எண்டதை கனவுல கண்டு பத்தாயிரக் கணக்கான சனம் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில திரண்டதாவெல்லே எங்கட அரச ஊதுகுழல்கள் கதை விட்டிருக்குது. அவையளுக்கு ஜனாதிபதியில விசுவாசமெண்டால் அதை உப்பிடி முழுப் பூசணிக்காய சோத்தில மறைக்கிற கதையிலயே காட்டுறது. ஜனாதிபதி சற்றலைற்றால பேசிறதெண்டால், அவையிட கட்சியும் ஒரு 250 பேரோட யாழ்ப்பாணத்தில மேதினம் நடத்தினவை தானே, அதில பேசியிருக்கலாமே. அதை விட்டுட்டு ஈ.பி.டி.பி.யிண்ட மேதினத்தப் பாவிச்சு பேச்சை நடத்திப்போட்டு ஏதோ தங்கட ஜனாதிபதி செயலகம் ஒழுங்குசெய்த கூட்டமெண்டு கதை விடுறது அடுத்தவன் முதுகில சவாரியோடுற போக்கெல்லோ!

## உண்மைத் தொடர் 06

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்

இராணுவத்தை விட்டு விலகி ஜெர்மன் தொழிற்கட்சியுடன் இணைந்து முழுநேர அரசியலில் ஈடுபடுவது என்ற தீர்மானத்தோடு இருக்கையில் படைத் தலைமை ஹிட்லரை அழைத்திருந்தது.

"உனக்கு இராணுவத்துக்குள் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இனிமேல் நீ ஆயுதம் ஏந்திப் போராடும் பிரிவுக்கல்ல, படையினர் மத்தியில் பிரசார அதிகாரியாக கடமையாற்றப் போகிறாய்..." ஹிட்லரின் மேலதிகாரி சொன்ன விடயம் அவனுக்கு ஓரளவு மகிழ்ச்சியாக இருந்தது.

அதேவேளை தொடர்ந்து இராணுவத்திலேயே பணியாற்றுவதால் தனது அரசியல் முன்னேற்றம் தாமதமாகுமோ என்ற கவலையும் ஒருபக்கம் காணப்பட்டது.

எவ்வாறாயினும் தனக்கு கிடைத்த பதவி உயர்வை பொறுப்பேற்று பணியாற்றுவதென்றும் சிறிது காலம் தாமதித்து படையை விட்டு விலகுவதெனவும் ஹிட்லர் தீர்மானித்தான்.

"இனிமேல் என்னால் ஒரே இடத்தில் இருக்கக்கிடைக்காது அதனால் உன்னிடம் தினமும் வரமுடியாமல் போகும்.." நண்பி கெதரினிடம் கூறிக்கொண்டிருந்தான் ஹிட்லர்.

"இப்போதுகூட நீ என்ன தினமுமா வருகிறாய்..." ஒரு படையதிகாரி என்ற மரியாதையே இல்லாமல் அவனது தலையை கோதி விட்டபடி வெகுசாதாரணமாக ஆனாலும் ஏராளமாய் விரகம் கலந்த குரலில் சொன்னாள் கெதரின்.

ஹிட்லரின் கைகள் அவளது கழுத்தை மெதுவாகப் பற்றியிருந்தன.

விலகியிருந்த மேலாடை கெதரினின் வலப்பக்க மார்பை பாதிக்கு மேல் காட்டிக் கொண்டிருந்தது. அவளது உதடுகள் ஏதோ ஒன்றை விரைவாகத் தரும்படி மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தன. ஹிட்லரின் கைகள் கழுத்தை விட்டு மெல்லக் கீழிறங்கின போலியாகவேனும் கோபப்படவேண்டும் என்று அவளுக்குத் தோன்றவில்லை.

அவளது பிடி ஹிட்லரின் உடம்பை அழுத்தியது. அந்த அழுத்தத்தில் இருந்த அவசியத்தைப் புரிந்து கொண்ட அவன் அனுமதியில்லாமலே ஆடைகளுக்கு விடை கொடுத்தான். அவளது உடலில் உள்ள மச்சங்களை தேடி ஒவ்வொன்றாய் முத்தமிட்டுக்கொண்டு வந்த ஹிட்லரின் உதடு கடைசியில் செய்த காரியம் கெதரினின் உயிரில் உச்சம் வரையில் சிலிர்ப்பூட்டியது. அவள் பாதி மயக்கத்தில் அவனை தன் உடலில் இழுத்துப் போட்டுக் கொண்டாள்.

படையினர் மத்தியில் தேசிய உணர்வை தட்டியெழுப்பும் பணி ஹிட்லருக்கு சுவாரஸ்யமாகவே இருந்தது. தனது இராணுவ முகாம் தவிர்ந்த வேறு இடங்களில் அதிகப்படியான நேரங்களை செலவிட்டான். படையினர் மத்தியில் ஹிட்லர் ஒரு பெரும் பேச்சாளராக கௌரவம் பெற்றான். தினசரி வெவ்வேறான படைப்பிரிவுகளில் இருந்தும், மாகாணங்களில் இருந்தும் அவனுக்கு அழைப்பு வந்து கொண்டிருந்தது.

ஒவ்வொரு முறையும் மறக்காமல் யூதர்களைத் திட்டித்தீர்த்தான்.

இப்படியாக இருக்கும்போது தற்போதைய அரசியல் சூழ்நிலையில் மக்களை இலகுவாக தம்பக்கம் கவர முடியும் என்று கூறி ரெக்ஸ்லர் தமது கட்சியில் இணையுமாறு ஹிட்லருக்கு மீண்டும் அழைப்பு விடுத்தார்.

படையை விட்டு விலகுவதென்று உறுதியான முடிவுக்கு மீண்டும் வந்தான். இந்த முடிவு ஹிட்லருக்கு சற்று கஷ்டமான ஒன்றாகவும் இருந்தது. ஆனால் மக்கள் மத்தியில் தன்னை அடையாளப் படுத்தாமல் படையினர் மத்தியில் மாத்திரமே தனது புகழ் வளர்வதால் தன் அரசியல் கனவு ஈடேறுவது தாமதிக்கும் என்பதை கருத்தில் கொண்டு 1920 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜெர்மன் இராணுவத்தின் பிரசார அதிகாரி பதவியை இராஜிநாமா செய்தான்.



பதவி விலகுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் தான் பணியாற்றிய முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரான்ஸ் நாட்டுப் பெண் உளவாளியை தனது அறையில் சந்தித்தான் ஹிட்லர்.

இடைப்பட்ட காலத்தில் அந்த பெண்ணுடன் அவன் பலதடவை உறவு வைத்துக் கொண்டதால் அவளது குற்றம் பெரும்பாலும் ஹிட்லரினால் மறக்கப்பட்டிருந்தது. பிற்பட்ட காலத்தில் அவள் ஒரு கைதி போலல்லாமல் ஹிட்லரின் உத்தியோக பூர்வமற்ற மனைவி போலவே நடத்தப்பட்டாள்.

அவன் படையை விட்டு விலகுவது தொடர்பாக அந்த பிரான்ஸ் பெண் கடும் கவலை கொண்டிருந்தாள். விலகிச் செல்லும் முன்னர் தன்னை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பல தடவை அவனிடம் மன்றாடினாள். ஆனால் அவள்மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்ததால் அவனால் அவளை உடனடியாக விடுதலை செய்யக் கூடியதாக இருக்கவில்லை.

அவள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவளுக்கு மரண தண்டனை வழங்கப் படலாம் என்ற நிலையில் ஹிட்லரை படை முகாமில் சந்தித்த கடைசி இரவிலும் அவனுக்கு தாராளமாக தன்னை வழங்கினாள்.

ஹிட்லர் படையை விட்டு விலகிச் சென்று ஒரு வாரகாலத்தில் இந்த பெண் தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. எனினும் பல படைவீரர்கள் ஒரே நேரத்தில் அவளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொலை செய்ததாக பின்னர் தெரியவந்தது.

அந்த சிறிய அரசியல் கட்சியில் ஹிட்லர் அங்கத்தவராக தன்னை பதிவு செய்து கொண்டான். அவனது பேச்சாற்றலை நம்பியே கட்சி அவனை சேர்த்துக் கொண்டது.

ஹிட்லருக்கு 555 என்ற அங்கத்துவ எண் வழங்கப்பட்டது. கட்சியின் தலைவர் ரெக்ஸ்லர் 500 இல் இருந்துதான் கட்சி உறுப்பினர்களுக்கு இலக்கங்களை வழங்கியிருந்தார். அதாவது ஜெர்மன் தொழிற் கட்சியின் 55 ஆவது உறுப்பினராக ஹிட்லர் இருந்தான்.

கட்சிக்கென்று ஒழுங்கான கட்டடம் ஒன்றோ, உபகரணங்களோ எதுவும் இருக்கவில்லை.

ஹிட்லர் ஓரளவு நிதி சேகரித்து தேவையான பல பொருட்களை கட்சிக்காக வாங்கினான். இதுவரை காலமும் சிறியதொரு அறையில் கூடி வந்த கட்சிக் கூட்டத்தை சற்று வசதியான புதியதொரு இடத்தில் கூட்டி பிரச்சனைகளை ஆராய ஆலோசனை வழங்கினான்.

ஹிட்லர் வந்து சேர்ந்த பின்னர் ஏனைய உறுப்பினர்களும் மிகுந்த உட்சாகத்துடன் செயலாற்றினர்.

ஆங்காங்கே சிறிய கூட்டங்கள் நடத்தப்பட்டன. தொழில் நிலையங்களுக்குச் சென்று நாட்டின் இன்றைய நிலைமை குறித்தும் தமது அரசியல் கோட்பாடுகள் தொடர்பாகவும் விளக்கிக் கூறினார்கள்.

ஜெர்மன் தொழிற்கட்சியின் செயற்பாடுகள் முனிச் நகரை மையமாக வைத்தே நடைபெற்றதால் ஹிட்லருக்கு தனது நண்பி கெதரினை சந்திக்கும் வாய்ப்பு தாராளமாகக்கிட்டியது. இதனால் அவன் மிகுந்த புத்துணர்ச்சியுடன் காணப்பட்டான்.

கட்சியின் பல பொறுப்புக்களை தலைவர் ரெக்ஸ்லர் தாமாகவே முன்வந்து ஹிட்லரிடம் ஒப்படைத்தார். ஆனால் அவைகள் அவனுக்கு பூரண திருப்தியைத் தரவில்லை ரெக்ஸ்லரை இறக்கிவிட்டு தான் கட்சித் தலைவராக வரவேண்டும் என்ற எண்ணம் அவனுக்குள் முளை விட்டது.

**வருவான்...**

ஷானு

## சல்மான் ருஷ்டியின் புதிய கதை



'சாத்தானின் கவிதைகள்' என்ற சர்ச்சைக்குரிய புத்தகத்தை எழுதிவிட்டுத் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வரும் பிரபல எழுத்தாளர் சல்மான் ருஷ்டி புதிய கதை ஒன்றை எழுதியுள்ளார்.

இதுவும் உயிருக்கு உலை வைக்கக் கூடிய வகையில் சர்ச்சையைக் கிளப்பக் கூடிய கதையோ என்றால் இல்லை. முற்றிலும் காதல் கதை. அதுவும் சல்மான் ருஷ்டியின் சொந்தக் கதை. ஆனால் முழுக்க முழுக்க கற்பனை என்கிறார் ருஷ்டி.

53 வயதான ருஷ்டி, 30 வயதான பத்மாலட்சுமி என்ற தமிழகப் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார். 'ப்யூரி' என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்தக் கதைக்கும் ருஷ்டியின் சொந்தக் கதைக்கும் உள்ள ஒற்றுமையைப் பாருங்கள்.

நாவலின் நாயகன் பெயர் மாலிக் சோலன்கா. மும்பை வாசி. ருஷ்டியும் மும்பைக்காரர்.

மாலிக் மும்பையில் இருந்து இங்கிலாந்து சென்று குடியேறுகிறான். ருஷ்டியும் இப்படித்தான் குடியேறியவர்.

மாலிக் இங்கிலாந்தில் இருந்து நியூயோர்க் செல்கிறான். ருஷ்டியும் இங்கிலாந்தில் இருந்துதான் நியூயோர்க் சென்றவர்.

மாலிக் வயது-55, மனைவி-எலியனார். இவர்களுக்கு ஒரு மகள். இதே போல் தான் ருஷ்டிக்கு வயது-53, மனைவி-எலிசபெத், ஒரு மகள்.

நாவலின் நாயகன் மாலிக்கிற்கு இந்த வயதில் ஒரு பெண் மேல் காதல். நியூயோர்க்கில் உள்ள அப்பெண்ணின் பெயர் நீலா. இந்தியாவைச் சேர்ந்தவர். நிஜத்திலும் நியூயோர்க்கில் உள்ள இந்தியப் பெண் பத்மா மீது காதல்.

இப்படிப் பல ஒற்றுமைகள். முழுக்க முழுக்கக் கற்பனை என்று ருஷ்டி மறுப்பதற்குக் காரணம் ஏனோ தெரியவில்லை.

## குளியலறையில் என்ன செய்கிறார்கள்?

படுக்கையறையில் மக்கள் என்ன செய்கிறார்கள்? என்று ஆராய்ச்சி செய்து வந்த அமெரிக்கர்களுக்கு அது அலுத்துப் போய்விட்டது போல் இருக்கிறது.

சமீபத்தில், குளியலறையில் மக்கள் என்ன செய்கிறார்கள்? என்று புதுவகை ஆராய்ச்சியில் இறங்கினார்கள்.

'குளியலறையில் என்ன செய்ய வேண்டிக் கிடக்கிறது? குளிக்கத்தானே குளியலறை என்று சொல்பவர்கள் இந்த ஆராய்சி முடிவுகளைப் பார்த்தால் அதிர்ச்சியடைந்து விடுவார்கள்.

'குளியலறையில் மக்கள் என்ன செய்கிறார்கள்?' என்ற ஆராய்ச்சி செய்ய, சுமார் ஆயிரம் பேரைத் தெரிவு செய்து இவர்களிடம் ஆய்வை மேற்கொண்டது அமெரிக்க நிறுவனம் ஒன்று.

இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் குளியலறையில் பகல் கனவு காண்கிறார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. இன்னும் சிலர் குளியலறையில்பாடி-ஆடிப் பழகிக் கொள்கின்றனர். மேலும் சிலர் குளியலறைக்குள் சென்று தொலைபேசியில் பேசுகின்றனர். இப்படிச் செய்பவர்கள் அனைவரும் ஆண்கள்.

பெண்களைப் பொறுத்தவரை முக்கால் வாசிப் பேர் குளியலறை கண்ணாடியில் தங்களது முழு உடல் அழகையும் பார்த்து இரசிப்பதுதான் அவர்களது முக்கிய வேலை.

இந்த ஆயிரம் பேரில் 22 சதவீதமான ஆண்கள் குளியலறையில் தான் உடலுறவில் ஈடுபடுவதாகக் கூறுகிறார்கள்.

அதுசரி! நீங்கள் எப்படி?

## கடலுக்கடியில் கல்யாணம்



இப்போது திருமணம் செய்வதில் புதிய ஸ்டைல்கள் வந்து விட்டன. கோவில்கள், தேவாலயங்களில் திருமணம் செய்வது போல் இப்போது விமானங்கள், கப்பல்கள், விளையாட்டு மைதானங்கள், பாரசூட்களில் பறந்து கொண்டு என்று திருமணங்கள் செய்து கொள்கிறார்கள்.

கடந்த காதலர் தினத்தன்றுகூட சில ஜோடிகள் ஆடைகளின்றித் திருமணம் செய்து கொண்டதை 'முரசு' வாசகர்கள் அறிந்திருப்பீர்கள்.

சமீபத்தில் ஸ்பெயின் நாட்டில் உள்ள சென் செபஸ்டியன் நகரைச் சேர்ந்த துணை மாலுமி இலி கியூலர் தனது திருமணத்தை வித்தியாசமாக நடத்த வேண்டும் என்று விரும்பி, தனது காதலி ஜோன் வைட்கைனிடமும் ஆசையை வெளியிட்டார்.

இருவரும் நடத்திய ஆலோசனைக்குப்பின் வந்தது தான் இந்த ஐடியா.

தமது காதலை வெளிப்படுத்தி-கடலிலேயே தமது திருமணத்தை நடத்த முடிவெடுத்தனர்.

கடலின்மேல் நின்று காதலை வெளிப்படுத்திய இவர்கள் கடலடியில் கல்யாணத்தைச் செய்து கொண்டனர்.

வடக்கு ஸ்பெயினில் உள்ள பாங்க் சிட்டி என்ற கடல்பகுதியைத் தேர்ந்தெடுத்து, மணமக்கள் இருவரும் மணக்கோலத்தில் சுவாசக் கருவி மற்றும் இதர மெஷின்களைப் பொருத்திக் கொண்டு கடலில் குதித்தார்கள்.

குறிப்பிட்ட இடத்தில் இவர்கள் நின்று மோதிரம்மாற்றிக்கொள்ள, இவர்களைக் கடலின் மேல் படகில் இருந்த உறவினர்கள் நண்பர்கள் எல்லாரும் உற்சாக ஓலமிட்டு வாழ்த்தினார்கள்.

## கேரளாவில் மின்சாரக்கண்ணா



இந்தியாவில் கேரள மாநிலத்தில் உள்ள கொல்லம் என்ற இடத்தைச் சேர்ந்தவர் மோகன். இவரைப் பார்க்க வேண்டுமானால் 'கரண்ட் மோகன்' என்று கேட்டால் போதும் இவரது வீட்டிற்கே அழைத்துச் சென்று விடுவார்கள். அவ்வளவுக்கு மனிதர் பிரபலம்.

இவர் இப்படிப் பிரபலமானதற்கு என்ன காரணம் தெரியுமா? தனது உடம்பில் எவ்வளவு சக்தி வாய்ந்த மின்சாரம் பாய்ந்தாலும் சர்வ சாதாரணமாகச் சிரித்தபடியே இருப்பார்.

மிகவும் சக்திவாய்ந்த மின்சாரத்தைத் தொடுவதால்தான் இவருக்கு 'கரண்ட் மோகன்' என்ற பெயரும் பிரபலமும் ஏற்பட்டது.

ஒருமுறை இவர் திருமுல்லைவாரம் என்ற இடத்தில் உள்ள கோவில் அருகே பகிரங்கமாக மின்சாரத்தைத் தொடமுன் வந்தார்.

இதைப் பற்றிக் கேள்விப்பட்ட மக்கள் அங்கு திரளத் தொடங்கிவிட்டனர். 600 வோல்ட் மின்சார லைனில் கைகளால் பிடித்து, அசராமல் நின்று காட்டினார்.

இதைக்கண்ட மின்சார அதிகாரிகள், மின்சாரத்தைத் துண்டித்து விட்டு, போலிஸிற்குத் தகவல் கொடுத்து விட்டனர். மின்சார இலாகா அதிகாரம் இன்றி இப்படிப்பகிரங்கமாக நிகழ்ச்சிகள் நடத்துவது குற்றம் என்று மோகனை எச்சரித்து அனுப்பிவிட்டனர்.

# குண்டு அழகிகள்

→ **தா**ய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் உள்ள நெக்கோன் பதோம் என்ற உயிரியல் பூங்காவில் வருடந்தோறும் 'ஜம்போ குயின்' (கஜராணி) அழகுப் போட்டி நடந்து வருகிறது.

தாய்லாந்தில் உள்ள யானைகளைப் பாதுகாக்க நிதி திரட்டும் நோக்கில் நடத்தப்படும் இந்தப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் அனைவரும் குறுக்குப்பெருத்தவர்கள். ஆம்- பருத்த உருவம் கொண்ட அழகிகள்.

இம்முறை ஜம்போ ராணியாகத் தெரிவு செய்யப்பட்டவர் 25 வயதான சொரயா சிரிமித் (நடுவில்). இவரது எடை 135 கிலோகிராம். இரண்டாவதாக 27 வயதான ஜித்ராவாதி (வலது புறம்) என்பவரும் மூன்றாவதாக 18 வயதான ஸவீவான் மக்வான் (இடதுபுறம்) என்பவரும் தெரிவு செய்யப்பட்டனர்.



# முதலாவது பயணி

↓ **வி**ண்வெளிக்குப் பயணிக்கும் விண்வெளி வீரர் அல்லாத முதலாவது மனிதர் என்ற சாதனை படைத்திருக்கிறார் அமெரிக்காவின் பெரும் பணக்கார வர்த்தகரான டென்னிஸ் ரிட்டோ.

இதுவரை விண்வெளியில் ஆராய்ச்சி செய்வதற்காகத்தான் அங்கு பயணம் செய்தார்கள். ஆனால் முதல் தடவையாக விண்வெளியைச் சுற்றிப்பார்க்கும் உல்லாசப் பயணியாகப் புறப்பட்ட டென்னிஸ் ரிட்டோ 2 கோடி அமெரிக்க டொலர் (நம்நாட்டு மதிப்பில் சுமார் 180 கோடி ரூபா) கட்டணமாகச் செலுத்தினார்.

ரஷ்யாவின் 'சோயுஸ்-ரி.எம்.' விண்கலத்தில் ஏறி, விண்வெளிக்குப் புறப்படுமுன், ரிட்டோ தனது பெருவிரலை உயர்த்தி பெருமிதத்துடன் நின்ற காட்சிதான் இது.

ரிட்டோவிற்குக் கீழே நின்று கையசைப்பவர்கள் இவருடன் விண்கலத்தில் பயணித்த இரு ரஷ்ய வீரர்கள்




# அசாதாரண அமி

← இன்று தென் கொரியா விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பவியலில் வீறு நடை போட்டு வருகிறது. தென் கொரியாவின் மின்னியல் மற்றும் கணினிதுறைப் பேராசிரியரான யாங் ஹியுன் தான் உருவாக்கிய ரோபோவுடன் தோன்றுகிறார்.

சாதாரண ரோபோக்களைப் போலல்லாத இந்த ரோபோவின் பெயர் 'அமி' இது செய்யும் வேலைகள் அசாதாரணமானவை.

தொடர்பாடல் துறையில் சிந்தித்தும் செயற்படக் கூடிய இந்த ரோபோ தனக்கறிமுகமான மனிதர்களை அவர்களது குரல்களை வைத்தே கண்டுபிடித்து விடும் ஆற்றல் கொண்டது. இதைவிட உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல்களும் கொண்டது.





# ஆரம்பமும் ஆர்ப்பரிப்பும்

↑ **அ**டுத்த வருடம் நடைபெறவிருக்கும் உலக உதைபந்தாட்ட 'சாம்பியன் ஷிப்' போட்டிகள் தென்கொரியாவில் நடைபெறவிருக்கின்றன.

இதற்காக தலைநகரிலிருந்து 410 கிலோ மீட்டர் தெற்கேயுள்ள உல்சான் என்ற இடத்தில் புதிய உதைபந்தாட்ட மைதானமொன்று ஏப்ரல் 28ம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது.

ஆரம்ப விழாவையொட்டி கொரிய மாணவர்கள் வகைவகையான உதைபந்துகளைப்போன்ற பலூன்களை விண்ணுக்கனுப்பி ஆர்ப்பரிக்கும் காட்சிதான் இது.

## தகவல் பெட்டி

# ஆரோக்கியச் சிரிப்பு

→ **வா**னத்தை நோக்கித் தமது கைகளிரண்டையும் உயர்த்தியபடி எல்லாரும் அழுது புலம்புகிறார்கள் என்றா நினைக்கிறீர்கள்?

அதுதான் இல்லை. நட்டநடு வீதியில் நின்று கொண்டு கெக்கட்டமிட்டுச் சிரிக்கிறார்கள்.

நமுட்டுச் சிரிப்புடன், 'இவர்களுக்கு என்ன பைத்தியமா?' என்று நீங்கள் அடுத்த கேள்வியைத் தொடுக்குமுன் தொடர்ந்து படியுங்கள்.

இந்தியாவின் கல்கத்தா நகரில் 'சிரிக்கும் பெண்கள்' என்றொரு அமைப்பு இருக்கிறது. காலையில் எழுந்து உடற்பயிற்சி செய்வது போல் இந்த அமைப்பில் இணைந்திருப்பவர்கள் ஒன்றாகக் கூடி நின்று உரத்துச் சிரிப்பார்கள்.

இப்படிச் சிரிப்பதால், உடல் ஆரோக்கியத்திற்கு உகந்தது என்று கூறி இந்த அமைப்பில் உள்ள 450 உறுப்பினர்களும் தினமும் சிரிக்கிறார்கள்.

நீங்களும் உரத்துச் சிரியுங்கள் உடலுக்கு நல்லது. ஆனால் தனியாக மட்டும் நின்று சிரிக்காதீர்கள். பார்ப்பவர்கள் வேறு மாதிரி நினைத்து விடுவார்கள்.



# புதிய பாடகி அறிமுகம்

எஸ்.வி.சேகர் முதல் முறையாக இயக்கி நடிக்கும் 'கிருஷ்ணா கிருஷ்ணா' படத்தை மீடியா ட்ரீம்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது.

இப்படத்தில் இடம்பெறும் 'ஆண்டவன் நமக்கு அத்தனையும் படைச்சான்..' என்று தொடங்கும்பாடலை புதிய பாடகி அனுராதா சேகர் பாடினார்.

இப்பாடலைப் பாடுவதன் மூலம் பாடகியாக அறிமுகமாகும் அனுராதா, எஸ்.வி.சேகரின் மகளாவார். இவர் ஏற்கனவே எஸ்.வி.சேகர் நடித்த 'கலாட்டா சிரிப்பு' தொலைக்காட்சித் தொடரின் தலைப்புப் பாடலைப்பாடியுள்ளார்.

15 வருடங்களுக்கு மேலாக கர்நாடக இசை பயின்று வரும் அனுராதா, 'கிருஷ்ணா கிருஷ்ணா' படத்திற்காகப் பாடிய பாடலுக்கு எஸ்.ஏ.ராஜ்குமார் இசையமைத்தார்.



சரத்குமார்-விக்ரம்-குஷ்பு-தேவயானி
விண்ணுக்கும் மண்ணுக்கும்

## சம்பளத்தை உயர்த்திய இசையமைப்பாளர்

'மின்னலே' படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகியிருக்கும் ஹாரிஸ் ஜெயராஜ் முதல் படத்திலேயே இளவட்டங்கள் மனதில் இடம் பிடித்து விட்டார்.

'வசீகரா... என் நெஞ்சிலே..' என்று எல்லோராலும் முணுமுணுக்கப்படும் இந்தப் பாடல் பலர் உள்ளங்களில் பதிந்ததற்கு காரணம் தாமரையின் பாடல் வரிகளை அருமையான குரலில் பொம்பே ஜெயஸ்ரீ பாட, அதற்கு அழகாக மென்மையான இசையை வழங்கியிருந்தார் ஹாரிஸ் ஜெயராஜ். (ஆனால் படத்தில் இப்பாடல் காட்சியை சொதப்பியது வேறு விஷயம்)

விரைவில் ஹாரிஸ் ஜெயராஜ் இசையில் வரவிருக்கும் படம் 'மஜ்னு'. இதிலும் இவர் அசத்தியிருப்பதாகத் தகவல்கள். எனவே வெளிநாட்டு உரிமைக்கு நல்ல வரவேற்பு ஏற்பட, இவர் தனது சம்பளத்தை கணிசமாக உயர்த்தி விட்டார்! இப்போது ஒரு படத்திற்கு இசையமைக்க இவர் கேட்பது 40 லகரம்.

## தேவயாணியின் சொந்தப்படம்

அண்மையில் இயக்குநர் ராஜகுமாரனைக் காதலித்துக் கைப்பிடித்த தேவயானி சொந்தப்படமொன்றைத் தயாரிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்.

இப்படத்தை இயக்கப் போவது... வேறு யார் சாத்சாத் இவரது காதல் கணவரும் இயக்குநருமான ராஜகுமாரன் தான்.

## புதிய இயக்குநரின் 'மின்சாரக் காதல்'

ராஜீவ் மேனன் இயக்கிய 'மின்சாரக் கனவு' படத்திற்கு முதலில் வைக்கப்பட்டு, மாற்றப்பட்ட பெயர்களில் ஒன்று 'மின்சாரக்காதல்'. இப்போது இதே பெயரில் ராஜீவ் என்ற புதிய இயக்குநர் ஒருவர் ஒரு படத்தை இயக்கி வருகிறார்.

புதுமுகங்கள் நாயகன்-நாயகியாக நடிக்கும் இப்படத்தில் இவர்களுடன் டெல்லி கணேஷ், ஸ்ரீவித்யா, வையாபுரி, தாமு, கவிதா, ஜவஹர் உட்பட பலர் நடிக்கின்றனர்.

கதை-திரைக்கதை-வசனம் எழுதி ராஜீவ் இயக்கும் இப்படத்தை பிரவீ என்பவர் தயாரிக்கிறார்.

## பிரபுவை அவமானப்படுத்திய மும்தாஜ்

செல்லையாவின் தம்பி ஆறுமுகம் படித்த பெண் விஜயாவைத் திருமணம் செய்கிறான். விஜயா எல்லாரிடமும் நன்றாகப் பழகுகிறாளே என்று எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள்.

ஒருநாள் செல்லையாவின் மனைவி மீனாட்சிக்கு சமையலில் உதவி செய்யப்போகிறேன் என்று சென்று, விரலை வெட்டிக் கொள்கிறாள் விஜயா. இதைக் கண்ட செல்லையாவின் தாயார் பதறிப்போய் விஜயாவின் கையைப் பிடித்து விரலை வாயில் வைத்து இரத்தத்தை உறிஞ்சினாள்.

விஜயாவோ வெடுக்கென்று மாமியாரைப் பிடித்துத் தள்ளி விட்டாள். இதைப் பார்த்து விட்டு, ஏன் என்று கேட்கப் போன செல்லையாவையும் அவமானப் படுத்தினாள் விஜயா.

இக்காட்சி 'மிட்டா மிராசு' படத்திற்காக அண்மையில் படமாக்கப்பட்டது. இதில் செல்லையாவாக பிரபு, ஆறுமுகமாக ரவிராகுல், மீனாட்சியாக ரோஜா, விஜயாவாக மும்தாஜ் ஆகியோர் நடித்தனர்.

இக்காட்சியை மு.களஞ்சியம் இயக்கினார்.

## முகப்பில்

பிரபு..... கௌசல்யா

கௌசல்யா—கரண்



நடன மணிகளுடன் சங்கவி
படம்: தாலி காத்த காளியம்மன்

## மம்முட்டி நடிக்கும் மூன்றாம் பாகம்

பல வருடங்களுக்கு முன் மம்முட்டி நடித்த 'ஆவநாழி' என்ற மலையாளப்படம் அங்கு பெரு வெற்றி பெற்றது. பின்னர் இது கமல் தயாரிப்பில் சத்யராஜ் நடித்து 'கடமை கண்ணியம் கட்டுப்பாடு' என்று தமிழில் வெளியானது.

ஆவநாழியின் வெற்றியை அடுத்து இதன் இரண்டாம் பாகம் 'இன்ஸ்பெக்டர் பலராம்' என்ற பெயரில் தயாராகி வெளியானது. இதுவும் பெருவெற்றி பெற இப்போது இதன் மூன்றாம் பாகம் (பார்ட்-3) தயாராகி வருகிறது. இப்படத்தை விஜயன் இயக்குகிறார்.

## சூடுபிடிக்கும் படம்

சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிப்பில் ராஜகுமாரன் இயக்கத்தில் விக்ரம் 'சேது'வுக்குப் பின் இவர் நடித்த நேரடித் தமிழ்ப்படமிது-தேவயானி நடித்து வெளியான படம் 'விண்ணுக்கும் மண்ணுக்கும்'. இதில் விக்ரம்-தேவயானி ஜோடியுடன் சரத்குமார்-குஷ்பு ஜோடியும் நடித்துள்ளது. ஆரம்பத்தில் சுமாராக ஓடிய இப்படம், இப்படத்தின் இயக்குநர் ராஜகுமாரன்-தேவயானி கல்யாணத்திற்குப் பின் சூடு பிடித்து, வெற்றிகரமாக ஓடுகிறது.

## கை விடப்பட்ட படம்

கமராக் கவிஞர் என்று அழைக்கப்படும் ஒளிப்பதிவாளர்-இயக்குநர் பாலுமகேந்திரா மீடியா ட்ரீம்ஸ் நிறுவனம் தயாரித்த 'கதை நேரம்' தொலைக்காட்சித் தொடரை 52 வாரங்களுக்கு இயக்கியிருந்தார்.

இதையடுத்து மீடியா ட்ரீம்ஸ் நிறுவனம் தயாரிக்கும் படங்களில் ஒன்றை பாலுமகேந்திரா இயக்குவதாக இருந்தது. இப்போது இப்படத் திட்டம் கை விடப்பட்டு விட்டது.

பாலு மகேந்திரா தனது ஆஸ்தான நாயகி மௌனிகா இப்படத்தில் கதாநாயகியாக நடிக்க வேண்டுமென விரும்பினார். மீடியா ட்ரீம்ஸோ தனது ஆஸ்தான நாயகி தேவயானி நடிக்க வேண்டும் என விரும்பியது.

நாயகி விஷயத்தில் இவர்களுக்குள் உடன்பாடு வராததைத் தொடர்ந்து இப்படம் கைவிடப்பட்டு விட்டது.



மோனல்
படம்: அன்பே டயானா

## சினி எ...

### மினி சினி

இந்தியில் சில வருடங்களுக்கு முன் வெளியா... வெற்றி பெற்ற 'சாஜ... தமிழில் தயாராகவுள்ள... இந்தியில் சஞ்சய் த... சல்மான் கான் நடித்த வே... களில் தமிழில் பார்த்திப... பிரசாந்த் நடிக்கிறார்கள்.

காங்-சிம்ரான் ஜோ... யாக நடிக்கும் 'பம்... கே.சம்பந்தம்' படத்... அப்பாஸ்-தேவயானி ஜோ... யும் நடிக்கிறது. தேவயா... நடிக்கும் வேடத்தில் முதலில் நடி... அணுகப்பட்டவர் ஜோதிகா.

தமிழில் பெரு வெற்றி பெ... 'ப்ரெண்ட்ஸ்' படத்தை தெலுங்கில் தயாரி... உரிமையைப் பெற்றுள்ளார் ஆர்.பி.சௌ... தமிழில் விஜய்-சூர்யா நடித்த வேடங்க... தெலுங்கில் தருண்-பவன் கல்யாண் நடி... யுள்ளனர்.

அர்ஜுன் ஜோடியாக 'வானவில்' ப... அறிமுகமான அபிராமி தற்போது சரத்கு... ஜோடியாக 'தோஸ்த்', 'சமுத்திரம்' ஆ... படங்களிலும் பிரபு ஜோடியாக 'மிடில் கி... மாதவன்' படத்திலும் நடிக்கிறார். இதையடு... இவர் விஜயகாந்திற்கு ஜோடியாக ... படத்தில் நடிக்கவுள்ளார்.


இதுவரை தனது படங்களில் இர... குரலில் நடித்து வந்த அப்பாஸ் முதல் மு... யாக 'ஆனந்தம்' படத்தில் சொந்தக் குர... பேசி நடித்து வருகிறார்.

தமிழுக்கு மறுபிரவேசம் செய்திரு... சங்கவி 'தாலிகாத்த அம்மன்' படத்தில் பே... நடித்ததைத் தொடர்ந்து இவரை ஆவி, ... பிசாச வேடங்களில் நடிக்கக் கூப்பிடுகிறா...

தமிழில் 'இசை வசந்தம்' என்ற ப... துடன் இசையமைத்து வரும் எஸ்.ஏ.ராஜகு... தெலுங்கில் இசையமைக்கும் போது த... பெயருக்கு முன்னால் 'மெலடி கிங்'... போடுகிறார்.

மணிரத்னத்திடம் உதவி இயக்குநரா... மணிபுரியும் ஏஞ்சல் என்ற பெண் தனி... வந்து படமொன்றை இயக்கவுள்ளார். ... கார்த்திக் கதாநாயகனாக நடிக்கவுள்ள...

# யார் என்று தெரிகிறதா?



தும்பைப் பூ நிற ஆடையில் வலம் வரும் இந்தப் பாடகரின் குரலும், கறைபடியாத இவரது பளீர் வெண்மை ஆடையைப் போன்று மாசு மருவற்றது. இதைவிட மேலதிக 'க்ளு' கொடுத்தால் உடனே கண்டுபிடித்துவிடுவீர்கள்.

இந்தப் பாடகரின் ஆரம்ப காலத் தோற்றம் தான் இது. இவர் யாரென்று தெரிகிறதா? யூகிக்க முடியாதவர்கள் 18ம் பக்கத்தைப் புரட்டுங்கள். விடையைப் பார்த்து விட்டு இவரா அவர் என்று ஏற்க மறுத்தால் அதற்கு நாம் பொறுப்பல்ல.

## இல்லை

மனிதனுக்கு மதிப்பில்லை;
மண்டை ஓடுகளுக்கே
மரியாதை–இம்,
மண்ணில்;
*
படைப்பினங்களில்,
பரிதாபமில்லை.
பகுத்தறிவு மனிதனுக்கு
பரிவு இல்லை.
*
வீடில்லை,
விடிந்தால் கூழ்இல்லை,
விடயம் புரிந்து,
வியக்கும் நிலையுமில்லை.
*
பாலில்லை மடியில்,
பணமுமில்லை!
பண்பு உள்ள ஒரு மனிதனும்,
பார்ப்பதற்கிங்கில்லை.
*
நாடில்லை ஒரு
நகரமுமில்லை.
நஞ்சை உண்ணுவதற்கும்
நாதியில்லை.
*
ஆசையில்லை மனதில்,
ஆளுமையுமில்லை,
அன்புமில்லை எனக்கு,
ஆணவமுமில்லை.
*
உலகில் வாழ்வதற்கு,
உவப்புமில்லை.
உண்மையைச் சொல்ல,
உண்மைகள் ஏதுமில்லை.
*
மனைவியில்லை,
மக்களுமில்லை. இம்
மண்ணை ஆளுவதற்கு நல்
மன்னனுமில்லை.

நிந்-மக்கீன் ஹாஜி.

## சுகமான சுமை

தாயோ தன் குழந்தையை
வயிற்றில் சுமக்கிறாள்...,
நானோ அவளை
என் நெஞ்சில் சுமக்கிறேன்...
தாய் சுமப்பதோ
குழந்தை பிறக்கும் வரை..
நான்
அவளை சுமப்பதோ
என்
இறப்பு வரை...!

ஏ.ரவி, வெள்ளவாய.




## உறைந்த நினைவுகள்

என் எதிர்காலத்தை
எண்ணிப் பார்க்கையில்
இவ்வுலகே இருண்டு விட்டது.
என் கண்களுக்கு!
***
என் நிகழ் காலத்தை
நினைக்கும் போது
அதிசயித்துப் போகிறேன்;
என் உயிர் அவள் இன்றி
உடல் வாழ்கிறது!
***
என் கடந்த கால நினைவுகளில்
அவள் நினைவும் கலந்திருப்பதால்,
நினைவின்றி வாழத் துடிக்கிறேன்!
மனம் நிறைந்த மங்கை
சொந்தமின்றிப் போனதால்
மதுவை நான்
சொந்தமாக்கிக் கொண்டேன்!
***
மொத்தத்தில் இப்போது
நினைவுகளை
மதுவுக்குள் தொலைத்து விட்டு;
மனதுக்குத் தெரியாமல்
நினைவின்றி உலவுகிறேன்!

எஸ்.மனோ, மூதூர்-04.

## உன்னால் நானும் ஒரு மரக்கட்டைதான்

இன்னும்
ஏன் என்னை
சுரண்டுகிறாய்...?
**
பட்ட மரம்
துளிர் விடாது என்று
உனக்கு தெரியாதா..?
**
நடந்தவை யெல்லாம்
வெறும் கனவுதான்
என்று தேற்றிக்கொண்டேன்..!
**
நீயும் அப்படியே
செய்...!
**
காதல் என்பது
ஒவ்வொரு வரும்
கற்று 'மறக்க' வேண்டிய பாடம்தான்!
**
பாறையான
என் இதயத்தை
நீர் கசிய வைத்தவளும்
நீ தான்..!
**
கசிந்த நீரில்
கல் லெறிந்துவிட்டு போனவளும்
நீதான்...!
**
இப்போதும்
நான்ஒரு வகை.
உணர்ச்சியற்ற
மரக்கட்டைதான்!?
**
மீண்டும்
இந்த மரம்
துளிர் விடும்
என எதிர்பார்க்காதே...!
**
ஏனென்றால்...
நீதான் ஏற்கனவே
அதன் ஆணிவேரையும்
அறுத்துவிட்டாயே!
**

அஜந்தகுமார், அக்கரைப்பற்று.

## தேன் கிண்ணம்

## நண்பனே!

நீ நடப்பதற்கு
தரையான என்னை
ஓங்கி மிதித்தாய்
நான் உனக்காக
தீ மிதித்தேன்!
**
நான் பூக்கள்
தந்தபோது நீ
வீசிச் சென்றாய்
நீ எச்சில்
உமிழ்ந்தபோது நான்
ஏற்றுக்கொண்டேன்!
**
உனக்காக என்
சந்தோஷத்தையெல்லாம்
தள்ளிவைத்தேன்;
உன் சந்தோஷத்திற்காக
என்னையே நீ தள்ளி வைத்தாய்!
**
நீ எந்தன்
தூக்கத்தினைக் கெடுத்தாய்;
நான் உனக்கு
தாலாட்டுப் பாடினேன்!
**
நீ உன்னை
கண்ணாடியில் பார்த்தாய்;
நான் என்னை
உன்னிலே பார்த்தேன்!
**
என் தலைகுனிவை
தாங்கிக் கொண்டேன்,
நீ தலைகுனியாமல்
பார்த்துக் கொண்டேன்!
**
நீ என்னை
அடிக்க ஆள்வைத்தாய்;
நான் உனக்கு
பாதுகாப்புத் தந்தேன்!
**
நீ என்னை
அவமதித்து சந்தோஷம்
கண்டாய்; ஆனால்
அவமானத்திற்காக நான்
கவலைப்படவில்லை;
ஏனென்றால் உனக்கு
நான் நண்பனில்லை
என்றாலும் எனக்கு
நீதான் நண்பன்!

கொழும்புத்துறை
சாந்தரூபன்.

## வீர நடை போடு!

ஓ.. மானிடனே!
மரத்துப் போன மனதுடனே
உரத்துப் போடும் ஒலியாலே
ஒரு நாளும் விடிவொன்று
உனக்காக வந்திடாது!
•••
மரம் செடி, கொடி போல்
ஆறறிவற்ற அங்கிகள் போல்
எதற்கும் தலையாட்டுகிறாய்
எதற்காக வாழ்கின்றாய்..?
•••
உனது உரிமைகளை
உன்னுடைய உணர்வுகளை
ஒதுக்கித் தள்ளிவிட்டு
உணர்வற்று வாழாதே!
•••
உனக்கு வேண்டுமெனின்
நீதான் கேட்க வேண்டும்!
உன்னுடைய தேவைகளை–நீயே
நிறைவேற்ற வேண்டும்!
•••
வாழ்ந்தோம், மாண்டோமென்று
வாழ்க்கை வாழாது
வாழ்ந்து சாதித்து சாவதில்தான்
சரித்திரம் உன்னைப்பாடும்!
•••
உலகத்து அறிஞர்களும்
ஆற்றல் மிக்க பெரியோரும்
அமைத்திட்ட பாதைதனில்
வீர நடைபோடுவாய்!

மாணிக்கன் இளங்கோ-முன்னம் போடிவெட்டை.

## பேனா நண்பர்கள்



பெயர்: எஸ்.கேதீஸ்
வயது: 17
முகவரி:
மகாரம்பைக் குளம்,
வவுனியா.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
மி.துஷ்யந்தி
வயது: 22
முகவரி:
கோணாவளை,
வவுனியா.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
எம்.றபாய்
வயது: 19
முகவரி: 161,
கெய்ஸர் வீதி,
கொழும்பு-11.
பொழுது போக்கு:
வழமையானவை.

## முன்னேற கவனி நில்

நமக்கு நாமே எஜமானனாக இருந்தால் எந்தச் சூழ்நிலையும் நம்மை அசைத்து விட முடியாது. மகிழ்ச்சியின் மன்னனாகக் காட்சி அளிக்கலாமே தவிர, துயரத்தின் பிணியாளனாக மாற முடியாது.

நம்முடைய எண்ணம்தான் முக்கியம். கற்கண்டை சுவைக்க விரும்புவதும், கல்லைக் கடிக்க ஆவல் கொள்வதும் நம் எண்ணத்தைப் பொறுத்தது தான். நாமே தீர்மானம் செய்து கொள்ள வேண்டும்.

எண்ணம் சரியாக அமைந்து, சிந்தனைச் சிறப்பாக இருந்து உறுதியை உள்ளத்தில் விதைத்து செயல்பட்டால் சோர்வு ஏற்பட வாய்ப்பே அமையாது.

வரங்கள் 3. நல்ல மனச்சான்று, மனவளம், உடல் நலம். நாம் சில சமயம் கீழே விழுவதுகூட உற்சாகமாக எழுந்து கொள்வதற்குத் தான்.

மனம் ஒரு பெட்டியைப் போன்றது. ஒழுங்காக அடுக்கினால் அதனுள் ஒவ்வொரு பொருளையும் வைக்க முடியும். ஒழுங்கு இல்லையென்றால் எதையும் வைத்து அடுக்க இயலாது.

ஒவ்வொன்றையும் சரியாக வைத்து ஒழுங்குப்படுத்தினால் அதனுடைய அமைப்பே கம்பீரமாக இருக்கும்.

மனத்தையும், மூளையையும் தெளிவாக வைத்து கொண்டால் சோர்வு ஏற்படாது. எதுவும் சரியாக நடக்கும் பொழுது, நம் எண்ணப்படியே அமையும் போது நமக்கே மகிழ்ச்சி ஏற்படும். தைரியம் துணை வரும்.

மகிழ்ச்சி என்பது வெளியிலுள்ள சூழ்நிலைகளால் ஏற்படுவது அல்ல. அது நம்முடைய மனத்தின் உள்ளே ஏற்படுவது தான்.

ஒரே வீட்டில் சகல சவுபாக்கியங்களுடன் வாழும் அண்ணன், தம்பிகளுள் ஒருவர் மகிழ்ச்சியுடனும், மற்றொருவர் சோர்வுடனும் வாழ்வதைப் பார்க்க முடியும்.

## சோர்வை விரட்டியடியுங்கள்

நம்மிடம் இருக்க வேண்டிய குணங்கள் அறிவு, அன்பு நிறைந்த நெஞ்சு, நீதியான தீர்மானம், ஆரோக்கியமான உடல் இவைகள் மிகவும் முக்கியம்.

கலங்காத அறிவு இல்லாவிட்டால் அவசரமான முடிவு எடுத்து விடுவோம். அன்பு நிறைந்த இதயம் இல்லாவிட்டால் பெரும் சுயநலமுள்ளவராகி விடுவோம்.

நல்ல எண்ணம் இருந்தாலும், நீதியான தீர்மானம் இல்லாவிட்டால் நன்மை செய்வதை விட தீமையைச் செய்து விடுவோம். இவை அனைத்தும் இருந்தாலும் உடல் நலம் கெட்டு விட்டால் ஒன்றும் செய்ய முடியாது.

ஆரோக்கியமாக இருந்தால் தான் நாம் எந்த நிலையில் வாழ்ந்தாலும் எப்படி வாழ்க்கையை அமைத்துக் கொண்டாலும் மகிழ்ச்சியுடன் வாழ முடியும்.

சோர்வு நம்மிடம் வராமல் இருப்பதற்கு உள நலமும் ஒரு காரணமாக அமையும். உடல் நலம் குறைந்தால் உள நலமும் பாதிக்கும்.

கடவுளிடம் நாம் கேட்க வேண்டிய இந்த அமைப்பு ஏற்படுவதற்கு காரணம் மனம்தான். சோர்வுடன் வாழ்பவரும் களிப்புடன் இருப்பவரும் ஒரே உலகில் தான் வாழ்கிறார்கள். இது மனத்தின் இயல்பு.

உள்ளமே இனிப்புக்கும் கசப்புக்கும் காரணமாக அமையும். உடலை அழகு படுத்த அலங்கார ஆடைகளை அணிந்து செல்லும் நாம் மனதையும் ஏன் அதே அளவு அலங்காரமாகவும், தூய்மையாகவும் வைத்துக் கொள்ளக்கூடாது?

நாம் நினைத்தால் மனதை அழகுப்படுத்திக் கொள்ள முடியும் அல்லவா!

அன்பும், மகிழ்ச்சியும் நிலைத்திருந்தால் மனமும் அழகுடன் விளங்கும். மனம் தெளிவுடன் இருந்தால் முகம் பளிச்சென்று இருக்கும். இதனால் தான் 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்று பழமொழி கூறுகிறது.

மனமும், முகமும் பொலிவுடன் காட்சி தருகின்ற போது எப்படி சோர்வு நம்மிடம் வர முடியும்? அது தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருக்க முடியுமே தவிர அருகில் வராது. ■

## இந்தவாரம் உங்கள் பலன்

13.05.2001 தொடங்கி 19.05.2001வரை

### மேடம்:
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)
செய்தொழில் மாற்றமும், பண வருவாயும் உண்டாகும். எதிர் பார்த்த விடயங்கள் பல வார இறுதியில் வெற்றி தரும். உத்தியோகத்தில் உள்ளோர் அவதானம் தேவை. மாணவர்களுக்கு கல்வி சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள் : செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம் : 05.

### இடபம்:
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)
குடும்பத்தில் மகிழ்ச்சியும், சந்தோஷமும் நிலவும். வெளியிடப் பிரயாணங்களில் அவதானத்துடன் செயற்படவும். உத்தியோகத்தில் உள்ளோர் பதவி மாற்றம் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை காட்டும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளை குறைத்து கொள்வது நல்லது.
அதிஷ்டநாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 04.

### மிதுனம்:
(மிருக சீரிடத்து பின்னரை, திருவாதிரை புனர்பூசத்து முன்முக்கால்)
தொழில் கஷ்டங்களுக்கும் பணவருவாய்க்கும், தடங்கல்கள் ஏற்படும். வார இறுதியில் இது நிவர்த்தியாகும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளினால் தண்டிக்கப்படுவர். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஷ்டநாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 03.

### கர்க்கடகம்
(புனர்பூசத்து நாலாம் கால், பூசம் ஆயிலியம்)
தொழிலில் இருந்து வந்த கஷ்டங்கள். தீர்ந்து முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணவருவாய் சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் உயர்ச்சி பெறுவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள் வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள் : வியாழன்.
அதிஷ்ட இலக்கம் : 07.

### சிங்கம்:
(மகம், பூரம், உத்தபத்து முதற்கால்)
குடும்பத்தில், மனக்கசப்புக்கள் தோன்றும். பணவருவாய் தாமதமாகும். உத்தியோகத்தில் உள்ளோர், எதிர் பார்த்த நன்மைகள், வாத இறுதியில் வந்தடையும். மாணவர்கள் கல்வியில் நற்பலன் பெறுவர். விவசாயிகள் வியாபாரிகள் சிறந்த இலாபமடைவர்.
அதிஷ்டநாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### கன்னி:
(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)
தொழிலிலும், குடும்பத்திலும் இருந்து வந்த பிரச்சனைகள் தீர்ந்து முயற்சிகளில் வெற்றியுண்டாகும். உத்தியோகத்தில் உள்ளோர் நன்மைகள் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் இருந்து வந்த தடைகள் விலகும். விவசாயிகள் வியாபாரிகள் உரிய இலாபம் பெறுவர்.
அதிஷ்டநாள் : புதன்.
அதிஷ்ட இல : 06.

## சோதிட மாமணி தில்லை

### துலாம்:
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)
தொழில், குடும்ப நிலைகளில் பிரச்சனைகளை தோற்றுவித்தாலும், வார இறுதியில் நிவர்த்தியாகும். உத்தியோகத்தில் உள்ளோர் எதிர் பார்த்த பதவி உயர்வுகள் தாமதமடையும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

### விருட்சிகம்:
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை,)
பொருளாதார நன்மையும், குடும்ப மகிழ்ச்சியும் உண்டாகும். வெளியிட பிரயாணங்களைத் தவிர்த்து கொள்வது நல்லது. உத்தியோக ரீதியாக இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்டநாள் : வெள்ளி.
அதிஷ்ட இலக்கம் : 04.

### கிரக நிலை

| | |
|---|---|
| சூரியன் | - மேடம், |
| சந்திரன் | - தனு, மகரம், கும்பம், |
| செவ்வாய் | - தனு, |
| புதன் | - மேடம், |
| வியாழன் | - இடபம், |
| வெள்ளி | - மீனம் |
| சனி | - இடபம், |
| இராகு | - மிதுனம் |
| கேது | - கேது |

### தனு:
(மூலம், பூராடம், உத்திராடத்து முதற்கால்)
தொழில் கஷ்டங்கள் தீரும், பொருளாதாரம் சிறந்து விளங்கும். வெளியிட கருமங்களில் அவதானத்துடன் செயற்படவும், உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நன்மைகள் தரும். மாணவர்கள், கல்விச் சிறப்படைவர். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 01.

### மகரம்:
(உத்தராடத்து பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை)
தொழிலிலும், பொருளாதார வருவாயிலும், நன்மையுண்டாகும், குடும்பத்தில் வீண் வாக்கு வாதங்களை தவிர்த்து கொள்வது நல்லது. மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### கும்பம்:
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூட்டாதி முன் முக்கால்,)
தொழில் சிறப்பும், பண வருவாயும் சிறந்து விளங்கும். எதிர்பார்த்த கருமங்கள் தடையின்றி நிறைவேறும். உத்தியோகத்தில் உள்ளோர் மாற்றங்களுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்டநாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### மீனம்:
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி)
தொழில் கஷ்டங்கள் தீரும், பணவருவாய் சிறந்து விளங்கும். உத்தியோகஸ்தர்களுக்கு நன்மைகள் வந்து சேரும். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள், எதிர்பார்த்த இலாபம் வார இறுதியில் வந்து சேரும்.
அதிஷ்ட நாள் : திங்கள்.
அதிஷ்ட இலக்கம் : 01.

# பருவ வயதினரும் பருத் தொல்லையும்

உங்கள் முகம் அழகு மிளிரும் மழுமழுப்பான முகம். திடீரென ஒருநாள் காலையில் முகத்தைப் பார்த்தால், மெலிதாக ஒரு பரு வந்துள்ளது. இரண்டொரு நாளில் அது பெரிதாகி விடும்.

நீங்கள் என்ன செய்வீர்கள்?

கையால் கிள்ளுவீர்களா? கையால் கிள்ளுவதை விட ஒரு பெரிய தவறு வேறு இல்லை. பரு என்பதை என்ன என்று அறிந்திருக்கிறீர்களா?

முகத்தில் கொழுப்புத் தேங்கியுள்ள துவாரங்கள், முடி வளரும் துவாரங்களில் தான் பருக்கள் ஏற்படுகின்றன. பருவ வயதினர்தான் இந்தப் பருத்தொல்லையால் அதிகம் அவதிப்படுகின்றனர்.



**பரு எதனால் ஏற்படுகின்றது?**

- சரியான நேரத்தில் உணவு உட்கொள்ளாமை, அதிக கொழுப்பு மற்றும் மாவுப்பொருட்கள் நிறைந்த உணவை உட்கொள்ளுதல், சீனி அதிகம் சேர்த்தல் உடலுக்குத் தேவையான தண்ணீர் குடிக்காமல் இருத்தல் ஆகியவை பருக்கள் ஏற்பட முழு முதற் காரணங்கள் ஆகும்.
- அளவுக்கதிகமாக தேனீர், கோப்பி, அல்கஹோல் ஆகியவை குடித்தாலும் பருக்கள் ஏற்பட வாய்ப்புண்டு.
- இவற்றுடன் பரு ஏற்பட அதிக வாய்ப்பை ஏற்படுத்துபவை சமிபாடின்மையும் மலச்சிக்கலும்.

**பருவை நீக்க என்ன வழிகள்?**

பருவை நீக்கப்பல வழிகள் உண்டு. பருவுக்குக் காரணமான பக்ரீரியாக்களை அழிக்கவல்ல மற்றும் சருமத்தின் மேலுள்ள திசுக்களை அழிக்கும் களிம்புகளைப் பூசிக் கொண்டால் தற்காலிகத் தீர்வு காணலாம்.

**ஆனால் நிரந்தரமாக...**

சாப்பிடும் உணவு வகைகளில் கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது. ஓரளவு பரு ஏற்படுவதைத் தடுக்கும்.

நிறையக் காய்கறிகள், பருப்பு வகைகள், பழங்கள், முளை கட்டிய பயறு, உலர் பழங்களைச் சாப்பிட்டால் பருவைத் தடுக்கலாம். உடல் ஆரோக்கியத்திற்கும் இது ஏற்றது.

ஆட்டிறைச்சி, சீனி, கோப்பி, தேனீர், சொக்லேட்டுக்கள், ஊறுகாய், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் ஆகியவற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

உருளைக்கிழங்குச் சாறை எடுத்துப் பருக்களின் மீது தடவி வந்தால் நாளடைவில் பருக்கள் மறையும். உருளைக்கிழங்கை மசித்துத் தினமும் முகத்தில் பூசி வர, முகம் பளபளப்பாகி விடும்.

# எப்படி எப்படி குளிப்பது எப்படி?



குளிப்பதிலும் சில விஷயங்கள் இருக்கின்றன. எப்போது, எப்படிக் குளிக்க வேண்டும் என்று தெரியுமா உங்களுக்கு?

* காலை, மாலை இருநேரமும் தான் குளிப்பதற்குச் சரியான நேரம். இடைப்பட்ட நேரங்களில் குளிப்பது அவ்வளவு நல்லதல்ல.

* காய்ச்சல், கண்நோய், அஜீரணம் போன்றவை இருக்கும் நேரங்களில் குளிக்காதீர்கள்.

* நன்றாக வியர்த்திருக்கும் போதும், உணவுண்ட பின்னரும் குளிக்காதீர்கள்.

* எண்ணெய் தேய்த்துக் குளிப்பதே உடலுக்கு நல்லது. இதுவே உடலுக்கு ஆரோக்கியத்தையும் சுகத்தையும் கொடுக்கும்.

* குளிக்கும் நீரில் சிறிதளவு எலுமிச்சை சாறை விடலாம். இதை விட்டுக் குளித்தால் புத்துணர்ச்சி கிடைக்கும்.

* சவர்க்காரத்தை அதிகம் பயன்படுத்துவது உடலுக்கு அவ்வளவு நல்லதல்ல. தோலில் இருக்கும் எண்ணைத் தன்மை வறண்டு போய் விடும்.

* கடலைமாவு, பயத்தம்மாவு போன்றவைகளைத் தேய்த்து எண்ணெயையும் போக்கலாம்.

* சவர்க்காரம் போட்டு உடலைத் தேய்க்கும்போது கழுத்தின் பின்புறம் கை, கால்கள், காது, அக்குள் பகுதி, நகங்கள் போன்ற அழுக்குப்படியும் பகுதிகளில் அழுந்தத் தேய்த்துக் குளிக்க வேண்டும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** JL

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 19-05-2001

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது 46 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

## மோனிக்காவின் வேதனை விடைபெற்றது

ஜனாதிபதி கிளின்ரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட 'ரைம்ஸ்' சஞ்சிகை விழாவில் பங்கெடுத்துக் கொண்ட மோனிக்காவின் சட்டத்தரணி பில் கின்ஸ் பேர்க்கிடம், கிளின்ரன் உரையாடி, 'மோனிக்காவுக்கு எனது வாழ்த்துக்களைக் கூறுங்கள்' என்று கூறியது வெறும் பொய் என்பது சில நாட்களிலேயே மோனிக்காவுக்குத் தெரிந்துவிட்டது. தன்னை மறக்காமல்; தன் காதலர் வாழ்த்தித் தகவல் அனுப்பியிருப்பதை அறிந்து எவ்வளவுக் கெவ்வளவு அவள் மகிழ்ச்சியடைந்தாளோ, அத்தகவல் பொய் என்றான பின்னர், அதைவிடப் பன்மடங்கு வேதனையும் அடைந்தாள்.

'ரைம்ஸ்' சஞ்சிகையில் தனக்குப் பழக்கமான ஒருவரின் உதவியால் ஓர் அழைப்பிதழைப் பெற்றுக்கொண்ட கின்ஸ்பேர்க், எப்படியோ அந்த விழாவில் ஒருவராகக் கலந்து கொண்டாரே தவிர, கிளின்ரனின் அருகில் போகவே அவரால் முடியவில்லை.

கின்ஸ்பேர்கின் இத்தகைய தற்புகழ்ச்சி நாட்டம் கரை கடந்துபோய்க் கொண்டிருந்ததனால் மோனிக்காவின் தந்தை லிவின்ஸ்கி மோனிக்காவின் ஊடகத் தொடர்பாடல்களுக்கென மற்றுமொரு நிபுணரான ஜூடி ஸ்மித் என்பவரை ஏற்பாடு செய்தார். கின்ஸ்பேர்க் மோனிக்காவின் வழக்குடன் தொடர்புடைய சட்டத்துறையை மட்டும் கவனித்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டார். இதனால் கின்ஸ்பேர்க் சினமடைந்தார். தான் இத்தனை காலமும் செய்த பணிகளை மறந்து நன்றி கெட்டதனமாக மோனிக்கா நடந்து



கொண்டாள் என்று குற்றம் சாட்டினார்.

1995 ஜூலை 23ம் திகதியன்று காலையில் மிக மகிழ்ச்சியாக மோனிக்கா கண்விழித்தாள். லொஸ் ஏஞ்சல்சில் தன்னுடைய தந்தையின் இல்லத்தில் அப்போது அவள் இருந்தாள். அவளுடைய சிற்றன்னை பார்பரா சற்று நேரத்தில் அவளிடம் வந்து ஆரத்தழுவி பிறந்தநாள் வாழ்த்துக் கூறினாள்.

மோனிக்காவின் நெருக்கமான சினேகிதி காத்தறின் ஆல்டே டேவிஸ், மோனிக்காவின் 25வது பிறந்தநாளான அன்றைய தினம் அவளுடனேயே ஆனந்தமாகப் பொழுதைக் களிப்பதற்காக போட்லண்டிலிருந்து வந்திருந்தாள். சற்று நேரத்திலெல்லாம் மோனிக்காவின் நண்பிகளின் வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. அவளுடைய தாயார் மார்சியா சிறிய தகப்பனார் பீட்டர் ஸ்ட்ரௌஸ் ஆகிய இருவரும் அங்கு வந்து சேர்ந்தனர். வேறு பல சினேகிதிகளும் மோனிக்காவுக்கு தொலைபேசி மூலம் வாழ்த்துக் கூறினர்.

மோனிக்காவை சட்டப்பிடியில் மடக்குவதற்கு திடசங்கற்பம் பூண்டிருந்த கென்னத் ஸ்டாரும் மோனிக்காவின் 25வது பிறந்த நாளன்றே அவளுக்கு பரிசளிக்க விரும்பினார் போலும். மோனிக்காவைக் குற்றவாளியாகக் கூண்டில் ஏற்றுவதற்கான குற்றச்சாட்டுப் பட்டியலை அன்றே தயாரித்து ஆயத்தமாக வைத்திருந்தார்.

'நீதி விசாரணைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் குற்றம் புரிந்தார்' என்பதே மோனிக்காமீது அவர் சுமத்துவதற்குத் தயாரித்திருந்த முழுமுதற் குற்றச்சாட்டாகும். இருப்பினும் அவளை குற்றச் சாட்டுகளிலிருந்து விடுவிக்கவும் வழி இருப்பதாகவும் ஒரு சலுகையைத்தர ஆயத்தமாகவிருந்தார்.

பிளாட்டோ கச்சேரிஸ் என்ற கென் ஸ்டாரின் சட்ட நிபுணர், அன்றையதினம் மோனிக்காவுடனும், அவளுடைய தந்தையார் டாக்டர் லிவின்ஸ்கியிடமும் தொலைபேசி மாநாடு நடத்த ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்தார். ஆனால் அதே நேரத்தில் டாக்டர் லிவின்ஸ்கி தனது மருத்துவமனையில் ஒரு சிக்கலான சத்திரசிகிச்சையில் ஈடுபட்டிருந்தார்.

இருப்பினும் கடந்த மே மாதத்தில் மோனிக்காவின் கை அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. பொதுவாக மிகப் பாரதூரமான குற்றச் செயல் புரிந்தவர்கள் சிறைத் தண்டனை பெற்றால் மட்டுமே இவ்வாறு விரல் அடையாளங்கள் பதிவு செய்யப்படும். குற்றம் நிரூபிக்கப்படுமுன்னரே இவ்வாறு கைவிரல் அடையாளங்கள் பெறப்பட்டமையினால், தனக்குச் சிறைத் தண்டனை நிச்சயம் என்று மோனிக்கா உணர்ந்து கொண்டாள். அவளுடையதாய் மார்சியாவும் தந்தை லிவின்ஸ்கியும்கூட இதனால் பெரிதும் பயந்திருந்தனர்.

இதற்கிடையில் கென் ஸ்டார் மற்றுமொரு துணிகரமான செயலையும் செய்திருந்தார். ஜூலை 17ம் திகதியன்று ஜனாதிபதி கிளின்ரனுக்கே கிராண்ட் ஜூரி விசாரணைக்கான அழைப்பாணையையும் அனுப்பி வைத்தார்.

கிளின்ரன் தன்னைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார் என்று பௌலா ஜோன்ஸ் போட்டிருந்த குற்றச்சாட்டு விசாரணை முடிந்துவிட்டது. ஆனால் இவ்வழக்குத் தள்ளுபடியாகி விட்டது. இதே வழக்கில் ஒரு சாட்சியாகவே மோனிக்காவைச் சேர்ப்பதற்கு கென். ஸ்டார் ஆரம்பத்தில் முயற்சித்தார். இவ்வழக்கு ஆதாரமற்றது என்று தீர்ப்பளிக்கப்பட்டமை, இவ்வழக்கைக் கொண்டு நடத்திய கென்னத் ஸ்டாருக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்பட்டது.

இதுதவிர லிண்டா ட்ரிப்பும் குற்றவாளியாக்கப்பட்ட சம்பவமும் இடம்பெற்றது. இருவருக்கிடையிலான தொலைபேசித் தொடர்பாடலை அவர்களுக்குத் தெரியாமல் ஒட்டுக் கேட்டு ஒலிப்பதிவு செய்தமை பாரதூரமான குற்றம் என அவள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 'கெடுவார் கேடு நினைத்தால் தானேவரும் கேடு' என்ற முன்னோர் மொழியின் உண்மை புலப்பட்டது. இத்தகவலை அறிந்த மோனிக்காவின் குடும்பத்தினர் அனைவரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் அந்த நேரத்திலும் தனது, 'முன்னாள் சினேகிதிக்கு இத்தகைய துன்பம் வரக்கூடாது' என்று மோனிக்கா வருந்தினாள்.

ஜனாதிபதி கிளின்ரனுக்கு அழைப்பாணையை கென் ஸ்டார் ஜூலை 17ம் திகதி அன்று அனுப்பி வைத்ததைத் தொடர்ந்து, நான்கு நாட்களின் பின்னர், அவருடைய சட்ட ஆலோசகர்களான பிளாட்டோ கச்சேரிஸ் மற்றும் ஸ்ரியன் ஆகியோரை வாஷிங்டனிலுள்ள தனது அலுவலகத்துக்கு வருமாறு அழைத்திருந்தார். ஏற்கனவே வழக்கு விசாரணைகளிலிருந்தும் குற்றவாளியாகத் தன்னை நிருபிப்பதிலிருந்தும் விடுவிக்குமாறு மோனிக்கா, தனது வழக்கறிஞர்கள் மூலம் ஒருமனுவைத் தாக்கல் செய்திருந்தாள். இந்த மனுமீதான சாதக பாதகங்களை அலசி ஆராய்வதற்காகவே ஸ்டார் அவர்கள் இருவரையும் அழைத்திருந்தார்.

மூவரும் பலமணிநேரம் ஆராய்ந்த பின்னர் மோனிக்காவிடம் தான் பல விடயங்களை விசாரித்தறிய வேண்டியிருப்பதனால், நியூயோர்க்கில் அவள் தன்னை வந்து பார்க்க வேண்டும் என்றும் பிளாட்டோ கச்சேரிஸ் மோனிக்காவைத் தன்னிடம் அழைத்துவர வேண்டும் என்றும் அன்று கேட்டிருந்தார்.

இதனாலேயே மோனிக்காவின் 25வது பிறந்த நாளன்று கச்சேரிஸ் பிறந்த நாள் பரிசாக கென் ஸ்டாரின் தகவலுடன் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் மோனிக்காவுடன் தொடர்பு கொண்டார். ஏற்கனவே கூறியதுபோல் டாக்டர் லிவின்ஸ்கியின் சத்திரசிகிச்சை முடிவடைந்ததும் அவருடனும் மோனிக்காவுடனும் தொலைபேசியில் மாநாடு நடத்தினார்.

நியூயோர்க் நகருக்கு மோனிக்கா வரும் தகவல் எவருக்கும் தெரியாதிருக்க வேண்டும். அவள்மீதுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து அவளை விடுவிப்பதற்கான ஏற்பாடுகள் நடை பெறுவது தொடர்பாகவும் இரகசியமாகவே இருக்கவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது.

லொஸ் ஏஞ்சல்சில் தனது தகப்பனார் வீட்டிலிருந்து புறப்படும் போதே மோனிக்கா தனது நடை உடை பாவனை அனைத்தையும், தலை அலங்காரத்தையும் மாற்றிக் கொண்டாள். எவர் அவளைக் கண்டாலும் அவளை யார் என்று அடையாளம் காணமுடி யாதவாறு ஒப்பனை செய்து கொண்டாள்.

கென்னத் ஸ்டார் மோனிக்காவுக்கு எந்தவிதமான பின் விளைவுகளும் ஏற்படாதவாறும், குற்றவாளியென குற்றம் சாட்டுவதற்கு இடமில்லாத வகையில் விடுதலையளிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார் என்ற முறையில் கென்னத் ஸ்டாரின் சட்ட ஆலோசகர்களில் ஒருவரான ராம்டாஸ் சூசகமாக மோனிக்காவிடம் தெரிவித்தார். இருப்பினும் கடைசித் தடவையாக தான் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையான பதில்களை மோனிக்கா, ஒளிவு மறைவின்றி தன்னிடம் கூறியாக வேண்டும். இதுவே ஸ்டாரின் முக்கியமான நிபந்தனை. அவருடைய கேள்விகளுக்கு பதிலளிப்பதற்காகவே மோனிக்கா லொஸ் ஏஞ்சல்சில் இருந்து நியூயோர்க்கிற்கு விமானம் மூலம் பறந்து சென்றாள்.

விமானப் பயணம் 5 மணி நேரம் நீடித்தது. அவள் அணிந்திருந்த உடைகளோ ஒப்பனைகளோ விமானப்பயணிகள் எவரையும் ஈர்க்கவில்லை. எனவே எத்தகைய தொந்தரவுமின்றி கென்னத் ஸ்டார் குறிப்பிட்டிருந்த இடத்தைப் போய் அடைந்தாள்.

கென்னத் ஸ்டாரின் விசாரணைகளின் போது ஏற்கனவே தான் சமர்ப்பித்திருந்த-கிளின்டனுக்கும் தனக்குமிடையில் ஏற்பட்டிருந்த பாலியல் தொடர்புகள் பற்றிய சத்தியக் கடதாசி பொய்யானது என்று மறுத்ததுடன், தனக்கும் அவருக்கும் பாலியல் தொடர்புகள் இருந்தன என்பதை ஒப்புக் கொண்டாள்.

ஒரு பெண் இது போன்ற அந்திரங்கங்களை தான் ஆயுள் பூராவும் மறைத்து வைத்திருக்க வேண்டிய நிலை இருந்த போதிலும், தன்னுடைய அன்புக்கும் பெரு மதிப்புக்கும் ஆளான தன் காதலனுடன் தான் கொண்டிருந்த உறவுகளை வெளிப்படுத்த வேண்டிய நிலை தனக்கு ஏற்பட்டிருந்ததை எண்ணி மிகவும் வருந்தினாள்.

கென்னத் ஸ்டாரின் இந்த விசாரணையைத் தொடர்ந்து 'மோனிக்கா ஒரு குற்றவாளி என்று நீதி விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டிய அவசியமில்லை' என்று எழுத்து மூலமான அறிக்கை கென்னத் ஸ்டார் குழுவினரால் வெளியிடப்பட்டது. இத்துடன் கடந்த ஆறு மாதங்களாக மோனிக்காவையும் அவளுடைய குடும்பத்தாரையும், சிநேகிதிகளையும் ஆட்டிப் படைத்த பயங்கர சூழ்நிலை மறைந்தது.

இருப்பினும் 'என்னுடைய அன்புக்குரிய காதலரை மீண்டும் நான் அணுக முடியாத நிலை ஏற்பட்டுவிட்டதே' என்ற ஏக்கம் மட்டும் அவளுடைய உள்ளத்தில் ஆணிவேராக அமைந்துவிட்டது.

— முற்றும் —

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### வத்தளை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

திருமதி எஸ்.வசந்தி
344/6, ஹெந்தளை வீதி, வத்தளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பாப்பா முரசு சிறுகதை

# மண்மேடு

மகத நாட்டை புகழுடன் ஆண்டு வந்தான் மன்னன் மகேந்திர பூபதி. அவனது ஆட்சியில் மக்கள் இன்புற்றிருந்தனர். மகதப்பேரரசு என்ற பெயருடன் சிறப்பான ஆட்சி நடைபெற்றது.



ஒருநாள் பக்கத்து நாட்டு அரசன், மகேந்திரபூபதியின் அரண்மனைக்கு விருந்தினனாக வந்திருந்தான். அவனை மிகவும் சிறப்பாக கவனித்தான். அருமையான விருந்து கொடுத்து அசத்தினான். மன்னனின் கவனிப்பில் மகிழ்ந்தான் விருந்தினராக வந்திருந்த மன்னன்.

அடுத்து தன்னுடைய அரண்மனை அதனுடைய செல்வ செழிப்பைச் சுற்றி காட்டினான். அதன் அழகில் மயங்கினான் பக்கத்து நாட்டு மன்னன். இருவரும் பேசிக் கொண்டே அந்தப் புரத்துச் சோலையில் நுழைந்தனர்.

அங்கே அழகழகான பூக்கள், கண்கவர் வண்ணங்களில் இருந்தன. அதைக் கண்டு ஆனந்தம் கொண்டான் பக்கத்து நாட்டு மன்னன்.

அத்துடன் மலர்களின் வாசனை ஆளைத் தூக்கியது. மனதை மயக்கும் அந்தப் பூக்களின் வாசம் இருவரையும் மயக்கியது. அங்கிருந்த அழகிய ஆசனத்தில் அமர்ந்து இருவரும் நாட்டு நடப்புகள் பற்றி பேசிக்கொண்டிருந்தனர்.

பிறகு பழத்தோட்டங்களின் பக்கம் சென்றனர். பணியாட்கள் தோட்டத்தில் காய்த்துள்ள பழங்களைக் கொண்டு வந்து கொடுத்து உபசரித்தனர். அதன் சுவையில் மயங்கினான் பக்கத்து நாட்டு அரசன். மகேந்திரபூபதியின் ரசனையைப் பாராட்டினான்.


அப்படியே மனதை மயக்கும் அந்தச் சோலை வனத்தின் இனிமையில் மயங்கியபடியே நடந்து வந்தனர். தோட்டத்தின் நடுவில் ஒரு இடம் மட்டும் மண் மேடாக காட்சியளித்தது. அது அந்தப் பூஞ்சோலையின் அழகையே கெடுத்தது.


அதைக்கண்ட அரசன், "என்ன இது அழகிய இந்தச் சோலைக்கு திருஷ்டிப் பரிகாரமாக காட்சியளிக்கிறது இந்த மண்மேடு. இந்தப் பகுதியில் ஏதேனும் பயிரிட்டிருக்கக்கூடாதா? ரொம்ப அசிங்கமா இருக்கே?" என்றான்.

"அந்தப் பகுதி எனக்குச் சொந்தமானது அல்ல. அது ஒரு மூதாட்டிக்குச் சொந்தமானது. அந்த மூதாட்டியிடம் நான் எவ்வளவோ கேட்டுவிட்டேன். ஆனால் அவர்கள் அந்தப் பகுதியை விற்க மாட்டேன் என்கிறார்," என்றான் மகேந்திரபூபதி.

"மன்னா இது உங்கள் மனதை காட்டுகிறது. நீங்கள் நீதி நெறியுடன் ஆட்சி செய்வதைக் காட்டுகிறது. உங்களைப் போன்ற ஒரு மாமன்னர் நினைத்தால் அந்த மூதாட்டியிடம் இருந்து பரித்துக் கொள்ள முடியும். அந்த மண்மேடு உங்கள் பூஞ்சோலையின் அழகைக் கெடுத்த பொழுதும் குடிமக்களின் விருப்பத்திற்கு எதிராக செயல்படாத உங்களைப் போன்ற அரசர் கிடைப்பதற்கு மக்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

இப்போது அந்த மண்மேடு என்கண்களுக்கு அழகிய சோலைவனமாக காட்சியளிக்கிறது" என்றான் பக்கத்து நாட்டு அரசன். அதைக்கேட்டு மகிழ்ந்தான் மகேந்திரபூபதி.






## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **19.05.2001**.

வர்ணம் தீட்டும் போட்டி இல: **394**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 392

**பரிசுக்குரியவர்:**
எ.ஃப். சர்பானா,
பிறைந்துறைச் சேனை, வாழைச்சேனை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| சி.சுதர்சன், ஒல்ட் பீகொக் தமிழ் வித். புஸ்ஸல்லாவ. | எஸ். சத்தியா, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. |
| எம். சகீல் ரபீக், ஜெயிலானி தேசிய பாடசாலை, பலாங்கொடை. | தவராசா சாணவி, புலோலி த.க.பாடசாலை, யாழ்ப்பாணம். |
| லோகநாகன் மதன், சரஸ்வதி கனிஷ்ட வித்., பதுளை. | காண்டீபன் ருஷாந், சரஸ்வதி வித்., கிண்ணையடி, வாழைச்சேனை. |
| ஞா. கபிலாஷ், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு. | முஷ்ரபா ஸித்தீக், முஸ்லிம் பாலிகா வித்தியாலயம், கொழும்பு. |
| ஏ.எல். யாஸீர் அரபாத், அறபா வித்தியாலயம், ஏறாவூர்-01. | எஸ். சுகநாதன், இராகலை தமிழ் மகா வித்., நுவரெலியா. |

## பணம்.... பணம்.... பணம்....



முதன் முதலில் கி.பி.910ம் ஆண்டில் சீனா காகித நாணயத்தைக் கொண்டுவர முயற்சி செய்தது. ஆனால் கி.பி. 970ம் ஆண்டு தான் இந்த முயற்சி கை கூடியது.



தோலினாலான நாணயத்தை உருவாக்கியவர் முகமது பின் துக்ளக். சீல், வால்ரஸ் போன்ற மிருகங்களின் தோல்களில் இதை அச்சிட்டார். 18ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இது நடந்தது.



வங்கி மூலம் முதன் முதலில் நாணயங்கள் அச்சிடப்பட்டது 1661ம் ஆண்டில் தான். சுவீடன் தலைநகர் ஸ்டொக்ஹோமில் உள்ள வங்கி ஒன்றில் முதலில் நாணயம் அச்சிடப்பட்டது.

## நடனமாடும் பறவைகள்

அவுஸ்திரேலியாவில் உள்ள ஒரு வகை நாரைகளுக்குப் பெயர் புரோல்கா. இந்த நாரைகள் அழகாக நடனமாடும். புரோல்கா என்ற பெயர் எப்படி வந்தது என்று உங்களுக்குத் தெரியுமா?

முற்காலத்தில் புரோல்கா என்ற அழகிய பெண்ணொருத்தி இருந்தாள். இவள் அழகாக நடனமாடுவாள்.

ஒரு முறை இவள் மலையுச்சியொன்றில் காணாமல் போனாள்.



புரோல்கா காணாமல் போன மலையில் இருந்து இந்த நாரைகள் தோன்றியதால், இந்த நாரைகளைப் புரோல்கா என்று அழைக்கின்றனர்.



# மர்மத்தீவு 04

## சங்கர்லால் துப்பறியும்

"அப்படியானால் அவர்களுக்குத் தேவையான பொருள்கள். உணவுகள் எல்லாம் அங்கேயே கிடைக்கின்றன என்று சொல்லுங்கள்!" என்றார் சங்கர்லால்.

"ஆமாம்"

"அந்தத் தீவைப் பற்றி வேறு ஒன்றுமே தெரியாதா?"

"தெரியும்"

"சொல்லுங்கள்" என்றார் சங்கர்லால்.

"ஒரு நாள் மாலை. ஓட்டலின் மேல் மாடியிலிருந்து தொலை நோக்கியால் தீவைப்பார்த்துக் கொண்டிருந்தேன். முயல் ஒன்று கடற்கரை ஓரமாக ஓடிப்போய் முள்கம்பி வேலியின் இடையே நுழைந்தது. அதன் உடம்பு கம்பியின்மீது பட்டதும் மின்சாரம் அதைத் தாக்கியது. உடனே முயல் அந்த இடத்திலேயே இறந்துவிட்டது!"

"பல நாட்களுக்குப் பின் மற்றொரு நிகழ்ச்சி நடந்தது. ஓர் அழகிய பெண் கடற்கரையில் குளித்துவிட்டு, முள் கம்பிகளுக்கு இடையே புகுந்து மறைந்தாள், அவளை மின்சாரம் தாக்கவில்லை!"

"அவ்வளவுதானா?"

"அவ்வளவுதான்"

"வேறு ஒன்றும் நடக்கவில்லையா?"

"நான் பார்த்தவரையில் வேறு ஒன்றும் நடக்கவில்லை" என்றார் ஓட்டல் பொறுப்பாளர். பிறகு அவர் மெல்ல நழுவி விட்டார்!

இந்த நேரத்தில் இரண்டு நபர்கள் ஓட்டலுக்குள் நுழைந்தார்கள். அந்த இரண்டு பேரில் ஒருவன், நடுத்தர வயதானவன், மற்றொருவன் இளைஞன். அவர்கள் இருவரையும் சங்கர்லால் கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்தார்.

சங்கர்லால் எவரையாவது கொஞ்ச நேரம் உற்றுப்பார்த்தால், அந்தப் பார்வையில் பெரும் பொருள் அடங்கி இருக்கிறது என்று பொருள்.

அவர் மெல்ல, "மாணிக்கம்" என்றார்.

"சொல்லுங்கள்" என்றான் மாணிக்கம்.

"அந்த இரண்டு நபர்களைப் பார். அவர்கள் எவர் என்று தெரிந்து வா!" என்றார் சங்கர்லால்.

சங்கர்லால் குறிப்பிட்ட இரண்டு நபர்களும் இரண்டு பெரிய பைகளைச் சுமந்து வந்தார்கள். அவர்கள் சுமந்து வந்த பைகள் மட்டும் நனைந்திருந்தன. ஆனால் அவர்கள் உடையோ, உடலோ கொஞ்சமும் நனைந்திருக்கவில்லை!

"இதோ வந்து விட்டேன்" என்று சொல்லிவிட்டு மாணிக்கம் புறப்பட்டான்.

"வேடிக்கையான தீவுகள், வேடிக்கையான நிகழ்ச்சிகள்" என்றார் சங்கர்லால் யோகோ டானியிடம்.

அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை!

சங்கர்லாலைத் தவிர வேறு எவருக்கும் எதுவும் விளங்கவில்லை!

மாணிக்கம், பத்து நிமிடங்களில் திரும்பி வந்தபோது அவன் முகத்தில் தெளிவு இல்லை. புரியாத ஏதோ ஓர் உண்மையைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்தவனைப் போல் அவன் காணப்பட்டான்.

சங்கர்லால் அவன் முகத்தைப் பார்த்தார்.

"யார் அவனுகள்?" என்றார்.

"இரண்டு நபர்களும் சென்னையில் இருக்கும் ஒரு பெரிய மருந்து உற்பத்திக் கம்பெனியில் வேலை செய்பவர்கள். இங்கே வந்து சில நாள்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று வந்திருக்கிறார்கள். இந்தத் தீவுக்கு அவர்கள் புதியவர்கள்!"

"அவர்கள் எப்படி இங்கே வந்தார்கள்?" என்று கேட்டார் சங்கர்லால்.

"அதுதான் விளங்கவில்லை. இப்போது இந்தத் தீவுக்குக்கு கப்பலோ படகோ வரவில்லை. அவர்கள் கொண்டு வந்த மூட்டைகள் மட்டும் நனைந்திருந்தன.

"ஆனால் அவர்கள் உடைகள், ஷுக்கள் நனையவில்லை!"

"அவர்கள் இங்கே தங்கி இருக்கிறார்களா?"

"ஆமாம். மாடியில் ஓர் அறை எடுத்துக் கொண்டு தங்கி இருக்கிறார்கள்."


அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது சில விமானங்கள் மிகுந்த ஓசையுடன் அந்தத் தீவில் குறுக்கும் நெடுக்குமாக பறந்தன.

காதைப் பிளக்கும் ஓசை!

சங்கர்லால் விரைந்து எழுந்து ஓடிப் போய்ச் சன்னல் பக்கம் பார்த்தார்.

கப்பற் படையைச் சேர்ந்த போர் விமானங்கள், மிகச் சிறிய விமானங்கள். கப்பலிலிருந்து புறப்படும் அந்த விமானங்கள் பயிற்சிபெற மேலே வட்டமிட்டன. மீண்டும் அவை போர்க் கப்பல்களில் போய் இறங்கிவிடும். போர்க் கப்பலுக்கு ஆபத்து ஏற்படும் போது பகைவர்களைத் தாக்க இந்த விமானங்கள் கப்பலிலிருந்து புறப்படும். இவை ஒன்றும் புதியவை அல்ல. இந்தியக் கப்பற் படையில் விமானங்களைச் சுமந்து செல்லும் கப்பல்கள் பல இருக்கின்றன. அவற்றில் ஒன்றிரண்டு இந்தப் பகுதியில், கடலில் ஆழமான பகுதியில் எங்கேயோ நின்று கொண்டிருக்கின்றன என்று முடிவு செய்தார் சங்கர்லால்.

யோகோ டானியிடம் வந்து அவர் சொன்னார்; 'இப்போது பறந்த விமானங்கள் நமக்கு உதவி செய்கின்றன. அவை பறப்பதைப் போல் நம் விமானமும் தாழப் பறக்கலாம். அப்படித் தாழப் பறக்கும் போது எவரும் ஐயப்பட மாட்டார்கள். ஏதோ பயிற்சி விமானம் இது என்றே எல்லாரும் எண்ணுவார்கள். நமது விமானத்தை மர்மத்தீவின் குறுக்கும் நெடுக்குமாகச் சில தடவைகள் தாழப் பறக்கவிட வேண்டும்; பூமியிலிருந்து இரண்டாயிரம் அடி உயரத்தில் சில தடவை குறுக்கும் நெடுக்குமாய் பறக்கவிட வேண்டும் முடியுமா?"



சங்கர்லால் ஏதோ ஆபத்தை நோக்கி

விரைந்துபோய்க் கொண்டிருக்கிறார் என்ற உணர்ச்சி அந்தப் பெண்ணுக்கு மிகுந்தது. மேலிட்டது!

ஊசி செலுத்தப்பட்டு இறந்து போன நாய், ஓட்டலுக்கு நனைந்த மூட்டைகளுடன் வந்த இரண்டு பேர், தாழப் பறந்த விமா

**தமிழ்வாணன்**

னங்கள் ஆகியவை அவள் மனத்தில் ஒரு வகை அச்சத்தைக் கிளப்பின. என்றாலும், சங்கர்லால் இருந்ததால் துணிவுடன் காணப்பட்டாள்.

"முடியுமாவா? ஆயிரம் அடி உயரத்தில் கூடப் பறக்கலாமே! ஆனால் எவரும் நம் விமானத்தைச்சுட்டுத் தள்ளாமல் இருக்க வேண்டும். அதுவும் தாழப் பறந்தால், நம் விமானம் விமானப் படையையோ கப்பற் படையையோ சேர்ந்தது அல்லது என்பது தெளிவாகத் தெரியுமே!" என்றாள் யோகோ டானி.

"எவரும் சுடமாட்டார்கள். சுடப் போவது நாம்தான்" என்றார் சங்கர்லால்.

"சுடப் போகிறீர்களா? எதைச் சுடப் போகீறீர்கள்?" என்று மாணிக்கம் புரியாமல் கேட்டான்.

"ஜெட்பார்ட் விமானத்தில் ஆற்றல் மிகுந்த காமிரா பொருத்தப்பட்டிருக்கிறது. அதில் பறந்துகொண்டே மூவாயிரம் அடித் தொலைவு வரையில் காணப்படும் இடங்களையும் கட்டடங்களையும் படமாகச் சுடலாமே! மர்மத் தீவைப் புகைப்படம் எடுக்கப் போகிறேன்! வேறு ஒன்றுமில்லை!" என்றார்.

"மர்மத்தீவில் என்ன இருக்கும் என்று எண்ணுகிறீர்கள்?" என்று கேட்டான் மாணிக்கம்.

"புகைப்படங்கள் எடுத்த பிறகு சொல்லுகிறேன்" என்றார் சங்கர்லால் சிரித்துக் கொண்டே.

"இப்போதே போகலாமா?" என்று யோகோ டானி கேட்டாள்.

"கொஞ்சநேரம் போகட்டும். அதற்குள் இந்தக் கப்பற்படை விமானங்கள் மறைந்து விடும்" என்றார் சங்கர்லால்.

அவர் மீண்டும் ஒரு கோப்பைத் தேநீர் கொண்டுவரும் படி சொல்லிச் சாப்பிட்டார். யோகோடானியும் மாணிக்கமும் கூட மற்றொரு கோப்பைத் தேநீர் வரவழைத்துச் சாப்பிட்டார்கள்.

இரண்டாவது கோப்பைத் தேநீர் சாப்பிட்டாலாவது சங்கர்லாலின் மூளையைப் போல் அவர்கள் மூளையும் வேலை செய்யாதா என்ற அற்ப ஆசைதான் அதற்குக் காரணம்!

சங்கர்லாலும் மாணிக்கமும் யோகோ டானியும் மீண்டும் மோட்டார்ப் படகில் புறப்பட்டபோது அதில் இறந்துபோன நாய் ராஜா கிடந்தது.

விமானத்தை நெருங்கியதும் சங்கர்லால், மாணிக்கத்திடம் சொன்னார், "மாணிக்கம்! நாயைப் பரிசோதனை செய்து பார். விமானத்தில் இருக்கும் பரிசோதனைக் கூடத்தில் எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றன. உன் பரிசோதனை முடிந்ததும் நாம் விமானத்தில் புறப்படலாம். அதுவரையில் யோகோ டானியிடம் நான் கொஞ்சம் பேசிக் கொண்டிருக்கிறேன்."

"ஆகட்டும்!" என்றான் மாணிக்கம்.

படகு, விமானத்தின் பக்கத்தில் சென்றதும், விமானத்தின் பக்கவாட்டில் இருந்த கதவு திறந்தது. மாணிக்கம் இறந்து கிடந்த நாயைத் தூக்கிக்கொண்டு பரிசோதனைக் கூடத்துக்குள் சென்றான்.

சங்கர்லால், விமானத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டார்.

யோகோடானியும் விமானத்தில் வந்து விசையை அமுக்கினான். படகு விமானத்திற்குள் மறைந்துவிட்டது. கதவு மூடிக்கொண்டது.

**தொடரும்...**

# தாகூரின் காதலிகள்

வாழ்ந்து முடித்தவர்களின் வாழ்க்கையை படிப்பது என்பது தனிச் சுகம்தான்! நாவல் என்பது கற்பனையின் விளைச்சல்! வாழ்க்கை வரலாறு என்பது நிஜங்களின் மேய்ச்சல். இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டு எழுதப்படுவதல்ல வாழ்க்கை வரலாறு! திசை தெரியாமல் பயணிக்கும் அனுபவம் அது! கற்பனைகளையும் கடந்தது.



உண்மை சுடும் என்பார்கள். அது உண்மை.

அண்மையில் வெளிவந்த இருவரின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்கள் இந்தியத் தலைவர்கள் சிலரை எரிமலையாக மாற்றி விட்டன!

இங்கிலாந்தில் உள்ள ஹார்பெர் காலின்ஸ் பதிப்பகம் வெளியிட்டுள்ள 'இந்திரா' என்கிற புத்தகத்தை-தடை செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர்கள் போர்க்கொடி பிடித்திருக்கிறார்கள்.

இந்தப் புத்தகத்தில் இந்திராகாந்தியின் இன்னொரு பக்கத்தை அதாவது தனிப்பட்ட வாழ்க்கையை தொட்டிருக்கிறார் கேத்தரின்.

இதேபோன்று இந்தியாவின் பெருமைக்குரிய கவிஞர் இரவீந்திரநாத் தாகூரைப்பற்றியும் ஒரு வரலாற்று நாவல் வந்திருக்கிறது. அவருடைய காதலிகளைப் பற்றிய செய்திகள் அதில் நிறைய..!

'ஜன கண மன' எழுதிய தாகூர் தேன் சொட்டும் காதல் வரிகளையும் எழுதியிருக்கிறார்.

அவரின் காதலிகளை முன்னிலைப் படுத்தி எழுதிய கவிதை வரிகளில் மயக்கும் மருந்துகள் தடவிய மன்மதக்கணைகள் இருந்தன. லேடி ரானுவின் அழகை வர்ணித்து எழுதிய கவிதைகள் இன்றும் இளமையானவை! அவருடைய 'தோட்டக்காரன்' கவிதையை உதாரணமாகச் சொல்லலாம்!

கவிஞர் தாகூரின் காதல் வாழ்க்கையை இப்போது விமர்சித்திருப்பவர் சுனில் கங்கோபாத்யாயா என்கிற ஆராய்ச்சியாளர். நாவலாசிரியரும் ஆவார். இவருடைய நாவல்களில்தான் தாகூருடன் காதலிகளையும் அறிமுகப்படுத்தி இருக்கிறார்.

லேடி ரானு முகர்ஜி, தாகூரின் மைத்துனி காதம்பரி, அர்ஜென்டைனா நாட்டு அழகி விக்டோரியா ஒகாம்போ, தாகூரின் உறவுக்காரப்பெண் இந்திரா தேவி சவுத்ரி. இந்த நால்வரையும் கங்கோபாத்யாயா வெளி உலகத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்.

"இது ஒரு தேசிய கவியை இழிவு படுத்தும் செயலாகாதா?"

"இழிவுபடுத்தவில்லை" என்கிறார் நாவலாசிரியர்.

"ரவீந்திரநாத் சாதாரண மனிதப்பிறவிதான். அவருடைய கடைசி காலம் வரை அவரது ஆசைகள் அழியாமல்தான் இருந்தன. ஒரே நாளில் அவர் புகழ்பெற்றுவிடவில்லை. அவர் பல்லாண்டுகள் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது" என்று பதிலளித்த கங்கோபாத்யாயா தனக்கு ஆதரவாக பொது நியதி என்ற பெயரில் நம்மை பார்த்து இப்படியும் சொல்கிறார்:

"தாகூரின் சம வயதுடையவள் தான் காதம்பரி. பொதுவாக இளமைப் பருவத்திலிருக்கும்போது சமவயதுடைய, அல்லது சற்று மூத்த பெண்களை ஆண்கள் விரும்புவார்கள். வயதான பிறகுதான் தன்னிலும் இளைய பெண்களை ஆண்கள் விரும்புவார்கள். இது பொது நியதி. தாகூர் இந்த நியதிக்கு அப்பாற்பட்டவர் அல்ல. புகழ் வாய்ந்த ஒரு மனிதன் தன்னுடைய மனைவியைத் தவிர வேறு பெண்களுடன் உறவு வைத்துக் கொள்ளக்கூடாது என்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்?" என்கிறார் கங்கோபாத்யாயா!

தாகூரின் வாழ்க்கையில் நுழைந்த காம்பரி தேவிக்கு கவிதைகளின்மீது அளப்பரிய காதல் உண்டு. அவள் கவிதைகளை உயிராக நினைத்தாள். இதனால் தாகூருடன் நெருங்கிப்பழக நிறைய வாய்ப்புகள் வந்தன. தாகூரின் கவிதைகளுக்கு, அவரின் சிந்தனைகளுக்கு இவள் கருவியாக இருந்தாள்.

தாகூரின் அண்ணன் ஜோதிர் இந்திரநாத்தை மணந்து கொண்டு தாகூரின் அருகிலேயே வாழ்ந்து வந்திருக்கிறாள். தாகூரின் திருமணம் காதம்பரியை கடுமையாக பாதிக்கவே, அவரின் திருமணம் முடிந்த மறுமாதம் இவள் தற்கொலை செய்து கொண்டு விட்டாள்.

இவள் கதை இப்படி என்றால் விக்டோரியா ஒகாம்போவின் கதை வேறு மாதிரி!

தாகூரை மிகவும் விரும்பிய வெளிநாட்டுப் பெண்தான் விக்டோரியா. அழகானவள். தாகூருக்கு தாதி போலிருந்து பணிபுரிந்தவள். இவளின் அர்ஜென்டைனா இல்லத்தில்தான் உடல் நலமற்றிருந்த தாகூர் தங்கி சிகிச்சை பெற்றிருக்கிறார்!

இவளைப்பற்றி தாகூர் 26 பாடல்களை எழுதி அந்த தொகுப்பை அவளுக்கே சமர்ப்பணம் செய்து இருக்கிறார். தாகூரைப் பற்றி விக்டோரியா தனது டைரியில் எழுதி வைத்திருந்த வரிகள் அவர்களிருவரிடையே இருந்த ஆழமான உறவை பிரதிபலிக்கின்றன.

"ஒரு மலரைத் தொடுவது போல் மென்மையுடன் என் 'நெஞ்சை' தொட்டார்" என்ற வரிகளில்தான் எத்துணை மயக்கம்!

காதல் வாழ்க!

காதம்பரி, லேடி ராணு, விக்டோரியா, ஒகாம்போ, இந்திரா தேவி-இந்த நால்வரை தவிர வேறு எவரையாவது தாகூர் குறிப்பிட்டிருக்கிறாரா?

எழுதியிருக்கிறார், அவரின் எண்பதாவது வயதில்!

அந்த சுயசரிதை சொல்வது என்ன?

அவரின் முதல் காதலியைப் பற்றி அவரே மனம் விட்டு எழுதியிருக்கிறார், இப்படி–

"அகமதாபாத்தில் நான் தங்கியிருந்த போது என்னுடைய இரண்டாவது மூத்த சகோதரன் சத்யேந்திரநாத் என்னை பாம்பாய்க்கு அனுப்ப முடிவு செய்தார். நான் பெண்களின் மத்தியில் இருந்தால் வீட்டு நினைவுகளை மறந்து நிம்மதியாக இருப்பேன் என்று நினைத்துவிட்டார்.

நான் பம்பாயில் தங்கிருந்த வீட்டில் என்னை வெகுவாக கவர்ந்த பெண் அனாதுர்குத். அவளின் ஆங்கிலம் என்னை மிகவும் கவர்ந்தது.

தனக்கு ஒரு புனைப்பெயர் வைக்கும்படி என்னை கேட்டபோது நளினி என்று பெயர் சொன்னேன். பிடித்துப்போனது! நான் மனக்கவலையுடன் காணப்பட்டபோதெல்லாம் எனக்கு ஆறுதல் கூறுவாள். பின்பக்கமாக வந்து என் கண்களை மூடி விளையாடுவதில் அவளுக்கு விருப்பம் அதிகம்!

ஏதோ ஒரு இனியது நிகழப்போவதாக எனக்குத் தெரிந்தது. அந்த இனிய நிகழ்வை நான் தக்க வைத்துக் கொள்வேனா என்ற அச்சமும் கூடவே!

ஒருநாள் திடீரென்று என்கையைப் பற்றிக் கொண்டு 'டக் ஆப்வார்' விளையாடுவதற்கு அழைத்தாள்.

இன்னொருநாள் என்னுடைய நாற்காலியில் அமர்ந்திருந்த அனா திடீரென்று "ரவி, ஒரு பெண் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருக்கும்போது அவளுடைய கையுறைகளை எவன் திருடுகிறானோ அவனுக்கு அவளை முத்தமிடவும் உரிமை உண்டு" என்று சொல்லிவிட்டு சிறிது நேரத்தில் கண்ணயர்ந்துவிட்டாள்.

அவளுடைய கையுறைகள் பக்கத்திலேயே இருந்தன.

அவள் விழித்துப்பார்த்தபோது அவைகள் களவாடப்படவில்லை. பத்திரமாக இருந்தன" என்று எழுதியிருக்கிறார் தாகூர்!

அவளை தன்னால் மறக்க முடியவில்லை என்று இன்னொரு பக்கத்தில் குறிப்பிட்டிருக்கும் தாகூர் அவளின் கையுறைகளை ஏன் திருடவில்லை?

முத்தமிட பயந்திருப்பாரோ?

**நன்றி: -தேவிமணி-**

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 52

## எஸ்.டி.எஸ். கண்ட பாரதி

எட்டயபுரப் பகுதியில் மழை வீழ்ச்சி அதிகமாக இருப்பதில்லை. வரண்ட பூமிதான் அது. பல மாதங்களாக மழையே பெய்யாத அந்த ஊரில் பாரதி மணி மண்டபத்திறப்பு விழா என்றதும் ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

நாளை மறுநாள் திறப்பு விழா என்றால், இன்று மழை கொட்டு கொட்டு என்று கொட்டி விட்டது!

எட்டயபுரம் பஸ் ஸ்டாண்டில் இறங்கிய திரு.முருகானந்தனும், நானும் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு, முகம் மறையும் இள இருட்டில் நண்பர் திரு.லெ.நாராயணனின் வீட்டினைத் தேடிக் கொண்டு அலையலானோம்.

ஊர்த் தெருக்களில் ஒன்று கூடத் தார் ரோட்டாக இருக்கவில்லை. எல்லாம் களிமண் ரோட்டுகள்தாம். சதக் புதக்கென்று செருப்புடன் கூடிய கால்கள் கணுக்கால் வரை புதைய ஆரம்பித்து விட்டன. எல்லா இடமுமே பார்ப்பதற்கு களியும், கிரவலும் பிசைவுண்டு அலங்கோலமாக இருந்தது.

இரண்டு மூன்று தெருக்களைச் சுற்றி விசாரித்த பின்னர் நண்பர் நாராயணன் வீட்டைக் கண்டு பிடித்தோம். சிறிய வீடு தான்.

நாராயணன் முருகானந்தனைக்கண்டதும் திகைத்துப் போனார். இரண்டு விருந்தினர் திடுதிப்பென்று போய் இறங்கினால் பாவம் அவர் என்ன செய்வார்? என்றாலும் பழைய நண்பரைக் கண்டதும் அவருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அங்கேயே நாம் தங்கலாம் என்று பெரிய மனதோடு சொல்லி விட்டார்.

எட்டயபுரத்தில் அப்போது ஹோட்டல் எதுவும் கிடையாது. இப்போது முளைத்திருக்கிறதோ தெரியவில்லை. விழாவுக்கு வரும் வெளியூர்க்காரர்களுக்கு எட்டயபுரம் மஹராசா பாடசாலையில் சாப்பாடும், தங்க வசதியும் செய்யப்படுவதாகவும் நாராயணன் கூறினார்.

நானும், முருகானந்தனும் பாடசாலையைப் பார்த்து வரலாம் என்று புறப்பட்டோம். "சாப்பாட்டுக்கு அவசியம் வந்து விடுங்கள்" என்று நாராயணன் வற்புறுத்தி அனுப்பி வைத்தார்.

பாடசாலைக்குச் சென்றால் அங்கு கூட்டம் தாங்க முடியவில்லை. என்றாலும் பத்திரிகைக்காரர்களுக்கு விசேஷ ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். எனக்கு 'தினகரன்' பிரஸ்கார்ட் இருந்தது. முருகானந்தனுக்கு அப்படி எதுவும் இருக்கவில்லை. நாங்கள் வெவ்வேறு இடத்தில் பிரிந்து தங்க விரும்பவில்லை. எனவே, இருவரும் நாராயணனின் வெளித் திண்ணையிலேயே படுத்து உறங்குவோம் என்று முடிவு செய்து திரும்ப நினைத்தபோது–

அங்கே, பேராசிரியர் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தியும், 'கல்கி' மனேஜர் திரு.டி.சதாசிவமும் ஒரு காரில் வந்து இறங்கினார்கள். உள்ளவர்கள் எல்லாம் அவர்களை மொய்த்துக் கொண்டார்கள். நானும், முருகானந்தனும் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றோம்.

கல்கியின் சாமர்த்தியத்தை அப்போது நான் கண்டேன். தம்மைச் சுற்றிக் கூடியவர்



களினூடாக அவர் என்னைக் கண்டு கொண்டார். என் பெயரைச் சொல்லி, "சிலோனிலிருந்து வந்திருக்கிறார்கள். அவர்களை நன்றாகக் கவனியுங்கள்" என்றார். விழாத் தொண்டர்கள் பயபக்தியோடு அவர் கட்டளையைக் கவனத்தில் கொண்டார்கள். அப்படிக் 'கல்கி' சொல்லி வைத்ததால் மறுநாள் விழாப் பந்தலிலும் சரி, சாப்பாட்டுப் பந்தியிலும் சரி பத்திரிகையாளர் கூட்டத்துள் எமக்கு விசேஷ கவனிப்பும், முன்வரிசை இடமும் கிடைக்கலாயின.

நாராயணன் வீட்டிற்குத் திரும்பி வந்தோம். பகா சூரத்துவமான பசி. நாராயணன் மனைவி மிக்க அன்போடு நல்ல கசப்பான உணவைத் தயாரித்து வைத்திருந்தார். ஆமாம், வேப்பெண்ணெய்க் கசப்பான உணவு தான்!

விஷயம் என்னவென்றால், நாங்கள் போய்ச் சேர்ந்த நேரத்தில் அவருக்குச் சமைப்பதற்குப் பதார்த்தம் எதுவும் கிடைக்கவில்லை. காய்கறிகள் வாங்க முடியவில்லை. எனவே, அவர் எங்களுக்குப் பிடிக்கக்கூடும் என்று பப்படப் பொரியல், ரசத்தோடு வற் றல் குழம்பும் வைத்திருந்தார்.

வற்றல் குழம்பு என்றால் சுண்டைக்காய் வற்றலையும், மணத்தக்காளி வற்றலையும் தேங்காய் எண்ணெய்யில் வறுத்தெடுத்து மோர் ஊற்றிக் கொதிக்க வைத்த குழம்பு ஆகும்.

அந்தக் காலத்தில், சாதாரண நாளில், இந்தக் கசப்பை நான் நா நுனியால் கூடத் தொட்டுப் பார்த்திருக்க மாட்டேன். ஆனால் அன்று இருந்த பிரயாணக் களைப்புக்கும், அகோரப் பசிக்கும் அந்தக் குழம்பும், சாதமும் எனக்கு மட்டுமல்ல, முருகானந்தனுக்கும்கூட அமிர்தமாகச் சுவைத்தன. அதற்குப் பின்னர், அப்படியான ஒரு சுவையான கசப்புக் குழம்பை நான் இன்று வரை எங்கும் சாப்பிட்டதில்லை.

இரவு வெகு நேரம் முருகானந்தனும், நாராயணனும் பேசிக் கொண்டிருந்தார்கள். இலங்கை விவகாரங்கள் எல்லாம் அலசப்பட்டன. பாதியாரைப்பற்றியும், பாரதி மணி மண்டபத் திறப்பு விழாவைப் பற்றியும், கல்கியின் எழுத்தாற்றல், செல்வாக்கு பற்றியும் பேசப்பட்டன.

பின்னர் முருகானந்தனும் நானும் திண்ணையில் ஜமுக்காளம் விரித்துப் படுத்துக் கொண்டோம். வெளிப்புறத்தில் தரையெல்லாம் ஈரமாக இருந்ததால் குளிர் தோலைத் துளைத்துக் கொண்டிருந்தது. இரவில் எதற்கும் தேவைப்பட்டால் என்று நாராயணன் முருகானந்தனுக்கு ஒரு மெழுகுவத்தியும், தீப்பெட்டியும் கொடுத்து வைத்தார்.

என் கையில் 'டோர்ச் லைட்' இருந்தது. அப்படியிருக்கவும் நாராயணன் ஏன் மெழுகுவத்தியும், தீப்பெட்டியும் முருகானந்தனுக்குக் கொடுத்தார் என்பது எனக்குப் புரியவே இல்லை.

நண்பர் திரு.அ.செ.முருகானந்தன் இந்தியாவில் காலடி வைத்த நேரத்திலிருந்து ஒருவித பரவச நிலையில்தான் காணப்பட்டார்.

பாரதியாரின் பாரத தேசம் பற்றிய தேச பக்திப் பாடல்களைப் படித்துப் படித்து இப்படி ஒரு நிலை அவருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

போதாக் குறைக்கு அவர் நண்பர் திரு.லெ. நாராயணனும் ஒரு கடும் தேச பக்தராக விளங்கினார். காந்தி மேல் அவருக்கு உயிர். கதர் மேல் அவருக்குப் பைத்தி



யம். அதனால் அவருக்கு ஓய்வு கிடைத்தால் ராட்டையும் கையும்தான்.

திரு.வி.கலியாணசுந்தர முதலியார், திரு.பொ.திரிகூடசுந்தரம்பிள்ளை ஆகியவர்களுடன் பழகியவர் நாராயணன். அவர்களுடைய தொண்டராகப் பணியாற்றியவர். சீர்திருத்தத் திருமணம் செய்து கொண்டவர்.

அந்தக் காலத்தில் சீர்திருத்தத் திருமணம் என்றால் ஐயர் இல்லாமல், மந்திரம் சொல்லாமல், தாலி கட்டாமல் செய்யப்படும் 'சூனா மானா' திருமணம் என்று பொருள் அல்ல. சீர்திருத்தத் திருமணம் என்றால், தன்னுடைய ஜாதியை விட்டுக் கீழாகவுள்ள ஜாதியைச் சேர்ந்த பெண்ணைக் கட்டிக் கொள்வது என்றுதான் பொருள். "ஜாதி மதங்களைப் பாரோம்" என்று பாடிய பாரதியிடம் நாராயணன் லயித்துப் போனமைக்கு இதுவும் ஒரு காரணம் ஆகும்.

உறங்கப் போவதற்கு முன்பு முருகானந்தனும் நாராயணனும் நீண்ட நேரம் பேசிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தார்கள் என்று ஏற்கனவே சொன்னேன் அல்லவா? அப்போது அவர்கள் பாரதியாரின்–

*செந்தமிழ் நாடென்னும்*
*போதினிலே–இன்ப*
*தேன்வந்து பாயுது*
*காதினிலே–எங்கள்*
*தந்தையர் நாடென்ற*
*பேச்சினிலே–ஒரு*
*சக்தி பிறக்குது*
*மூச்சினிலே.*

என்ற பாட்டையும் பாடியிருக்க வேண்டும். ஏனென்றால் நான் 'நித்திரா தேவியைத் தழுவுகின்ற' நேரத்தில் "சக்தி பிறக்குது மூச்சினிலே..." என்ற அடி என் மனதில் பதிவாகிக் கொண்டிருந்தது.

நாராயணன் கொடுத்த மெழுகுவர்த்தியையும் தீப்பெட்டியையும் வாங்கித் தலைமாட்டில் வைத்துக் கொண்டு முருகானந்தனும் என்னோடு படுத்துக் கொண்டார்.

இரண்டாவது ஜாமத்தில் எனக்கு ஒருவித அரட்சியும், அரை விழிப்பும் ஏற்பட்டன.

பக்கத்தில் 'புஸ், புஸ்' என்று சர்ப்பம் சீறுவது போல ஒருவித சப்தம் கேட்டது. புதுமையான ஒரு வாசனையும் மூக்கில் படர்ந்தது. பாம்பு கொட்டாவி விட்டால் இப்படி ஏதாவது மணம் வீசும் என்றும் சொல்வார்களே!

நான் திடுக்கிட்டுப் போனேன். உடம்பு சற்றுப் பதறவும் ஆரம்பித்து விட்டது. டோர்ச் லைட்டைத் தடவி எடுத்து வெளிச்சம் போட்டுப் பார்த்தேன். முருகானந்தன் எழும்பி உட்கார்ந்து கொண்டிருந்தார்!

அவர் மூக்கிலிருந்துதான் மூச்சு 'புஸ் புஸ்' என்று சற்று வீச்சாக வந்து கொண்டிருந்தது.

அப்பாடா! எனக்கு ஆறுதலாகவும் பெருமையாகவும் இருந்தது.

ஆஹா, பாரதி எப்பேர்ப்பட்ட மஹா கவிஞன் என்ற வியப்பும் ஏற்பட்டது.

"தந்தையர் நாடென்ற பேச்சினிலே, ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே.." என்றல்லவா பாரதியார் பாடியிருக்கிறார்?

செந்தமிழ் நாட்டில்-தந்தையர் நாட்டில்-வந்தது இறங்கி, எட்டயபுரத்தை அடைந்த முதல் நாளிலேயே கொத்தவரை வற்றலைப் போலக் காட்சியளித்த நண்பர் முருகானந்தனின் மூச்சினிலே ஒரு சக்தி பிறந்து விட்டதே என்ற புளகாங்கிதம் எனக்கு ஏற்பட்டது.

ஆனால் அந்தப் புளகாங்கிதம் நீடித்து நிலைக்கவில்லை.

"என்ன நண்பரே?" என்று கேட்டேன். முருகானந்தனால் பதில் சொல்ல முடியவில்லை. திக்குமுக்காடிக் கொண்டிருந்தார்.

தீப்பெட்டியைத் தட்டி மெழுகுவத்தியை ஏற்றினார். அது இரண்டாவது தடவை என்று நினைக்கிறேன். எதையோ அந்தச் சுடரில் கொளுத்தினார். புகை புகையாக வந்தது. ஆம், ஏற்கனவே என் மூக்கில் படிந்த அந்தப் 'பாம்புக் கொட்டாவி' வாசனைதான். அந்தப் புகை மண்டலத்தைத் தமது மூக்கால் உறுஞ்சி உறுஞ்சி விட்டுக் கொண்டார். 'புகையில் தெரிந்த முகமாக' அவர் முகம் காணப்பட்டது.

உண்மை நிலைமை என்ன என்பதை அறிந்து கொள்ள எனக்கு சற்று அவகாசம் வேண்டியிருந்தது.

நண்பர் முருகு அந்த அர்த்தராத்திரி வேளையில் 'ஆஸ்மா' என்ற அரக்கனோடு பரிதாபமாகப் போராடிக் கொண்டிருந்தார். அவருக்கு இவ்வளவு கொடிய ஆஸ்மா இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. ஆனால், இந்த உண்மை நண்பர் நாராயணனுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தது. அவர் மெழுகுவத்தியும், தீப்பெட்டியும் கொடுத்தது ஏன் என்பதும் அப்போதுதான் எனக்குப் புரியலாயிற்று.

***

இரவு தூக்கம் கலைந்து போயிருந்துங் கூட காலையில் எங்கள் இருவருக்கும் உற்சாகம் குறையவில்லை.

அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன:

ஒன்று, அன்றுதான், பேராசிரியர் 'கல்கி'யின் பெரு முயற்சியால் உருவான பாரதி மணி மண்டபத் திறப்பு விழா ஆரம்பமாவதாக இருந்தது.

இரண்டு, இந்த மாபெரும் விழாவில் கலந்து கொள்வதற்கென்று மாபெரும் இலங்கை மணித் திருநாட்டிலிருந்து இரண்டே இரண்டு 'பிரமுகர்கள்' தாம் பிரதிநிதிகளாகச் சென்றிருந்தார்கள் என்பது.

அந்த இரண்டு புண்ணியவான்களும் யார் என்று நினைக்கிறீர்கள் அருமை வாசகர்களே?

மூன்றாவது முறையாக உங்கள் ஊகம் சரியாகி விட்டது.

ஒன்று, பிரபல எழுத்தாளர் தரு.அ.செ.

**தொகுத்தளிப்பவர்**
**இரா.பத்மநாதன்**

முருகானந்தனும்-இரண்டு, சாக்ஷத் அடியேனும்தான்!

***

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. அதாவது 1947 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை.

நேற்றுவரை அசுமற்றம் இல்லாமல் கிடந்த எட்டயபுரம் இன்று கோலாகல அலங்காரங்களுடன் கலகலப்பு அடைய ஆரம்பித்து விட்டது.

தாவள்யமாக அமைந்த பாரதி மணி மண்டபம் கம்பீரமாகக் காட்சியளித்தது. அதன் முன்பாக சுமார் 5000 பேர் வரை அமர்ந்து பார்க்கக் கூடியதாக கீற்றுப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது.

**(இன்னும் வரும்)**

# வாரம் ஒரு வார்த்தை!

**தென்கச்சி – கோ. சுவாமிநாதன்**

## 15. முதுகு வலி

"சார் என் முதுகை வலிக்குது! என்ன செய்யலாம்?" ன்னு கேட்டார் ஒருத்தர்.

'முதுகுன்னு ஒண்ணு இருந்தா முதுகு வலின்னு ஒண்ணும் இருக்கத்தான் செய்யும். அதுக்குப் போயி கவலைப்பட்டுக்கிட்டிருக்காதீங்க... விட்டுத்தள்ளுங்க"ன்னார் இன்னொருத்தர்.

இவருக்கு என்ன? சும்மா சொல்லிப்புட்டுப் போறவருதானே!

வலிங்கறது அவங்க அவங்களுக்கு வந்தாத்தான் அதோட அவஸ்தை புரியும்!

இந்த முதுகு வலி இருக்கே..

இது சாதாரணமா நடுத்தர வயசு உள்ளவங்களுக்கு வருது...

அதே மாதிரி வயசானவங்களுக்கும் வருது!

இது ஏன் வருது? எப்படி வருது?

அப்படிங்கறதைப் பத்தி ஓர் ஆராய்ச்சி!

முதுகுவலிக்கும்–காலுக்கும் சம்பந்தம் உண்டுன்னு கண்டுபிடிச்சிருக்காங்க!

"மனிதனுக்கு எத்தனைக் கால்?"ன்னு ஒரு கேள்வி கேட்டா.

"கொஞ்சம்இருங்க... எண்ணிப் பார்த்துட்டு சொல்றேன்"னு யாரும் சொல்றதில்லே! மனிதனுக்கு ரெண்டு கால்ங்கறது எல்லாருக்கும் தெரியும்!

ஆனா இந்த ரெண்டு காலு நீளமும் வித்தியாசமா இருக்கும்ன்னு சொன்னா.. அதை நம்பறதுக்குக் கொஞ்சம் கஷ்டமாத்தான் இருக்கு!

ரொம்ப பேருக்கு ரெண்டுகாலு நீளமும் ஒரே அளவா இருக்கறதில்லே!

ரெண்டு காலோட உயரத்துக்கும் கொஞ்சம் வித்தியாசம் இருக்கு!

கொஞ்ச வித்தியாசம்னா எவ்வளவு?

அதிக பட்சமா ஒரு சென்டி மீட்டர் வரைக்கும் இந்த வித்தியாசம் இருக்கும்!

இப்படி நான் சொன்னதும் உடனே நீங்க 'அதை அளந்து பாத்தியா'ன்னு கேப்பீங்க!

நான் அளந்து பார்க்கலே; ஒத்துக்கறேன்!

அவுஸ்திரேலியாவுலே இருக்கிற சில விஞ்ஞானிகள் அளந்து பார்த்திருக்காங்க! அவங்க இது சம்பந்தமா சில ஆராய்ச்சியும் பண்ணிப் பார்த்திருக்காங்க! அதுக்கப்புறம் தான் இந்த உண்மையை சொல்லியிருக்காங்க!

அது சரி!

ரெண்டு காலுக்கும் உயரத்துலே கொஞ்சூண்டு வித்தியாசம் இருக்கிறதுனாலே என்ன கஷ்டம்?

அப்படி நினைக்கறது தப்பு!

ஏன்னா அது தான் முதுகு வலிக்கே காரணமாம்!

'முதுகு வலிக்கும்–கால் உயரத்துக்கும் முடிச்சுப் போடறியே'ங்கறீங்களா!

அதுக்குக் காரணம் இருக்கு!

கால்களுக்கு இடையே உள்ள உயர வித்தியாசம் முதுகுத் தண்டுலே ஒரு வளைவை உண்டாக்கி விடுது! அந்த 'வளைவு' தான் முதுகு வலியை உண்டாக்கி விடுது!

பொதுவா பாதி வயசுக்கு மேலே 'முதுகு வலி' வர்றவங்களுக்கு இதுதான் காரணமா இருக்கும்!

சரி! காரணம் தெரிஞ்சிப் போச்சி!

அப்படின்னா இந்த 'முதுகு வலி' வராமே இருக்கறதுக்கு ஏதாச்சும் வழி உண்டா?

உண்டு!

கால்லே இருக்கிற உயர வித்தியாசத்தை சரி பண்ணிட்டா முதுகு வலியும் சரியா போயிடும்!



எப்படி சரி பண்றது?

உயரமா இருக்கிற காலை ஒரு சென்டி மீட்டர் வெட்டி எடுத்துடலாமா?

அப்படி செஞ்சா முதுகு வலியை விட கால் வலியே பெரிசா போயிடும்! அது நடக்கிற காரியம் இல்லே!

சரி! வேறே வழி என்ன?

உயரம் குறைவா உள்ள கால்லே பொருத்தமா ஒரு கட்டையை செருப்போட சேர்த்துப் போட்டுக்கலாம்! அப்படி போட்டுக்கிட்டா உயரம் சரியா போயிடும்!

சின்ன வயசுலேயே இப்படி செஞ்சிக்கிட்டா பின்னாடி வயசான காலத்துலே முதுகுத்தண்டு வளையாது! முதுகுவலியும் வராது!

வயசானதுக்கு அப்புறம்கூட முதுகு வலி வந்தவங்க இதுமாதிரி கட்டையும் செருப்பும் போட்டு நடந்து பார்த்திருக்காங்க! என்ன ஆச்சு தெரியுமா?

முதுகுவலி கொஞ்சம் கொஞ்சமா குறைய ஆரம்பிச்சுட்டுது!

அதனாலே இதை படிக்கிறவங்க யாருக்காவது முதுகு வலி இருந்து... அதுக்கு இதுவரைக்கும் என்ன காரணம்ன்னு தெரியாம இருந்தா.. அதுக்கு நான் சொன்னதுதான் காரணமா இருக்கும்...

அப்படி இருந்தா அதுக்கு நீங்களே பரிகாரம் தேடிக்கலாம்!

கால் சரியா இருந்தா... முதுகும் சரியா இருக்கும். நடக்கறப்போ நிமிர்ந்து நடங்க!

ஒருத்தரு இருந்தாரு... அவர் அளவுக்கு அதிகமா எதுக்கும் ஆசைப்படறதே இல்லை! இருக்கறது போதும்ன்னு நினைக்கிறவர்!

ஆண்டவனே அவருகிட்டே நேரிலே வந்து "உங்களுக்கு கால் எவ்வளவு நீளம் இருக்கணும்ன்னு ஆசைப்படறீங்க"ன்னு கேட்டாராம்!

அதுக்கு இவர் "அதிகமா ஒண்ணும் வேணாங்க! என் உடம்புலேயிருந்து பூமியைப் போய் தொடுற அளவுக்கு இருந்தா போதும்!"ன்னாராம்.

**(வார்த்தைகள் தொடரும்)**

# நாலடி மனை

பாரதிராஜாவின் படங்களில் வருவது போல் அழகிய கிராமிய வாசனை கொண்டது அந்தக்கிராமம். அச்சுவேலிச் சந்தையை அண்மித்து இருப்பதால் அந்தக் கிராமம் தூங்காத ஊர் என்ற பெயரையும் பெற்றது. வீடுகள், வளவுகள், வாழைத் தோட்டங்கள், மா, பலா என்று மண்டிக்கிடந்து அலாதியான தோற்றத்தையும் அது காட்டிக்கொண்டிருந்தது. வாழைத் தோட்டங்கள் இருமருங்கும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்க, அதை ஊடறுத்துச் செல்லும் நெடுஞ்சாலை. அது இயற்கை அன்னைக்கு இடுப்பில் ஒரு ஒட்டியாணம் கட்டியது போலிருந்தது. காலையில் தங்கள் தோட்டத்தில் வளர்த்த மாங்காய், தேங்காய், வெற்றிலை, புகையிலை இவைகளைச் சைக்கிள்களில் கட்டிக்கொண்டு சந்தைக்குப் போகும் மக்கள். ஆங்காங்கே கோயில்களில் நேரகாலப் பூசைகளின் போது ஒலிக்கும் காண்டா மணிகளின் ஓசை அலைகள். குளங்களில் இருந்து ஜிவ்வென்று மேலே எழும்பிப் பறக்கும் பலவகை இனங்களைக் கொண்ட திசை மாறாத புள்ளினங்கள். இப்படி மேலும் அக்கிராமம் மெருகேறியது. பருத்தித்துறை நோக்கிச் செல்லும் அப்பிரதான நெடுஞ்சாலையில் வேலுப்பிள்ளையரின் அந்த மாடிவீடு கம்பீரமாக நின்றது. ரோட்டைப் பார்த்தபடி பெரிய கேட்வாசல். அதன் இருதூண்களின் மேலும் தும்பிக்கைகளைத் தூக்கியபடி அழகான இரண்டு யானைச் சிற்பங்கள். வேலுப்பிள்ளையரின் குடும்பம் சந்ததி சந்ததியாக வாழ்ந்தவீடு அது. எல்லாம் இப்போ அவருக்குச் சொந்தம். அன்பான மனைவி, பிள்ளைகள். தொழில் நிமித்தம் ஒரு லொறி வாங்கி கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் ஒரு சாரதியையும் நியமித்து 'பவானி ட்ரான்ஸ்போட்' என்ற பெயரில் தொழில் நடாத்தி வந்தார். அதில் சற்று லாபம் ஏற்படவே, இன்னொரு லொறியும் வாங்கி அதே பெயரில் தொழில் நடாத்தி மேலேறிக் கொண்டிருந்தார். ஆனால் அவர் பண விஷயத்திலும் தன் காணிவிஷயத்திலும் கடும் லோபத்தன்மையைக் கொண்டிருந்தார். தன் வளவின் எல்லை வேலிகளை அவர் வருடம் தோறும் பிரித்து அடைக்கும்போது 'அது முடியும்வரை மனுஷன் நகரவே மாட்டார்.' எங்கே அடுத்தவீட்டு வினாசியாரின் விதவை மனைவி தங்கம்மா கொஞ்சம் வேலையாட்களுக்கு பேச்சு கொடுத்து தந்திரமாக ஒரு அடி நிலம்கூட எடுப்பாளோ? என்ற சந்தேகப் பேய்தான். ஒரு முறை அவரின் தங்கையின் இரண்டு இளம் யுவதிகளும் காலையில் கொன்வென்டில் படித்துவிட்டு நண்பகல் அந்த நெடுஞ்சாலையின் ஓரமாய் வீடு நோக்கி வந்து கொண்டிருக்கும் போது, வேலுப்



பருத்தித்துறை ச.இரா.பாலகிருஷ்ண ஐயர்

பிள்ளையரின் லொறி வருவதைக் கண்டனர். ஒரு யுவதி மற்றவளிடம் "வதனி அதோ மாமாவின் லொறி வருகுது. கைகாட்டி நிற்கச் சொல்லி அதில் போவம்" என்றாள். அதற்கு மற்றவளும் "ஓமோம் அதிலை போவம்" என்று இணங்கினாள். அன்று டிரைவர் லீவு என்றதால் வேலுப்பிள்ளையரே அதைச் செலுத்தி வந்தார். இரு யுவதிகளும் கையைக் காட்டவும் அது நிற்காமல் அவர்களைக் கடந்து போனது. அது புதிய லொறி. பென்ஸ் மொடலைச் சார்ந்தது. பல லட்சம் ரூபாய் கொடுத்து அவர் வாங்கியதால், அதில் யாரையும் ஏற்ற அவர் அனுமதிப்பதில்லை. அது உறவினரென்றாலும் சரிதான், அது சீட்பழுதாகும், கிழிந்துவிடும் என்பதே அவர் கொள்கை. நாட்கள் பறந்தன. ஒருநாள் அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அது மின்சார வசதியற்ற கிராமங்களுக்கும் வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கும் திட்டம். அந்த திட்டத்தின் கீழ் பக்கத்து விட்டு வினாசியாரின் வீடும் உள்ளடங்கியதாக இருந்தது. இதன்படி அவருக்கு அடுத்த வீட்டுக்கு மின்சாரம் கொடுப்பதற்கு அவரின் வீட்டின் முன்பக்கமுள்ள கேட்வாசலின் உட்புறம் ஒரு பாரிய மின்சாரக்கம்பம் நாட்ட வேண்டும் என்றும் நெடுஞ்சாலை ஓரத்தில் நாட்டுவதால் வாகன விபத்துக்கள் ஏற்படலாம் என்றும் அதற்கு ஒரு நாலடி அகல நீளமுள்ள சிறு நிலப்பரப்புத் தரும்படியும் அரசினால் கேட்கப்பட்டுள்ளதை அறிந்தார். கடிதம் கண்டதும் அவருக்கு பிறெஷர் ஏறிவிட்டது. 'இதென்ன மொட்டத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுகிறான்கள். என் காணிக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? இதை விடக் கூடாது' என்று 'அவ்விதம் ஒரு அங்குலம் சரி தரமுடியாது' என்று எழுதிவிட்டார். ஆனால் அத்தோடு அது நிற்கவில்லை. அவரது கடிதம் மீண்டும் அப்பகுதி கிராம சேவகரிடம் அனுப்பப்பட்டது. அக்கடிதம் கண்ட அந்த கிராம சேவையாளர் திகைத்துப் போய்விட்டார். அது சம்பந்தமான அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி அதில் கேட்கப்பட்டுள்ளது. அவரால் ஒன்றும் செய்ய இயலவில்லை. காரணம் வேலுப்பிள்ளையர் அவருக்கு வேண்டப்பட்டவர் மிகவும். ஒரு வழியில் சொந்தமும்கூட. எப்படியோ ஓர் அறிக்கை கொடுத்தேயாக வேண்டும். ஆகையால் கேட்கப்பட்ட நில அளவு வேலுப்பிள்ளையரின் சொந்த நிலம் என்றும் அபிவிருத்தித் திட்டத்துக்கு அது ஏற்புடையதல்ல என்றும் தனது அறிக்கையை அனுப்பினார். வேலுப்பிள்ளையருக்கு சந்தோஷம். 'அப்பாடா' என்று நிம்மதி அடைந்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தது நடக்கவில்லை. காணி சுவீகரிப்புச் சட்டத்தின்கீழ் அத்திட்டத்திற்குரிய நிலத்தை எடுக்கும்படி அந்த கிராம சேவையாளருக்கு மீண்டும் கடிதம் வந்ததும் இருவரும் திகைத்துப் போனார்கள். அதன்படி அதற்குரிய நிலம் எடுக்கப்பட்டு, மின்கம்பம் நாட்டப்பட்டு மின்விநியோகமும் வினாசியாரின் வீட்டுக்கும் மற்றும் பகுதிகளுக்கும் அதிலிருந்து 'அளிக்கப்பட்டது.

இதன்பின் திடீரென யுத்தம் வெடித்தது. மக்கள் ஊரை விட்டு புலம் பெயர்ந்தார்கள். குண்டு வீச்சில் பல வீடுகள் கட்டடங்கள் சின்னாபின்னமாகின. தொடர்ந்து கொண்டிருந்த அழிவுகளாலும் உணவுக் கஷ்டத்தாலும் வேலுப்பிள்ளையர் தன் குடும்பத்துடன் உயிர் தப்பினால் போதும் என்ற அளவுக்கு வந்துவிட்டார். இப்போ அவர் எங்கேயோ வசிக்கிறார். அந்த வீடு அந்தக் காணி, அதன் எல்லைகள் எதுவும்பற்றி அவருக்கு அக்கறை இல்லை. இப்போது அவருள் இருந்த மண்ணாசை மண்ணாகிவிட்டது. "எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும்" என்ற பாடல் அவரின் செவிகளில் வீழ்ந்து கொண்டிருந்தது.

# நினைவெல்லாம் நீயே!

சுவரில் கொழுவியிருந்த ஃபோட்டோவை விறைத்துப் பார்த்தபடியே கதிரையில் அமர்ந்து கொண்டிருந்தாள் விஜிதா. அவளும் கணேசனும் திருமணம் முடித்த கையோடு எடுத்துக்கொண்ட புகைப்படம் தான் அது.

அவளுக்கு இப்போதைய கவலையெல்லாம் வெளிநாட்டிற்கு வேலை செய்வதற்காகப் போன கணவனிடமிருந்து கடந்த ஒரு வருடமாக எந்தத் தொடர்பும் அற்றுப் போய் விட்டதுதான். எந்நேரமும் கணவனை நினைத்தபடியே பிரம்மை பிடித்தவள் போல் இருப்பது அவளுக்கு வழக்கமாகிவிட்டது. ஒழுங்காகத் தூங்குவதில்லை. மாமனாரின் வற்புறுத்தலுக்காக ஏதோ



அ.கோகுலதீபன்
கல்முனை

நான்கு வாய்ச் சோறு சாப்பிடுவாள். என்ன செய்வதென்று தெரியாமல் தனக்குள்ளே அழுது கொண்டிருப்பாள். "புள்ள சாப்பிட எழும்பு... பத்து மணியாகுது." மாமனார் விஜிதாவைக் கூப்பிட்டார். தன் மகனைப் பற்றிய கவலை அவரையும் படர்ந்திருந்தது. ஆனாலும் மருமகளைத் தேற்றுவதற்காக தன் கவலையெல்லாவற்றையும் மனசுக்குள் அடக்கிக் கொண்டு விஜிதாவுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருப்பார்.

"மாமா நீங்க சாப்பிட்டியலோ?.." என்றபடி கதிரையிலிருந்து எழும்பினாள். "ஓம் புள்ள... இடியப்பத்தக் கோப்பையில போட்டு மூடி வச்சிருக்கன். எடுத்துச் சாப்பிடு!" என்றபடி வெற்றிலைத் தட்டை எடுத்துக் கொண்டு முற்றத்தில் நின்ற மாமரத்தின் கீழ் குந்தினார். ஒரு சில வினாடிகள் கழிந்தன. "என்ன தாத்தா தூங்கிட்டியளோ?" வெற்றிலையை மென்று கொண்டு மாமரத்தில் சாய்ந்தபடியே மெதுவாகக் கண்ணயர்ந்து போனவரை பக்கத்து வீட்டுக் கோபி எழுப்பினான்.

"என்னடா கோபி இன்னிக்குப் பள்ளிக்கூடம் போகலயா?.. அட கையில பெரிய சொக்கிலட்டு இருக்கே.. யார்ரா தந்தாங்க?" அவனை மடியில் இருத்திக் கொண்டு அன்பாகக் கேட்டார். "இதுவா?.. இந்தச் சொக்காவை மேகன் மாமா தந்தவர். அவரு வெளிநாட்டுல இருந்து வந்திருக்கார் தாத்தா... இத வீட்ட கொண்டு போய் சாப்பிடப் போறன்." மழலை வார்த்தைகளால் பேசிவிட்டு தன்னுடைய வீட்டுப்பக்கம் ஓடினான்.

குசினிக்குள் சாப்பிட்டுக் கொண்டிருந்த விஜிதா மேகன் வெளிநாட்டில் இருந்து வந்த செய்தியைக் கேட்டதும், சாப்பிட்ட பாதியிலேயே கைகழுவிக் கொண்டு எழுந்தாள். "மாமா நான் ஒருக்கால் மேகனிட்ட விசாரிச்சிட்டு வர்றன்" என்றபடி அவசர அவசரமாகப் புறப்பட்டாள்.

மேகனும் கனடாதான் போயிருந்தான். ஆனாலும் இருவரும் வெவ்வேறு இடத்தில் தான் வேலை பார்த்தவர்கள். விஜிதா மேகனின் வீட்டை அடைந்ததும், மேகனின் மனைவி எதிர்ப்பட்டாள். "வா விஜி... என்னடி திடீரெண்டு...?" என்றபடி அவளை அழைத்துக் கொண்டு போய் சோபாவில் இருத்தினாள். அப்பொழுது தலையைத் துவட்டிக் கொண்டு வந்த மேகன் விஜிதாவைப் பார்த்ததும் சிறிது தயக்கமானான். அவள் வந்த காரணத்தை ஊகித்துக் கொண்டதுதான் அவன் தயக்கத்துக்குக் காரணம்.

"மேகன் இவரப் பத்தி ஏதாச்சும் கேள்விப்பட்டீங்களா? ஒரு வருசமாச்சு, ஒரு கடிதம் கூடப் போடல்ல. அதுதான் கேப்பமெண்டு வந்தனான்." அவன் பேசுவதற்கிடையில் விஜிதா முந்திக் கொண்டாள்.

"அது வந்து... இந்தக் ஹாஸ்பிட்டல்ல சுகமில்லெண்டு இருந்தவன். அதாலதான் கடிதம் போடச் சுணங்கியிருப்பான் எண்டு நினைக்கிறன்!" என்றான். அவன் பேச்சில் வெளிப்பட்ட தடுமாற்றத்தை விஜிதா நன்கு கவனித்துக் கொண்டாள்.

"மேகன் பிளீஸ்.. உண்மையைச் சொல்லுங்க? என்ன வருத்தம் கணேசுக்கு?... அவர் இப்ப எப்படியிருக்கார்? சொல்லுங்க மேகன் சொல்லுங்க..." அவளது பேச்சின் சுருதி உயர்ந்தது. அணை உடைத்த வெள்ளம் போல் கண்களிலிருந்து நீர்திரண்டது. மேகனால் இனிமேலும் உண்மையைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. தன்னை ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு சொன்னான். "விஜிதா என்ன மன்னிச்சிடுங்க... ஒரு வருசத்துக்கு முன்னாடி நடந்த விபத்துல கணேசின் தலையில பலமா அடிபட்டிருச்சி... அதனால நரம்பொண்டு வீக்காயிருக்கு.. அவனை இப்போ மெண்டல் ஹாஸ்பிட்டல்ல சேர்த்திருக்கிறாங்க..." அவன் சொல்லி முடித்தபோது சோபாவிலிருந்த விஜிதா மயக்கமடைந்திருந்தாள்.

# நிவேதா!

வீட்டில் அமைதி நிலவியது. ஆனால் சரளாவின் மனசில் மட்டும் புயல் வீசிக் கொண்டிருந்தது.

காதலிப்பது குற்றமா? இல்லை காதலே பாவப் பொருளா? எதற்காக அப்பா, அம்மா இப்படி எதிர்க்கிறார்கள். என்னமாய் எகிறிக் குதித்து ஆர்ப்பாட்டம் பண்ணிவிட்டார்கள். சமூக அந்தஸ்தில் வேறுபட்ட இருவர்க்கத்தினரிடையே ஒன்றுபட்ட மனவுணர்வுகள் சங்கமிப்பது சாத்தியமாகாதென்றா



ஜெ-சூரியன்

நினைக்கிறார்கள். அவர்களிடையே சந்தோஷப் பூக்கள் மலராதென்று கணித்து விட்டார்களா? எல்லாம் வக்கிரம் படைத்த மனங்களின் அழுத்தமே தவிர, வேறொன்றுமில்லை.

அவர்களை விட்டுவிடுவோம். இந்த நிவேதா என்னமாய் வார்த்தையாடிவிட்டாள். அப்பாவிடம் காட்டிக்கொடுத்ததே அவள் தான். 'காலம் வரும்போது தெரியப்படுத்தி, அப்பாவின் சம்மதத்தைப் பெறுவோம். இல்லை. வேறுவழியில் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டியிருந்தால் அதையும் பொறுத்திருந்து நிதானமாக செய்து கொள்ளலாம்' என நினைத்திருக்க நிவேதா வத்தி வச்சுட்டாள்.

"படிக்கிற நேரத்திலை சரளாவுக்கு லவ்வு என்ன வேண்டிக்கிடக்குது. மானம், மரியாதையெல்லாம் என்னாகிறதுன்னு கொஞ்சம்கூட யோசிக்கலை. அப்பா இப்படியே விட்டா உங்க கௌரவம் பாதிக்கப்படும். கண்டிச்சு வையுங்க. முளையிலே கிள்ளிவிட்டால்தானுண்டு."

'ச்சே' என்றிருந்தது.

அவளிலும் சின்னவளான தங்கையின் அறிவாழமான வார்த்தைகள் அப்பாவை பெருமையுடன் சுட்டிக்காட்ட வைத்தது. ஆத்திரமாக கத்தினார். சரளாவுக்கு அவமானமாக இருந்தது.

எதுவும் பிடிக்கவில்லை. எவருடனும் பேச மனம் வரவில்லை. அறைக்குள்ளே முடங்கிக்கிடந்தாள்.

டெலிஃபோன் கிணு, கிணுத்தது பலதடவை. எவரும் எடுக்காததால் தானே ஓய்ந்துபோனது. சரளா சோர்வுடன் புரண்டு படுத்தாள். 'ஒரு வேளை எல்லோரும் வெளியே போய்விட்டார்களா?'

மறுபடி ஃபோன் அடித்தது.

வெளியே வந்தாள் சரளா. நிவேதா ஃபோனை எடுப்பது தெரிந்ததும் திரும்பினாள். நிவேதாவின் வெட்கமான சிணுங்கல் தடுத்து நிறுத்தியது.

"அக்கா உள்ளே தூங்கறா. கொஞ்சம் பொறுங்கோ!"

சரளா சட்டென்று பாய்ந்து கதவோடு ஒண்டினாள்.

யாருமில்லையென்பதை உறுதி செய்து கொண்ட நிவேதா மறுபடி பேசவாரம்பித்தாள்.

"நல்லவேளை கேசவன் அப்பா வீட்டிலையில்லை. அம்மாவும் கோயிலுக்கு போய் விட்டா. அகப்பட்டால் அம்போதான். எடுக்க வேணாமென்று சொன்னால் கேட்கமாட்டேன் என்கிறீங்கள்."

"ஏன்?"

"இப்பதான் ஒரு சூறாவளியடித்து ஓய்ந்திருக்கிறது."

"என்ன சொல்கிறாய்...?"

"அதான். அக்கா சரளாவின் விஷயம் சொன்னேனே. ஞாபகமில்லை.? நான்தான் மோட்டுத்தனமாக காட்டிக் கொடுத்தது. பாவம் சரளாவின் மனசு என்ன பாடு பட்டிருக்குமென்று இப்பதான் எனக்குப் புரியுது."

"ஓ. தொட்டால்தான் சூடு தெரியுமெனும் ஜாதி போல..?"

சிரித்தான் கேசவன் இடக்காக.

"சிரிக்காதீங்க. நான் ஸீரியசாகத்தான் சொல்கிறேன்..."

மௌனமானாள் நிவேதா. மறுமுனையில் "ஹலோ. ஹலோ" கேட்டது. மெதுவாக நடந்து டெலிஃபோன் பக்கமிருந்த சாப்பாட்டு மேஜையருகே வந்தாள் சரளா. கிளாசில் தண்ணீர் ஊற்றும் ஓசை தெளிவாகக் கேட்டது.

"என்ன. என்ன நிவேதா யாராவது வந்துவிட்டார்களா? இப்படி நிமிஷத்துக்கு திரில் தருவதுதான் காதல். அதில்தான் இன்ரஸ்ட் பிரமாதமாயிருக்கும்."

நிவேதா திடுக்குற்றுப் போனவளாக, "ஆ.. ஆ... சொல்லுடி. வேறென்ன. நாளைக்கு ஸ்கூல்ல பாப்பம். என் நோட்புக்கை கொண்டுவாடி மறக்காதே" என்றவண்ணம். டக்கென்று ஃபோனை வைத்தாள். முகத்திலரும்பிய வியர்வையை ஒற்றினாள். அக்காவைப் பார்த்துச் சிரித்தாள். அசடுவழிந்தது. புரிந்து கொண்டு விட்டாளோ. பழிதீர்த்துக் கொள்வாளோ. சரளாவின் பார்வையின் பொருளில் ஒன்றும் விளங்கவில்லை நிவேதாவுக்கு. கிளாசை நீட்டினாள் சரளா.

"குடி பதட்டம் தீரும்!"

"அ..க்.கா..!?"

"பயப்படாதே நிவேதா. காதலின் அருமை எனக்கு நன்கு புரியும். நீ சின்னவ நான் பெரியவ. ஆனா ஒண்ணு தலைவலியும் காய்ச்சலும் தனக்குத் தனக்கு வந்தால்தான் தெரியும்." குரல் கரைய கூறிவிட்டுப் போகும் சரளாவை நன்றியுடன் பார்த்தாள் நிவேதா. 'என்னாலுடைந்த உன் காதலை நானே சரிசெய்து தருவேன்' சரளா என தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

# உன் வாயமுதம் உண்பேன்....!

# இலக்கிய நயம்

தூரத்தே அவள் வருவது தெரிந்தது.

இருபுறமும் வளர்ந்து தலை சாய்ந்திருந்த நெற்கதிர்களிடையே மானொன்று துள்ளி வருவது போல வந்துகொண்டிருந்தாள்.

இரண்டாகப் பின்னி மடித்துக் கட்டியிருந்த போதும் கூந்தல் இடுப்புவரை நீண்டிருந்தது; இருமருங்கும் ஆடியது.

குதிகால் வரை நீண்டிருந்த பாவாடையும் மேற்சட்டையும் அணிந்திருந்தாள். இரு கைகளிலும் வண்ண வண்ண வளையல்கள். ஒரு கையில் நீண்ட மெல்லிய மூங்கில் தடியை வைத்திருந்து, பயிர்களுக்கு அடித்து விளையாடியபடியே வந்தாள்.

கையில் இருந்ததை விடச் சற்றுப் பெரிய மூங்கில்களாய் தோள்கள். சங்காக நீண்டிருந்த கழுத்தில் ஒற்றைச் சங்கிலி. அதன் ஆட்டம் வெயிலில் பளபளப்பது தூரத்திலேயே தெரிந்தது.

மதிய சூரியன் உச்சியில் இருந்தான். உச்சபட்ச வெப்பத்துடனிருந்தான். அவன் அனுப்பும் கிரணங்களுக்குப் பயந்து நிழல் கூட கால்களுக்குள் பதுங்கிக் காணாமல் போயிருந்தது.

அருகில் மரங்கள் கூட இல்லாத அந்த வயல் வெளியில் மொத்த வெயிலையும் தன் தலையில் சுமந்தபடி, அவள் வரவைப் பார்த்தபடி அவன் நின்றிருந்தான்.

நெருங்கி வந்ததும் அவள் தன் துள்ளலை நிறுத்தினாள். எதிரே அவன் தன்னையே பார்த்தபடி நிற்பதைக் கண்டாள். சட்டென்று



அவள் ஆட்டமும் பாய்ச்சலும் அடங்கியது. உள்ளே சற்று அச்சம் எழுந்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், கையிலிருந்த மூங்கில் தடியால் ஒய்யாரமாகப் பயிர்களை வருடி விட்டுக் கொண்டே அசைந்து வந்தாள்.

அவன் தன் நெஞ்சுக்குக் குறுக்காகக் கைகளைக் கட்டியபடி ஒரு காவல் வீரனைப் போல் அவள் வருவதை வைத்தகண் வாங்காமல் பார்த்தபடியே நின்றான்.

அவனை நெருங்க நெருங்க அவள் நடை தள்ளாடியது. தயக்கத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மேலுக்கு இயல்பாக வந்துகொண்டிருப்பதைப் போலக் காட்டிக் கொண்டாள்.

மிகக் கிட்டத்தில் வந்ததும் அவன் விலகி வழிவிடுவான் என்று நம்பியிருந்தவள், அவன் அசையாமல் இவளையே தன் குறுகுறுத்த விழிகளால் பார்த்தபடி நிற்பதைக் கண்டதும் தன் நடையை நிறுத்தினாள்.

அவன் பார்வையும், புன்முறுவலும் அவளைச் சங்கடப்படுத்தியது. தலையை நிமிர்த்தி அவனை ஒருகணமும் சடாரென்று வெட்டித் திருப்பி வயல் வெளியையும் பார்த்தபடி ஒரு முக்கலுக்குப் பின், "வழியை விடு" என்று சொன்னாள்.

அவன் முகத்தில் சிரிப்பு மாறாமல் அவளிலிருந்து கண்களை எடுக்காமல் அப்படியே நின்றிருந்தான்.

"உன்னோடு எந்தப் பேச்சும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று என் பெற்றோர் சொல்லிவிட்டனர். எனவே நான் போக வேண்டும் வழியை விடு" என்றாள், குழந்தைத் தனமான கோபத்தோடு.

"அடடா! உன் கண்களுக்குள் சிக்கிக் கொண்டுவிட்ட என் கண்களை விடுவித்துவிடு, நான் போக..." என்றான்.

அவள் சட்டெனத் திரும்பி அவன் கண்களைப் பார்த்தாள். அவை சிரிப்பதைக் கண்டாள். சடாரென்று வேறுபுறம் திரும்பினாள்.

"வண்டுகள் சுற்றிப் பறக்கும் தோளுடையவர்களைக் கண்டால் அவர்களைப் போகவிடக் கூடாதென்றும், கண்களால் தாக்குப்பட்ட காயங்களுக்கு அந்தக் கண்களிடமிருந்தே மருந்தும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் என் உறவினர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் எப்படிப் போக முடியும்? நீ தானே மருந்து தரவேண்டும்..." என்றான்.

"ஹூம்" என்று ஒருதடவை முக்கிவிட்டு, "அப்படியா சொன்னார்கள் உன் உறவினர்கள்?" என்றாள் குரலில் மட்டும் கோபம் தொனிக்க.

தருவது

முழடில்யன்

"ஆமாம்!" என்றான் இவன் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு.

"வழியில் எங்காவது பெண்களைக் கண்டால், அவர்களது பூப்போன்ற கண்களையும், தோள்களையும் புகழ்ந்து பாடச் சொன்னார்களோ?" என்றாள் நக்கலாக.

"யாருமே வெளியே வர அச்சப்படுகின்ற இந்த உச்சி வெயில் வேளையில், தனியாக நானிருக்குமிடம் வந்து, கண்களால் எனக்கிந்த நோயைச் செய்ததை அறிந்து அவர்கள் அப்படித்தானே சொல்வார்கள்..."

"ஹூம்... அப்படியா? எனக்கு உன் மாயமெல்லாம் விளங்கும். என்னைப் பயமுறுத்திப் பணியவைக்க முடியாது. விலகி நில். நான் போக வேண்டும்."

"பயமுறுத்துகிறேனா? நானெங்கே செய்தேன்? அதை நீயல்லவா உன் கண்களால் செய்து கொண்டிருக்கிறாய்."

"உன்னோடு பேசக் கூடாதென்றல்லவா என் பெற்றோர் கூறியிருப்பதாகச் சொன்னேன். ஏன் வீணாக என்னை வம்புக்கிழுக்கிறாய்?" என்றாள் அழுதுவிடுபவள் போல.

"சரி, என் நோய் தீர்க்க மருந்தைத் தந்துவிட்டுப் போ. நான் தடுக்கவில்லை."

"என்னை உனக்கு வேண்டுமானால் வீட்டில் வந்து பெற்றோரைக் கேள். இப்போது வழியை விடு. நான் போக வேண்டும்."

"எப்படி விட முடியும்? விடமாட்டேன். நீ என்ன சொன்னாய்? என்னோடு பேசக் கூடாது என்றுதானே உன் பெற்றோர் சொல்லியிருக்கிறார்கள். என்னைத் தழுவக் கூடாது என்று சொல்லவில்லையே. எனவே, வா வந்து மெல்ல என்னை அணைத்துக் கொள், அப்படியே உன் வாய் அமுதத்தை உண்பேன் நான்." என்றான்.

விடேன் யான் என் நீ
குறித்தது இருங்கூந்தல்
நின்னை என் முன்நின்று
சொல்லல் ஒம்பு என்றமை
அன்றி அவனை நீ
புல்லல் ஒம்பு என்றது
உடையரோ மெல்ல
முயங்கு நின் முள்ளெயிற
உண்கும் எவன்கோலோ....

(கலி: 12 : 16-20)

# ஸ்போர்ட்ஸ்

## இலங்கைக்கு வருகிறது இந்தியா

இந்திய கிரிக்கெட் அணி 50 நாட்கள் கொண்ட குறுகிய கால சுற்றுப்பயணத்தை இலங்கையில் மேற்கொள்ளவுள்ளது. இலங்கையுடன் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

டெஸ்ட் தொடருக்கு முன்னதாக இலங்கையுடன் ஒருநாள் போட்டித் தொடரிலும் விளையாடவுள்ளது இந்தியா. இந்த ஒருநாள் தொடரில் இலங்கை-இந்திய அணிகளுடன் நியூஸிலாந்தும் கலந்து கொள்கிறது.

வருகின்ற ஜூலை மாதம் 15ம் திகதி இலங்கைக்கு வரும் இந்தியா, நியூஸிலாந்து அணிகள் விளையாடும் போட்டிகள் பற்றிய விவரங்கள் வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| ஜூலை 18 | இலங்கை | எதிர் | நியூஸிலாந்து | -பிரேமதாச மைதானம் |
| ஜூலை 20 | இந்தியா | எதிர் | நியூஸிலாந்து | -பிரேமதாச மைதானம் |
| ஜூலை 22 | இலங்கை | எதிர் | இந்தியா | -பிரேமதாச மைதானம் |
| ஜூலை 25 | இலங்கை | எதிர் | நியூஸிலாந்து | -தம்புள்ள மைதானம் |
| ஜூலை 26 | இலங்கை | எதிர் | இந்தியா | -தம்புள்ள மைதானம் |
| ஜூலை 27 | இந்தியா | எதிர் | நியூஸிலாந்து | -தம்புள்ள மைதானம் |
| ஜூலை 30 | இலங்கை | எதிர் | நியூஸிலாந்து | -எஸ்.எஸ்.சி. மைதானம் |
| ஜூலை 31 | இந்தியா | எதிர் | நியூஸிலாந்து | -எஸ்.எஸ்.சி. மைதானம் |
| ஒகஸ்ட் 02 | இலங்கை | எதிர் | இந்தியா | -எஸ்.எஸ்.சி. மைதானம் |
| ஒகஸ்ட் 04 | இறுதிப் போட்டி | | | -பிரேமதாச மைதானம் |

இலங்கை-இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஒகஸ்ட் 14-18 வரை காலியிலும் 2வது டெஸ்ட் ஒகஸ்ட் 22-26 வரை கண்டியிலும் 3வது டெஸ்ட் ஒகஸ்ட் 29-செப்டெம்பர் 02 வரை கொழும்பிலும் நடைபெறும்.

## ஆரம்பப் பந்து வீச்சுக்கு அக்ரம்

வக்கார் யூனிஸ் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இங்கிலாந்திற்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளது. அங்கு இங்கிலாந்து அணியுடன் 2 டெஸ்ட் போட்டிகளிலும், இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுடன் இணைந்து முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரிலும் பாகிஸ்தான் அணி விளையாடுகிறது.

கடைசியாக மூன்று தடவைகள் இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, மூன்று தடவை டெஸ்ட் தொடரில் வெற்றி வாகை சூடியிருந்தது.

எனினும் கடந்த வாரம் சொந்த மண்ணில் நடந்த இங்கிலாந்திற்கெதிரான டெஸ்ட் தொடரில் தோல்வி கண்டது.

இந்தச் சுற்றுப்பயணத்தில் பாகிஸ்தான் அணி வீரர்கள் பட்டியலில் பாகிஸ்தானின் அனுபவம் மிக்க ஆட்டக்காரரான வாஸிம் அக்ரம் 17வது வீரராக இடம் பெற்றிருந்தார். அக்ரமை இப்படிக் கடைசி இடத்தில் தள்ளி வைத்தமைக்கு செய்தி ஊடகங்கள் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்திருந்தன. இதையடுத்து, தன்னுடன்



இணைந்து ஆரம்பப்பந்துவீச்சை வீச அக்ரமை அழைத்துள்ளார் அணித்தலைவர் வக்கார் யூனிஸ்.

சில வருடங்களுக்கு முன் தனது அணியைச் சேர்ந்த சிலர் தன்னுடைய பெயருக்கு இழுக்கு ஏற்படும் வகையில் நடந்து கொண்டதாக குற்றஞ்சாட்டிய வாஸிம் அக்ரம், இப்போது அவர்களுடன் சமாதானம் செய்து கொண்டதாக அறிவித்துள்ளார்.

"நாங்கள் (பாகிஸ்தான்) எல்லாம் ஒரே அணியைச் சேர்ந்த நண்பர்கள். நாங்கள் ஒன்று சேர்ந்தால், உலகத்திலுள்ள எந்த அணியையும் வெல்லக் கூடிய ஆற்றல் எமக்குண்டு" என்றும் வாஸிம் கூறியுள்ளார்.

இங்கிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி மே 17-21 வரை லோர்ட்ஸிலும் இரண்டாவது டெஸ்ட் போட்டி மே 31-ஜுன் 04 வரை ஓல்ட் ட்ரஃபோர்ட்டிலும் நடைபெறுகின்றது. இவற்றைத் தொடர்ந்து முத்தரப்பு போட்டிகள் ஆரம்பமாகின்றன.

### இவர்தான் அவர்



கே.ஜே.ஜேசுதாஸ்

# சிந்தியா பதில்கள்

**வெற்றி எதில் இருக்கிறது?**

ஷகிலா வேலுப்பிள்ளை, நானு ஓயா.

இன்னொருவர் தோல்வியில்,

**அவசரத்தில் பேசி, நிதானத்திடம் வாங்கிக் கட்டிக் கொள்பவர்கள் பற்றி?**

ஐ.வதனா, வவுனியா.

நகரத்துக்கு வந்த கிராமத்தவன், தெருவில் பொமரேனியன் சடை நாயோடு ஒருவன் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தான். பஞ்சு மூட்டை போல பொசு பொசுவென்று மயிர்களால் சூழப்பட்டிருந்த அந்த நாயைப் பார்த்து ஆச்சரியப்பட்ட கிராமத்தவன், "அட இது என்ன, நாயா?" என்று கேட்டான். அவனைக் கிண்டல் பண்ண நினைத்த அந்த நகரத்துக்காரன், "ஆமாம், நாய்தான். ஆனால் இது ஒரு நாய்க்கும் கிராமத்தானுக்கும் பிறந்தது" என்றான். கிராமத்தவள் சட்டென்று, "அப்ப எங்கள் இரண்டு பேருக்குமே இது சொந்தம், அப்படித்தானே?" என்றான்.

**நல்ல நண்பர்களை எப்படித் தேடிக்கொள்வது?**

சி.இராசு, வவுனியா.

நல்ல நண்பனாக நடந்து கொள்வதன் மூலம்

**அரசியல்வாதியின் புன்னகைக்கும் நடிகையின் புன்னகைக்கும் வித்தியாசம் என்ன?**

எஸ்.வினோதினி, மொன்டிகிறிஸ்டோ.

இரண்டுமே நாம் மயங்குவதற்காகப் போலியாகச் செய்யப்படுபவைதான். நடிகையின் புன்னகை இரண்டரை மணி நேரத்திற்குப் பாதிக்கும். அரசியல் வாதியினது-ஐந்து வருடங்களுக்கு.

**ஒரு விதவைக்கு வாழ்வு கொடுக்கலாம் என்று எண்ணியுள்ளேன். உங்கள் அறிவுரை என்ன?**

சி.சிவகுமாரன், வட்டகொடை.

நல்லது, செய்யுங்கள். ஆனால் அதை ஏதோ தியாகம் செய்வதாக நினைத்துக் கொண்டு செய்யாதீர்கள். மற்றவர்களின் பாராட்டை எதிர்பார்த்தும் செய்யாதீர்கள். உங்களுடைய திருப்திக்காகவும் விருப்பத்திற்காகவும் அதைச் செய்யுங்கள். அப்போதுதான், சமூகமே எதிர்த்தாலும் உங்கள் சந்தோஷத்தை இழந்துவிட மாட்டீர்கள்.

**அண்மையில் இலங்கை வந்த ஆனந்தன் சிவமணி நம்நாட்டைச் சேர்ந்தவரா?**

தி.ஈழவேந்தன், மண்டானூர்.

இல்லை, அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்.



ஸ்நேகா

**அடுத்த நூற்றாண்டில் உலகம் அழிந்து விடுமா?**

எஸ்.கிறிஸ்டினா, வத்தளை.

சுற்றுப்புறச் சூழலை அழித்துவரும் வேகம், அணு ஆயுதப் பரிசோதனைகள், மதவெறி, இனவெறி, நிறவெறி வந்துவிட்டால் மனிதநேயத்தை மறந்துவிடும் மனிதர்கள், சொந்த நலனுக்கப்பால் எதையும் யோசிக்காதவர்களாக உலகமெங்கும் உள்ள அரசியல்வாதிகள், சக மனிதனைத் துன்புறுத்தும் வன்முறை உலகம். இதையெல்லாம் பார்க்கும்போது அடுத்த நூற்றாண்டு வரை தாங்குமா என்பதே சந்தேகமாக இருக்கிறது.

**இன்றைய நம் நிலைமைக்கு யார் காரணம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

சுப்பையா ஜெயலலிதா, கோணக்கலை.

சந்தேகமே இல்லை. எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு மௌனமாக இருக்கும் நாங்கள்தான்.

**சிந்தியா, கம்பன் விழா நடந்ததே, போனீர்களா?**

எஸ்.விஜயகுமாரி, கொழும்பு-06.

நான்காம் நாள் நடந்த வழக்காடு மன்றம் பார்த்தேன்; ஆயிரக் கணக்கான தமிழ் மக்களை ஓரிடத்தில் கூட்டி, இன்றைய பிரச்சனையை ஒட்டிய தலைப்பில் பேசி, அத்தனை மக்களினது கைதட்டல்களையும் பெற்றார்கள். மக்களை வெறும் உசார் மடையர்களாக்காமல் இப்படி நடப்பு விஷயங்களை சாடைமாடையாகப் பேச ஆரம்பித்தாலும் நல்லதுதானே என்று தோன்றியது.

**வந்திருக்கும் புது நடிகைகளில் யார் பிரகாசிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறீர்கள்?**

எம்.மபாஸா பானு, நிக்கவெவ.

ஸ்நேகா தாக்குப்பிடிப்பார் என்று தோன்றுகிறது. 'சுவாசம்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் பிரியங்கா, 'பத்ரி'யில் வந்த பூமிகா, 'சூரி' படத்தில் நடித்துவரும் மான்யா ஆகியோரில் ஒருவர் அடுத்த ஜோதிகாவாகக் கூடும் என்று கோடம்பாக்க வட்டாரம் சொல்கிறது. அதற்குள் லைலாவுக்கும் ஒரு ரவுண்ட் இப்பதாகத் தெரிகிறது.

**என் நண்பன் சொல்கிறான். தன் வயதோடு அறுபதைக் கூட்டி இரண்டால் வகுத்தால் சிந்தியாவின் வயது வருமாம். அது சரியா, சிந்தியா?**

எம்.சூரியகுமார், கொழும்பு-12.

குழந்தைகளிடம் நட்பாக இருப்பது நல்லதுதான். அதற்காக, இன்னும் பேசவே ஆரம்பிக்காத குழந்தை கணக்குச் சொல்லியது என்று ரீல் விடாதீர்கள்.

**'தென்றால்' எப்படி?**

வி.மங்கள கௌரி, மட்டக்களப்பு.

அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. ஏனைய தனியார் வானொலிகளையெல்லாம் கான மயில்களாக நினைத்து இவர்கள் மயங்குவதை நிறுத்திக் கொள்வது நல்லது. தப்பென்பது அல்ல. அவரவர் இயல்பை இழக்காதிருப்பதே பல சமயங்களில் அழகு அல்லவா!

# மன்னாதி மன்னன்

57

மந்திரிபட்டியின் மடியில் தலை வைத்து படுத்திருந்த மன்னர் விக்கிரமாதித்தன் பல பெண்களின் சிரிப்பொலி கேட்டு கண்திறந்து பார்த்தார். குளத்தில் அழகேயுருவான ஓரிள மங்கையும் அவளைச் சூழ்ந்து பேரழகிகளான அவள் தோழிகளும் குளத்தில் நீராடிக் கொண்டிருந்தனர். அன்றலர்ந்த செந்தாமரை மலர்கள் அந்தப் பொய்கையில் நிரம்ப மலர்ந்திருந்தமையினால் அம்மலர்களுக்கும் அழகிய பெண்களின் முகங்களுக்குமிடையே அதிக வித்தியாசம் தெரியவில்லை.

அந்த அழகிகளில் நடுநாயகமாகவிருந்த ஒருத்தியின் பார்வை விக்கிரமாதித்தன் மீதுபட்டது. அவளும் விக்கிரமாதித்தனின் பார்வையில் தெரிந்த ஆவலின் நிலையை உணர்ந்தவளாக நாணித் தலை குனிந்த வண்ணம் கரையேறினாள். நேராக மன்னன் விக்கிரமாதித்தனிடமே சென்று தன்னை ஒப்படைக்க அந்த அழகியின் ஆவல் உந்தித் தள்ளியதெனினும் அவளுடன் பிறந்த நாணம் குறுக்கிட்டுத் தடுத்தது.

இருப்பினும் எப்படியாவது அந்த ஆணழகனை அடைந்தேயாக வேண்டுமென்று திடசங்கற்பம் பூண்டார். அவள் நின்ற கலையிலேயே அவளருகில் பூத்துக் குலுங்கும் மல்லிகைச் செடியொன்று படர்ந்திருந்தது. தான் மனதால் வரித்துக் கொண்டவனை சைகைகளின் மூலம் தன் வசமாக்க எண்ணியவளாக மல்லிகை மலரொன்றை பறித்து எடுத்தாள். அதனை தன் மார்போடு அணைத்துக்கொண்டாள். பின்னர் அம்மலரை மேல் நோக்கி வீசியெறிந்தாள். குனிந்து மணலை குவித்து தன் தலையிலிருந்து ஒரு மயிரைப் பிடுங்கி அந்த மணற் குவியலில் செருகினாள். அருகே கிடந்த ஓர் ஓட்டுச் சில்லால் அந்த மணற் குவியலை மூடினாள். இத்தனையும் கனவேகத்தில் செய்து முடித்துவிட்டு விக்கிரமாதித்தனை தன் வலையில் வீழ்த்தும் நோக்கில் மோகப் பார்வையொன்றை வீசினாள்.

பின்னர் தோழிகளையும் அழைத்துக் கொண்டு தன் பல்லக்கில் ஏறி புறப்பட்டாள். அந்தப் பேரழகி போவதையே விக்கிரமாதித்தன் கண்சிமிட்டாமலேயே பார்த்துக் கொண்டிருந்தார்.

இவ்விருவருக்கும் இடையில் ஏற்பட்ட காதல் பார்வைகளையும் அந்த அழகியின் சமிக்ஞைகளையும் பட்டியும் பார்த்தவண்ணமிருந்தார். அழகி சென்று மறைந்ததும் விக்கிரமாதித்தன் பட்டியின் முகத்தைப் பார்த்து, 'அந்தப் பேரழகியின் சைகைகளிலிருந்து உனக்கு என்ன கருத்துத் தென்படுகிறது' என்று தன் பார்வையினால் வினவினார்.

தனது சகோதரனான மன்னன் விக்கிரமாதித்தரின் மனப்போக்கினை நன்குணர்ந்த பட்டி எழுந்து அந்தப் பெண் குவித்து வைத்திருந்த மண்ணையும் அதனை மூடி வைத்திருந்த ஓட்டுச் சில்லையும் மணலில் செருகியிருந்த அவளுடைய தலை முடியையும், அவளால் மேல்நோக்கி வீசியெறியப்பட்டு கீழே விழுந்துகிடந்த மல்லிகை மலரையும் எடுத்துக் கொண்டார். விக்கிரமாதித்தன் பட்டியைப்பார்த்து "பட்டி அந்தப் பெண் காட்டிய சமிக்ஞை பற்றி நான் ஒரு விதத்தில் புரிந்து கொண்டேன். இருப்பினும் என்னை விட நுண்ணறிவு படைத்த உம்மால் மேலும் விரிவாகச் சொல்ல முடியும். உம்முடைய கருத்தை உறுதியாகக்கூறும்" என்றார்.

"அண்ணா மிக்க குறுகிய காலத்துள் அந்தப் பெண் தன்னுடைய வரலாறையும் தன்னுடைய எண்ணத்தையும் கனகச்சிதமாக தெரிவித்திருக்கிறாள். மல்லிகை மலரை அந்தப் பெண் கையிலெடுத்திருந்தமையினால் அவளுடைய ஊர் அடுத்திருக்கும் மல்லிகாபுரம்-அம்மலரை விண்ணை நோக்கி எறிந்தமையினால் விண்ணகத்தில் வாழும் அமரர்களுடன் தன்னைத் தொடர்பு படுத்தியிருக்கிறாள்-எனவே அவள் பெயர் அமராவதியாகும். மணற் குவியலின் மீது தனது மயிரைச் செருகியதனால் அவள் தந்தையின் பெயர் மயிர்மாணிக்கம். ஓட்டுச் சில்லை எடுத்து மணலை மூடியதினால் ஊருக்குள் அவளுடைய இல்லம் மட்டும் ஓட்டினால் வேய்ந்த மாளிகை போன்றிருக்கும். இத்தகைய அடையாளங்களை எல்லாம் காட்டிய பின், அவள் பல்லக்கில் ஏறிய போதும், போகும் போதும் அவள் வீசிய கடைக்கண் பார்வையிலிருந்து கூடிய விரைவில் தன்னிடம் வரவும் என்றுணர்த்தியிருக்கிறாள்."

பட்டி இவ்வாறு அந்த அழகியின் சமிக்ஞைகளுக்கான பொருளை விளக்கிக் கூறியதும் விக்கிரமாதித்தன் மகிழ்ச்சிப் பெருக்கால் மந்திரி பட்டியை கட்டிப் பிடித்துக் கொண்டார்.

## அமராவதி காட்டிய சமிக்ஞைகள்!

"தம்பி பட்டி நான் அந்த பெண்ணினுடைய சமிக்ஞைகளைப் பார்த்து விளங்கிக் கொண்ட அதே கருத்தினையே நீரும் எடுத்துரைத்தீர். சரி பெண்ணின் அழைப்பை ஏற்று நாம் போவோம் வாரும்!" என்று கூறினார். இருவருமாக மல்லிகாபுரத்தை அடைந்தனர்.

ஊரை அண்மித்ததும் வேதாளத்தை அழைத்து இருவரும் அணிந்திருந்த உடைகளை களைந்து அந்த வேதாளத்திடம் கொடுத்து விட்டு, இருவரும் பிராமணர்கள் போல் வேடமிட்டுக் கொண்டு கடைவீதியால் சென்றனர். அங்கு இருந்த கடைகளில் பெரியதாகவும் வசதியாகவுமிருந்த கடையே மயிர்மாணிக்கம் செட்டியுடையது என்பதைக் கண்டு கொண்டார்.


மயிர் மாணிக்கம் செட்டி இயல்பாகவே பிராமணர்களிடம் மரியாதையும் அன்பும் கொண்டவர். பிராமண வேடத்துடன் தன்னிடம் வந்த விக்கிரமாதித்தனையும் பட்டியையும் தன் கடைக்குள் அழைத்து அன்புடன் விசாரித்தார்.

இவர்களிருவரும் களைப்பும் கவலையும் கொண்டவர்களை போல் காட்சியளித்தனர். பின்னர் அவர்களுடைய ஊர், அங்கு வருவதற்கான காரணம் என்ன என்பவற்றையெல்லாம் விசாரித்தறிந்தார்.

விக்கிரமாதித்தன் மயிர்மாணிக்கம் செட்டியாரிடம் தாங்கள் அங்கு வந்ததற்கான காரணத்தை இவ்வாறு கூறினார்.

"ஐயா நாங்கள் எங்கள் குடும்பத்தாருடன் தீர்த்தயாத்திரை புறப்பட்டு வந்தோம். குடும்பத்தாருடன் கங்கையில் நீராடினோம். அத்தருணத்தில் அங்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு வந்து நீராடினர். தீர்த்தம் ஆடிவிட்டு நாங்களிருவரும் கரையேறினோம். ஆனால் எங்களுடன் வந்திருந்த எங்கள் குடும்பத்தவர் எவரையும் தீர்த்தம் ஆடிய பின்னர் அங்கு காண முடியவில்லை. அவர்கள் என்ன ஆனார்கள் என்றும் தெரியவில்லை. மூன்று நாட்கள்வரை கங்கைக் கரையிலே நின்று தேடினோம். எப்பவும் கிடைக்கவில்லை. இம் மூன்று நாட்களும் நாங்கள் பசியாறவுமில்லை. துயில் கொள்ளவுமில்லை. இப்பொழுது பெருங் கவலையாகவிருந்தபோதும் பசிதாங்க முடியவில்லை. இந்த ஊரில் வந்து விசாரித்ததில் தங்களைப் பற்றி மக்கள் மிகவும் சிறப்பாகக் கூறினார்கள். ஆகவே தங்களிடம் வந்தோம்"

விக்கிரமாதித்தனின் இந்தச் சிறப்பான வார்த்தைகளைக் கேட்ட மயிர்மாணிக்கம் செட்டி பெருமகிழ்ச்சியடைந்து, "உங்களைப் போன்ற பெரியவர்களை அழைத்து உபசரிப்பதில் எனக்கு பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது. முதலில் நீங்களிருவரும் உணவு உட்கொள்ள வேண்டுமல்லவா. ஆகவே உங்களை எனதில்லத்திற்கு அனுப்பி வைக்கிறேன். அங்கு சென்று உணவருந்த ஏற்பாடு செய்யுங்கள். மட்டுமுள்ள காரியங்களை பின்னர் பேசிக் கொள்ளலாம்" என்று கூறி, கடைச்சிப்பந்திகளில் ஒருவரை இரு பிராமணர்களுடனும் அனுப்பி வைத்தார்.



அங்கு மயிர்மாணிக்கம் செட்டியாரின் மனைவியும், அமராவதியும் வேறு சில பெண்களும் வரவேற்றனர்.

கடைச்சிப்பந்தியிடம் செட்டியார் கூறியனுப்பிய படி, இருவரும் அங்கு சென்றதும் அவர்களுக்கு அரிசி, பருப்பு, காய்கறி முதலானவற்றையும் சில பாத்திரங்களையும் செட்டியாரின் மனைவி அவர்களுக்கு கொடுத்தார்.

அமராவதி விக்கிரமாதித்தனின் முகத்தைக் கண்டதும் அவர் தன்னுடைய காதலன் தான் என்பதை அறிந்து கொண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தாள்.

அவர்களிடம் கொடுக்கப்பட்ட காய்கறிகளுடன் அமராவதி இரு கரும்புத் துண்டுகளையும் கொண்டு வந்து வைத்தாள். அப்போது விக்கிரமாதித்தனைப் பார்த்து கண்களால் ஜாடை காட்டினாள்.

செட்டியார் மனைவி, மகள் மற்றும் வேலைக்கார பெண்கள் ஆகியோர் அப்புறம் சென்றதும் காய்கறிகளுடன் கரும்புத் துண்டிருப்பதைக் கண்டதும் வியப்படைந்த விக்கிரமாதித்தனுக்கு, கரும்புத் துண்டின் மூலம் அமராவதி தெரிவித்த கருத்தை ஆராய்ந்தார்.

(மன்னன் வருவான்...)

இராஜகுமாரன்

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

**சத்தியக் கடதாசி:**

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:.............. பெயர்:.................... ஒப்பம்:..................



**நோட்டீஸ் பலகை**

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

-காதில பூ கந்தசாமி

**அபிமான வாசகர் போட்டியில் நான்காவது :** ஒரு பொய்யை மெய்யாக்க சிறந்த வழியென்ன? ஒரே வசனத்தில் ஆலோசனை கூறுக. முடிவுத் திகதி மே 30. பெறுபேறுகள் ஜுலை முதல் வாரத்தில்.

தமிழ் கூறும் நல்லுலகுக்கு வணக்கம். காதில பூ வைக்கிற வேலை இப்ப உலக மட்டத்தில நல்லா முன்னேறி வாறதக் கண்டு மிக்க மகிழ்ச்சி. என்னத்தைச் சொல்லுறனெண்டு நீங்கள் ரொம்ப சஸ்பென்ஸில இருப்பியள். உலகெங்கும் பரவியிருக்கிற எங்கட தமிழ்ச் சனம் கொண்டாடற கொண்டாட்டங்களப் பாக்கக்கத்தான் நான் இப்பிடி உச்சி குளிர்ந்துபோனன் பாருங்கோ.

கிட்டடியில ஒரு வீடியோ கசெட் பார்த்தன். உண்மையில பாருங்கோ, அத நான் ஒரு சினிமாப் படமாக்குமெண்டுதான் முதலில நினைச்சன். அந்த மாதிரி விழா. ஒரு பெரிய ஹோலெடுத்து, காஸ் பலூன்கள காத்தில பறக்கவிட்டு, கிறான்டா ஒரு ரெடிமேட் மணவறையை செட்டப் பண்ணி, ஆளளவு உயரக் குத்துவிளக்குகள் வாசலில இருந்து மணவறைவரை நிரைக்கு வைச்சு.. அது பெரும் எடுப்புப் பாருங்கோ.

வெளிநாட்டுப் பெட்டையலெல்லாம் ஏதோ ஒரு யூனிபோர்ம் போல ஒரேமாதிரி உடுப்பு உடுத்து கையில தட்டேந்தி, விளக்கேந்தி, வேற என்னென்னமோ எல்லாம் ஏந்திக்கொண்டு வரிசை வரிசையா வருகினம். பிறகு ஏதோ ஒரு டான்ஸ் நடத்துமாப் போல வேற வேற பற்றேனில மாறி மாறி நிக்கினம். மத்தாப்பூ வாணம்போல எதுகளையோ கொழுத்திக்கொண்டு வலம் வருகினம். மற்றப்பக்கத்தில ஒரு நிரைச்சுக்கு சாப்பாடு வைச்சுக் கிடக்குது. இடையில ஒரு எனவுன்மன்ட் வேற. "பருப்பு, ரசம், பப்படம், வடை, கத்தரிக்காப்பொரியல்.." எண்டு சாப்பாட்டு அயிட்டங்களை பட்டியல் போட்டு எனவுன்ஸ் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். யாருக்கு எங்கட தமிழ்கூறும் நல்லுலகம் இந்தப் பெருவிழா எடுக்குதெண்டு பாத்தால் அது பாருங்கோ, எங்கட தமிழ்ப் பொடிச்சி ஒருத்திக்குத்தான் உந்த விழா.

என்னடாப்பா, எங்கட ஆக்கள் அங்கபோய் அப்பிடி என்ன அளப்பெரும் சாதனையை நிலைநாட்டிப் போட்டினமெண்டறிய எனக்கும் வலு ஆர்வமாத்தான் இருந்தது. விஷயத்தத் தெரிஞ்சு கொண்டப்பிறகுதான் அழுகிறதா சிரிக்கிறதா எண்டு தெரியேல்ல பாருங்கோ.

அதாவது எங்கட பொடிச்சி செய்த சாதனையென்னவென்டால் கண்டியலோ, அங்கபோய் பெரிய பிள்ளையாகியிருக்கிறாவாம். விளங்கேல்லையே, சாமத்தியப் பட்டிருக்கிறாவாம். அதுக்குத்தான் உந்தக் கோலாகலமான விழா எடுப்பு. பொடிச்சி பாவம். அது சாமத்தியப்படுறது நல்லதுதான். பருவம் வந்தால் நடக்கிறதுதானே.

ஆனால் அதுக்குப்போய் உந்தப் பெரிய விழா எடுத்து சினிமாப் பாணியில வீடியோ பண்ணிப் பகட்டக்காட்டிற பெற்றோரிண்ட மதி எங்க போய்க் கிடக்குதெண்டுதான் தெரியேல்லை. நாட்டில குழப்பம், தங்களுக்கு உயிராபத்தெண்டு சொல்லி அகதியா அடைக்கலம் கேட்டு வெளிநாடுகளுக்குப் போனவை, இன்னும் நாட்டில தங்கட சனம் யுத்தத்துக்குள்ள அம்பிட்டு வீடுவாசல் இடிஞ்சு இடம்பெயர்ந்து வாழ வழியில்லாமல் அகதி முகாம்களில அல்லோல கல்லோலப் பட்டபடியிருக்க, இவயள் ஏதோ சொர்க்கபோகம் கிடைச்சவையள் மாதிரி இப்பிடிச் ஷோக் காட்டுறதுக்கு எப்படி மனசுவருதெண்டதுதான் தெரியேல்ல.

ஆனால் கண்டியலோ, அங்க போனவை எல்லாரும் பெரும் செல்வச் சீமானா வாழினமெண்டில்லைப் பாருங்கோ. கன பெடியல், ரெண்டு வேலை, மூண்டுவேலையெண்டு ராப்பகலா ஒடிஞ்சு பெரும் கஷ்டப்பட்டுச் சம்பாதிச்சுத்தான் தங்கட சீவியத்த ஒட்டிக்கொண்டு இங்க நாட்டில இருக்கிறவைக்கும் காசனுப்பி வைக்கினம்.

இதுக்கிடையில அங்கயிருக்கிற எங்கட சிலதுகள் தாங்கள் ஏதோ காசு மெத்திப் போய் எப்பிடிச் செலவழிச்சுத் தள்ளிறதெண்டு தெரியாமல் நிக்கிறதாத் தம்பட்டமடிக்க வேணுமெண்டு துடியாத் துடிக்கினம். வெள்ளைக்காரனுக்கே விலாசம் காட்ட வேணுமெண்டு நிக்குது கோஷ்டி. இந்த ஆடம்பரங்களுக்கெல்லாம் சப்ளை செய்யிறதுக்கெண்டே அங்கு கடைகளும் கனக்க முளைச்சிருக்கு.

தமிழ்ப் பாரம்பரியங்களக் காப்பாத்திறதா சொல்லிக்கொண்டு தங்கட பகட்டை வெளிக்காட்ட நடத்திற நாடகங்களை வீடியோ பண்ணி இங்க இருக்கிறவைக்கு அனுப்பி வைக்கினம். 'பாருங்கோடா எங்கட விறுத்தத்தை' எண்ட கணக்கா. உண்மையில சொல்லப்போனா இப்ப உந்தச் சடங்குகளை (அதச் சடங்கெண்டு சொல்ல ஏலாது. அதுக்குப் பல் மடங்கு பெரிய சொல்லத்தான் தேடிப் பிடிக்க வேணும். சடங்கெண்ட பெயரில நடக்குறதுகளை.) நடத்திக் குடுக்கிறது ஐயரோ, வீட்டுக்காரரோ இல்லை பாருங்கோ. வீடியோக்காரர்தான். இப்ப கலியாணவீடோ, சாமத்தியச் சடங்கோ, பேத்டே பாட்டியோ... எல்லாத்தையும் நடத்தி முடிக்கிறவையா இருக்கினம்.

அதில பாருங்கோ, சடங்கு எங்கேயோ நடக்கும், பிறகு பாத்தா வீடியோவில பொம்பிளையும் மாப்பிளையும் வானத்தில் மிதந்து, நயகரா நீர்வீழ்ச்சியில குளிச்சு, அப்பிடியே உங்கால இந்தியாப் பக்கம்போய் தாஜ்மகாலில ஒரு வோக்கிங் போய், சிலவேளை சீனப் பெருமதிலாலையும் விழுந்தெழும்பி வருவினம். போகிற போக்கில உவையிண்ட கலியாணவீட்டுக்கு, சார்ள்ஸ் இளவரசரும், புஷ்ஷும் வந்து பூத்தூவி வாழ்த்துறதா படமெடுத்துக் காட்டினாலும் அதிசயப்படுறதுக்கில்லை.

அற்பனுக்குப் பவுசுவந்தால் அர்த்த ராத்திரியிலயும் குடைபிடிப்பானென்டு ஊரில சொல்லுவினம். அகதியாப் போனமாம், அமைதியா வாழ்ந்தமாமெண்டில்லாமல், ஏன்தான் எங்கட சனத்துக்கு இப்பிடியெல்லாம் புத்திபோகுதோ தெரியேல்ல. சந்தனம் மிஞ்சினால்... எங்க பூசிறதெண்டுதான் எங்கட தமிழ்ப் பெருங் குடிமக்களுக்குத் தெரியேல்லை.


ஐயா, கொஞ்சம் அடக்கமா வாசியுங்கோவெண்டு வேண்டி விடைபெறுகிறேன்-

கா.பூ.க.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**




# மூங்கில் கோட்டை






▶ எமது நாடுகளில் பனை மரங்களும், தென்னை மரங்களும் பெரும் பயனை அளித்து வருகின்றன. இவ்விரு தாவரங்களில் எந்தப்பகுதிகளும் பாவனைக்கு உதவாதவை என்று கழிக்கப் படாதவை. ஒவ்வொரு பாகமும் ஏதோ ஒரு வகையில் மனிதனுடைய உபயோகத்துக்கு உகந்தவை.


தூர கிழக்கு நாடுகளில் மூங்கில், மேற் கூறப்பட்ட இரு தாவரங்களைப் போலவே சகல பாகங்களும் மனிதரால் பயன் படுத்தப்படுகின்றன. ஆனால் இதில் உணவாகப் பயன்படுத்துவதற்கு எதுவுமில்லை என்பது ஒரு குறைதான்.

மூங்கில் மிக வேகமாக வளரக்கூடிய ஒரு மரம். நெடிதுயர்ந்து வளர்ந்தாலும், வளைந்து கொடுக்கக் கூடிய இம்மரம் மிக உறுதியானதும் கூட. கட்டடங்கள் கட்டப்படும்போது மூங்கில் தடிகள் வெகுவாகப் பயன் படுத்தப்படுகின்றன. பொதுவாக சாரம் அமைப்பதற்கும் ஏணிகள் செய்வதற்கும் மூங்கில் தடிகளே உபயோகிக்கப்படுகின்றன. இத் தடிகள் பாரத்தையும் தாங்கக்கூடியவை. நீண்டகாலம் பழுதுபடாமல் இருக்கக் கூடியவை.

தூர கிழக்கு நாடுகளில் மூங்கில் தடிகளை வெட்டிப்பிளந்து வீடுகளை அமைக்கிறார்கள். கோடுகள் போன்ற வீட்டின் கூரைகளும் மூங்கிலாலேயே அமைக்கப்படுகின்றன.

மூங்கிலைக்கொண்டு பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் சீனாவின் யாங்ஸ்கியாங் நதியின் கரையோரத்தின் முற்று முழுதாக மூங்கிலால் அமைக்கப்பட்ட ஒரு கோட்டையினை படத்தில் காண்கிறீர்கள். காலத்தால் அழியாத இந்த மூங்கில் கோட்டை யாங்ஸ்கியாங் நதி பெருக்கெடுத்து பாய்வதால் இக்கோட்டையும் விரைவில் நீரினுள் மூழ்கடிக்கப்பட வேண்டிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ■


# அதிக விலை



▶ உலகிலேயே மிகவும் விலையுயர்ந்த தனது திருமண ஆடையை அணிந்திருப்பவர் இத்தாலியைச் சேர்ந்த அழகி சபரினா பட்டகளினி.

இந்த ஆடையின் பெறுமதி 60 இலட்சம் அமெரிக்க டொலர்கள் (சுமார் 54 கோடி ரூபாய்கள்)

இந்த அதிக விலை ஆடையில் அலக்ஸ்சான்ட்ரா ரோசா என்பவர் விலையுயர்ந்த இரத்தினக் கற்களைப் பதிப்பித்துள்ளார். இந்தக் கற்களின் விலை மட்டும் 73 இலட்சம் (சுமார் 65 கோடியே 70 இலட்சம் ரூபாய்) டொலராகும். எனவே இந்த ஆடையின் மொத்தப் பெறுமதி 133 இலட்சம் டொலராகியுள்ளது. அதாவது நமநாட்டு மதிப்பில் சுமார் 119 கோடியே 70 இலட்சம் ரூபாய்களை. ●



# அசைவக் கொக்கு

▼ கொக்கு இனத்தைச் சேர்ந்ததுதான் ஃபிளேமிங்கோ. கொக்குகளைப் போன்ற நீண்ட குச்சிக் கால்களைக் கொண்ட ஃபிளேமிங்கோவும் அசைவக் கொக்குதான்.

இளஞ்சிவப்பும் வெளுப்புமான நிறத்தைக் கொண்ட இவை வானத்தில் பறக்கும்போது நெருப்புப் போன்று காணப்படுவதால், தான் இதற்கு ஃபிளேமிங்கோ என்ற பெயர் வந்தது.

ஃபிளாமா என்ற இலத்தீன் சொல்லில் இருந்து வந்ததுதான் ஃபிளேமிங்கோ என்ற பெயர். ஃபிளாமா என்றால் தமிழில் நெருப்பு என்று அர்த்தம்.

நீண்ட கால்களையுடைய இப்பறவையின் கால்கள் 6 அடி நீளம் வரை இருக்கும். தென் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் சில ஆசிய நாடுகளில் இப்பறவைகள் அதிகமாக வாழ்கின்றன.



## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி. கயோனா (Kayona) 16.05.2001

யோகேஸ்வரன்-கலைமரசி தம்பதிகளின் அருந்தவப் புதல்வி கயோனா தனது முதலாவது பிறந்ததினத்தை ஜேர்மனியில் அப்பா, அம்மா, மாமாமார், பெரியப்பாமார், சித்தப்பாமார், அத்தான்மார் மற்றும் உறவினர்களுடன் கொண்டாடுகிறார். இவரை இலங்கையிலுள்ள அன்புத்தாத்தா, அப்பம்மா அர்ச்சிபெரியம்மா குடும்பம், அப்பச்சித்தி, பெரியக்கா மற்றும் பாட்டுபெரியப்பா குடும்பம், பெரியமாமி குடும்பம், மகேஸ்பெரியப்பா குடும்பம், சந்திராமாமி குடும்பம், ஜெயசீலப்பெரியப்பா குடும்பம், கசீனாமாமி குடும்பம், விஜயக்கா மற்றும் அன்னமாமா, அக்காமார், மச்சான்மார் அனைத்து உறவினர்களும் கலகலப்புடன் கயோனா குட்டி சகல கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள். சிறப்பாக சின்னராசா தாத்தா அன்புப்பேத்திப்பிள்ளையை

அன்புடன் வாழ்த்துகிறார். வாழ்க வளமுடன்.

தகவல்: ரீ.சின்னராசா, கொழும்பு.



இப்பத்திரிகை கொழும்பு 04, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 18ஆம் இலக்கத்தில் ... அச்சகத்தில் ... அச்சிட்டு வெளியிடப்படுகிறது.